REGD. No 1506
ASOKA
அசோகா
சுகந்த பாக்குத்தூள்
எம். கே. கிருஷ்ண செட்டி அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

நாகரீகமுள்ள
ஆடைகளுக்கு
16 NOV 1945
MADRAS
S.R.B. குப்புசாமி அய்யர் & ஸன்
FORMERLY
S.R. பாலுசாமி அய்யர்
& ஸன்ஸ்
83, நைனியப்பநாயக்கன் தெரு
(போன் 3506) P.T. மதறஸ்,
230, கீழமாரெட் வீதி,
(போன் 36) மதுரை.

எதிர்பாராத் தீவிபத்துகளினால்
எத்தனையோ நஷ்டங்கள்!

அவற்றிற்கெல்லாம்
ஈடு கொடுப்பதே
எங்கள் அரிய சேவை!

விவரங்களுக்கு எழுதுங்கள் :-

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)
தலைமை ஆபீஸ்: மதுரை

கிளை ஆபீஸ்கள்:
பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹாரன்பி ரோடு
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட் எட்வர்ட்ஸ் ரோடு

தீவிபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்
மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000-க்கு மேல்

பிரதம ஏஜண்டுகள்:
ஏ. & எப். ஹார்வி லிமிடெட், மதுரை etc.

கோடை காலத்திற்குத் தகுந்த குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம்
டி.எஸ்.ஆர்.
கம்பெனியின்

குங்குமப்பூ
நன்னாரி, ரோஸ், ஆரஞ்சு
முதலிய சர்பத்துகள்

சென்னை ஏஜண்டுகள்:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி

கோவை ஸ்டாக்கிஸ்ட்:
B. பால பட்டாபி
வைசியர் தெரு :: கோவை



ஹிமாலயத்தில் - தேநீர் அருந்தும் நேரம்

இந்தியாவின் வடக்கே ஓர் பெரிய சுவர்போலப் படர்ந்திருக்கும் ஹிமாலய மலையில் உள்ள பள்ளத்தாக்குகளும், பீடபூமிகளும் நூற்றுக்கணக்கான மைல்கள் நீளமுள்ள ரஸ்தாக்களால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. சுமை சுமக்கும் கோவேறு கழுதைகளின் இடையறாத போக்குவரத்துக்களினால் தான், இங்கே உள்ளவர்கள் வாழ முடிகிறது. இதனால் தான், இங்கே உண்டாகும் பழங்களும், கம்பளங்களும் மத்தியப் பிரதேசங்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

ரஸ்தாக்களில் செல்பவனுக்கோ, கோடைக் காலங்களில் நாவறண்டு போகிறது; குளிர் காலங்களில், குளிர் மிகுதியால் உடல் நடுங்குகிறது. இந்தப் பிரயாணிக்கு இந்தப் பிரதேசங்களில் அமிர்தம்போல் உதவி அவன் பிரயாணத்தை எளிதாக்கி அவனுக்கு உத்சாகத்தையும் கொடுப்பது எது தெரியுமா? தேநீர் தான்.

இந்த மலைப் பிரதேசங்களில் உள்ள ஜனங்கள், பால் சீனியுடன் கலந்த தேநீரையே அருந்துகிறார்கள். மேலும் ஹிமாலயப் பிரதேசங்களில் அநேகமாய் வெள்ளிப் பூச்சுப் பூசின நீளமான காம்பு உள்ள மரக் கோப்பைகளே தேநீர் அருந்த உபயோகிக்கப்படுகின்றன. எனினும், மற்றப் பிரதேசங்களில் சைனாக் கோப்பைகளோ, அல்லது பித்தளைப் பாத்திரங்களோ உபயோகத்தில் இருக்கின்றன.

இம்மலைப் பிரதேசங்கள் முழுவதிலும், இந்தியாவின் நாட்டுப் பிரதேசங்களிலிருப்பதுபோலவே, புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை மிகுந்த கியாதியுடன் வியாபித்து இருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

மந்திர ஜமக்காளம் அல்ல

அதிசயங்கள் நிகழும் காலம் கடந்துவிட்டது. நினைத்த மாத்திரத்தில் காரியங்கள் நடந்துவிடுவதில்லை. அவைகளுக்காக மாதங்கள் — வருஷங்களுக்கு முன்பே திட்டம் போட்டாக வேண்டும். பெண்ணுக்குச் சீர், பிள்ளை படிப்புக்கு — ஒரு வேளை வெளிநாட்டுக் கல்விக்காக நிதி, அல்லது வயோதிக காலத்தில் பென்ஷன், இவ்விஷயங்களில் இப்பொழுதே உங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும். உங்கள் தேவைகளைப்பற்றி எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் திட்டம் தயாரித்துத் தருகிறோம்.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
தலைமை ஆபீஸ்: 120, அரமனைகாரன் தெரு, ஜி.டி. சென்னை

தமிழ் நாட்டில் கிளை ஆபீஸ்கள் :— சிதம்பரம், மதுரை, சேலம், திருச்சி, வேலூர், காரைக்குடி, நாகப்பட்டணம், கோயமுத்தூர்.

பார்த்திப
மலர் 12

சக்தி

ஆவணி
இதழ் 5

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

தேர்தல் போதுமா?

யுத்தம் முடிந்துவிட்டது; வெற்றி கொண்டாடியாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாக ஜப்பானும் சரணுகதி யடைந்து வருகிறது. யுத்தம் முடிவடைந்த ஒரே வருஷத்தில், இந்தியாவில் பரிபூரண சுயராஜ்யம் நிறுவப்படும் என்று, பழைய பிரிட்டிஷ் சர்க்காரே வாக்களித்து வந்திருக்கிறது. அந்தச் சர்க்காரின் முன்னேற்றமான கொள்கைகளுக்கெல்லாம், தற்போதைய ஆட்சி சர்க்காரின் தொழிற்கட்சியும் பொறுப் புள்ளதே யாகும். இதுவும் அதில் பங்கு கொண்டிருந்ததால், அந்தப் பொறுப்பு. அதோடு, அந்தக் கன்ஸெர்வடிவ்களின் கொள்கைகளினும் அதிகமாய் இந்தியப்பிரச்னையில் அதி தீவிரம் காட்டியும் வந்தவர்கள் தொழிற்கட்சியார். ஆகையால், பிரிட்டனின் மற்ற எந்தக் கட்சியாரையும்விட, அதிக துரிதமாய் இந்திய விடுதலைக்கு வசதி புரிய வேண்டியவர்கள் தொழிற் கட்சியார்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியாரின் வெற்றி, பிரிட்டனில் மகத்தான 'மனோபாவப் புரட்சி' ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவது உண்மை. மனோபாவப் புரட்சி, கருத் தரிப்பதற்கே சமம். அது காரியப் புரட்சியாய் மாறுவதிலேதான், அளவற்ற சிருஷ்டி வேதனை உண்டாகும். தொழிற் கட்சியை முன்னேக்கி நிற்கும் வேலை மகத்தானது. அதை நிறைவேற்றத் துணிவும் திடமும் அதற்கு வேண்டும்.

ஆரம்பம் கோணினல், முடிவு கோணிவிடும். ஆனல், ஆரம்பமே முடிவாகி விடாது. தொழிற் கட்சியார், இந்தியப் பிரச்னையில் ஓர் ஆரம்பம்செய்திருக்கிருர்கள். காங்கிரஸ் மீதுள்ள தடைகள் நீங்கி விட்டன. இந்தியா வெங்கும் தேர்தல் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. வைசிராய் வேவல், மீண்டும் லண்டன் போய்ச் சேர்ந்திருக்கிருர். இவையெல்லாம், தொழிற்கட்சியார் துரிதமாய்ச் செயல் புரிய முயல்கிருர்கள் என்பதன் அடையாளங்கள்தான்; அதில் ஐயமில்லை. ஆனல், நாம் இவற்றில் எல்லாம் ஆனந்தப்பட முடியாது. இவையெல்லாம் வெறும் ஆரம்ப சூரத்தனமாய்ப் போய்விடவும் கூடும்.

'ஆஹா! கிரிப்ஸ் வந்து விட்டார்' என்று ஆனந்தம்; 'சிம்லாப் பேச்சுத் தொடங்கி விட்டது!' என்று ஆனந்தம்; 'காந்தியும் ஜின்னுவும் பேசுகிருர்கள்' என்று ஆனந்தம்; 'தேர்தல் வருகிறது' என்று ஆனந்தம்; 'சட்டசபை கூடுகிறது' என்று ஆனந்தம் - இப்படி யெல்லாம்

அற்ப சந்தோஷம் அடைந்து கொண்டிருக்க, இனி நம்மால் முடியாது. இந்தியா என்று விடுதலை யடைகிறதோ அன்றுதான் நமக்கு உண்மையான ஆனந்தம் உண்டாகமுடியும். அதுவரையில், ஏக்கம், ஆத்திரம், கவலை, வெறி இவைதான் நமக்கு இருக்க முடியும். இந்தியா பந்த மற்று விடுதலை யடையவேண்டும்; அதுவும் நம் காலத்திலேயே அடைய வேண்டும்; இன்றே அடையவேண்டும்- இந்த ஆசையே இன்று எண்ணற்ற இந்தியமக்களின் உள்ளத்தில் குடி கொண்டிருக்கிறது. அது உள்ளே கனிந்து குமுறும் எரிமலைக்கு ஒப்பாகும். அவர்களுக்குப் பொறுமை உபதேசம் செய்து பயனில்லை. அவர்களுடைய பொறுமையை எவ்வளவு சோதிக்க வேண்டுமோ அவ்வளவும் சோதித்தாயிற்று. இனியும் சோதிப்பது அபாயமாகும்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியார், இந்தியப் பிரச்னையிலே கவனம் செலுத்துகிறார்கள். அவர்களுக்கு முன்னே ஏற்கெனவே எத்தனையோ பேரும் அதில் கவனம் செலுத்தத் தான் செலுத்தினார்கள். அது மாதிரியே இதுவும் போய்விடக் கூடாது என்றால், மற்றவர் செய்த தவறுகளையே இவர்களும் செய்யக்கூடாது. முந்தி நடந்த தவறுகள் என்ன?

எது முக்கியப் பிரச்னை என்பதை மூடி மறைத்துவிட்டு, சில்லறைப் பிரச்னைகளை யெல்லாம் முன்னே போட்டுக் குட்டை குழப்பியதுதான் முந்திச் செய்தவர்களின் தவறு. இந்திய சுதந்தரம்தான் முக்கியப் பிரச்னை. மற்ற அனைத்தும், அதற்குள் அடக்கமாகும். எது எப்படிப் போனாலும், இந்திய சுதந்தரத்தை உடனே ஸ்தாபிப்பது நிச்சயம் என்ற அடிப்படையான, தீர்மானத்தின் மேலே தான் மற்றப் பிரச்னைகளை யெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும். மற்ற எந்தப் பிரச்னைக்கு உடனே பரிகாரம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சரி, இந்திய சுதந்தரப் பிரச்னைக்கு, உடனே பரிகாரம் கிடைத்தாக வேண்டும். இதற்கு, வரப்போகும் பொதுத் தேர்தல்கள் போதுமா?

பழைய மாகாணச் சுய ஆட்சியை மீண்டும் அமைப்பதற்காக மட்டுமே அந்தத் தேர்தல்கள் நடப்பதானால், அது இனிப் போதாது. சுதந்தரப் பிரச்னைக்குப் பரிகாரங் காண்பதற்கான பிற ஏற்பாடுகளும் கூடவே செய்யப்பட வேண்டும். பொதுத் தேர்தல்களையும் அதற்கு ஒரு சாதனமாய்க் கொள்வதே மேலாகும். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில், ஏராளமான மக்களுக்கு ஓட்டுரிமை யளித்துப் பொதுத்தேர்தல்கள் நடத்துவது, பிரம்மாண்டமான காரியமாகும். அதை அடுத்தடுத்து நடத்திக் கொண்டிருப்பது வீண் கஷ்டங்களுக்கு இடம் தரும். ஆகையால், இந்தப் பொதுத் தேர்தல்களையே அரசியல் நிர்ணய சபை அமைக்கவும் பயன்படுத்திக் கொள்ள வழி கோலலாம். இம்மாதிரி ஏற்பாடுகள் சிலவற்றையும், பிரிட்டிஷ் சர்க்கார் கூடவே செய்வார்களா? இம்மாதிரி எதுவும் செய்யவில்லை யானால், பத்து வருஷத்துக்கு முந்திய நிலையிலேயே இந்திய அரசியல் பிரச்னையைக் கிடத்துவதற்குத்தான் ஒப்பாகும். பொதுத் தேர்தல்கள் ஒன்றைக் கொண்டு மாத்திரம், நாம் களிபேருவகை கொண்டுவிட முடியாது.

*

காலச்சுழல்

வேலை தொடங்கி விட்டார்கள்: பிரிட்டனில் ஒரு பொதுத் தேர்தல் நடந்து, புதிய மந்திரி சபை அமைந்தால், அந்த மந்திரி சபையின் வேலைத் திட்டங்களை உள்ளடக்கி, பார்லிமெண்டுக்கு மன்னர் ஒரு பிரசங்கம் செய்வார். பார்லிமெண்டில், அந்த வேலைத் திட்டங்கள்தான் முதலில் கவனிக்கப்படும். பிற கட்சியாரின் மசோதாக்கள் முதலியன பின்னல் போய்விடும். இது வழக்கம். இவ்விதமாக, பிரிட்டிஷ் மன்னர் இப்போது செய்த முதல் பிரசங்கத்தை, 'ஹிந்து'வில் காமன்ஸ் தொழிற்கட்சி மெம்பர் ஐஸாக் புட் என்பவர் வர்ணிக்கிறார்: "இங்கிலாந்து பாங்கியை ராஜாங்கத்துக்குச் சொந்தமாக்கப் போகிறோம் என்று மன்னர் பிரான் செய்த அறிக்கையை, பேரன் மாண்டேகு நார்மனும் (பாங்கியின் மாஜி கவர்னர்), அவருடைய தோழர்களும் காதால் கேட்டார்கள். அடுத்த வினடியில், அதே வாயால், நிலக்கரிச் சுரங்கச் சொந்தக்காரர்கள், தங்களுக்குக் கல்தாக் கொடுக்கப்படும் என்பதைக் கேட்டார்கள். ஒரு வினடி கழித்து, பிரிட்டனில் உள்ள நிலமெல்லாம், சர்வ ஜனங்களுக்கும் நன்மையளிக்கத் தக்க முறையில், உருவாக்கப்படும் என்பதைப் பெரிய மிராசுதார்கள் கேட்டார்கள்... பிரிட்டனின் சரித்திரத்திலேயே இதுவரையில் மன்னர் பேசியறியாப் புதுமையான காட்சியாகும் இது" என்கிறார் அவர். ஏறக்குறைய அபேதவாத முறையில் பிரிட்டனின் புது வாழ்வைத் திருத்தியமைக்க முயல்கிறது தொழிற்கட்சி என்று இதனின்றும் விளங்கும். தள்ளிவிட்ட வண்டி முதலில் தனியான ஒரு வேகத்துடன்தான் போகும். ஆனல், போகப்போக அந்த வேகம் குறைந்துவிடும்; தடைகளைக் கடக்கும் சக்தியும் குறையும். இதனல்தான் சூட்டோடு சூடாக எதையும் செய்ய வேண்டும் என்பார்கள். ஆறப் போட்டால் காரியமாகாது. ஆகவே, உடனடியாகத் தொழிற்கட்சி இந்தக் காரியங்களைச் சாதிக்குமா?

* * *

இந்தியாவின் மதிப்பு: யுத்தத்துக்கு இந்தியா பிரமாதமாய் உதவிசெய்தது என்று, பிரிட்டிஷ் மன்னர் வரையில் சகல அதிகாரிகளும் புகழ்கிறார்கள். இந்தியா காரியாம்சத்தில் டொமினியன் அந்தஸ்தைப் பெற்று விட்டதாக, மாஜி இந்தியா மந்திரி வெட்ஜ்வுட் பென் (இப்போது ஸ்டான் கேட்) அப்போது சொல்லி வைத்தார். இதையும் எல்லாரும் பன்னிப் பன்னிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும் வெற்றியின் பலன்களில் இந்தியாவின் அந்தஸ்து என்ன? அதற்கு ஓர் உதாரணம் போதும். ஜப்பானுக்குள் ஜயசீலர்களாக நுழையப் போகும் பிரதிநிதிகள் கூட்டத்தில், ருஷ்யா, சீனா, அமெரிக்கா, பிரிட்டன், டொமினியன்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆனல், இந்தியப் பிரதிநிதிகள் மட்டில் இல்லை. தற்போதைய இந்திய சர்க்காரின் பிரதிநிதிகள் அதில் இருந்தும் ஒன்றுதான், இல்லாதும் ஒன்றுதான். என்றாலும், இந்தியாவின் அந்தஸ்துப் பற்றி, பிரிட்டனின்

மனோபாவம் என்ன என்பதை எடுத்துக் காட்டவே இதைக் குறிப்பிட்டோம்.

* * *

காலஞ் சென்ற சுபாஷ்: மாஜி ராஷ்டிரபதி சுபாஷ் சந்திர போஸ், ஜப்பானில் காலமான செய்தி, தேசபக்தி உள்ள இந்தியரை யெல்லாம் துயரக் கடலில் ஆழ்த்தியுள்ளது. சுபாஷ் போஸ், காந்திய வாதிகளுடன் மாறுபட்டார். ஆனால், காந்திஜியிடம் அவரது மதிப்புத் துளியும் குறையவில்லை. 'போட்டி சர்க்கார்' ஏற்படுத்தினால்தான், அந்நிய சர்க்காரை அகற்ற முடியு மென்று அவருடைய துடிதுடிப்பு. இதற்காகக் காங்கிரஸுக்குள்ளேயே மனக்கசப்பை, அவர் கிளப்பிவிட்டார். சர்க்காருக்கு அவரிடம் எப்போதும் பரம கிலி. அவர் பல முறை சிறைப்பட்டார். கடைசி முறை, யாரும் அறியாமல் சிறையிலிருந்து தப்பி யோடினார். ஜப்பானுடன் சேர்ந்துகொண்டார். அங்கே போய், சுதந்தர இந்திய சர்க்கார் என்று ஒன்று அமைத்துக்கொண்டார். இந்தியர்கள் அடங்கிய ஒரு சேனையையும் திரட்டினார். இந்தியாவைப் படையெடுக்கவும் முயன்றார். அவருடைய வழிகள் நம்மில் அநேகருக்குப் பிடிக்கவில்லை. அவருடைய கருத்துக்களிலும், முறைகளிலும் எவர் என்னதான் மாறுபட்டாலும், அவருடைய தேசபக்தியை, யாரும் சந்தேகிக்க முடியாது; தேசத்துக்காக அவர் பட்ட துன்பங்களையும், செய்த தியாகங்களையும் யாரும் மறுத்துரைக்க முடியாது. தேசத்தின் மீது வைத்த அன்புக்காக, அவரத்தனை இன்னல்களை அனுபவித்த இன்னோர் இந்தியரைக் காண்பது மிக்க அபூர்வ மாகும். போஸ் தாம் கொண்ட கொள்கைக்காக நண்பர்களை யெல்லாம் பகைத்துக்கொண்டு, அஞ்ஞாத வாசம் புரிந்து, தீர மரணம் அடைந்தார். அவரை இந்தியா என்றும் மறவாது.

* * *

வரப்போகும் தேர்தல்: இந்தியாவுக்குப் பொதுத் தேர்தல் நடத்த, சர்க்கார் தீர்மானித்துள்ளார்கள். அது இதுவரை நடந்த தேர்தல்களை யெல்லாம் போல் அல்லாமல் மிக முக்கியமாயிருக்கும். இந்தியாவின் தலைவிதியையே அது நிர்ணயிக்கக் கூடும். ஆகையால், அதில் காங்கிரஸ் மகத்தான வெற்றிபெற, தேசபக்தியுள்ள சகலரும் உழைக்க வேண்டும். காங்கிரஸை இப்போதே மிகவும் பலப்படுத்த ஆரம்பிக்க வேண்டும். ஓட்டுரிமை உள்ள எவரும், ஓட்டர் ஜாபிதாவில் இடம்பெற, எச்சரிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். எழுதப் படிக்கத் தெரிந்த வயது வந்த ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை உண்டு என்பதை, நண்பர்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். இந்திய சுதந்தரத்துக்கே அஸ்திவாரம் கோல, அடுத்த தேர்தலை நாம் உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டும். இந்தச் சமயத்தில், தேசியவாதிகள் சிறிது எச்சரிக்கைக் குன்றினாலும், தேசத்துக்கு அளவற்ற நஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆகையால், அவர்கள் தளரா ஊக்கமும் சலியா உறுதியும் கொண்டு உழைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

ஜப்பானுடன் சேர்ந்த வீரர்கள் கதி: ஜப்பானுடன் சேர்ந்து கொண்ட இந்திய சோல்ஜர்களை, யுத்தக் கைதிகளைப் போல் நடத்த வேண்டுமென்று, பண்டித ஜவஹர் முதலிய தலைவர்கள் கிளர்ச்சி

செய்தார்கள். இந்திய சர்க்கார் இதுபற்றி இப்போது ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். ஜப்பானைச் சேர்ந்து கொண்டவர்களில் ஏராளமான சாதாரண இந்திய சோல்ஜர்களுக்குக் கருணை காட்டி விடுதலை செய்யப் போவதாகவும், அவர்களின் தலைவர்களான கொஞ்சம் பேரை மட்டில், பகிரங்கமான ராணுவக் கோர்ட் மூலம் விசாரணை செய்யப் போவதாகவும், இந்திய சர்க்கார் கூறுகிறார்கள். இது ஓரளவு தயாளமான செயல் தான். அந்த அளவுக்கு, சர்க்காரைப் பாராட்டுகிறோம். ஆனால், இந்தியாவின் நிலைமை, யுத்தத்தில் சேர்ந்த இதர ஐக்கிய நாடுகளின் நிலைமை போன்றதல்ல. இந்தியா யுத்தத்தில் சேர்ந்தது, இந்தியப் பொது மக்களின் சம்மதத்தைக் கேட்டு நடந்த காரியமல்ல. இந்த விசேஷ நிலைமையை வைத்துக் கொண்டு பார்த்தால், இம்மாதிரி விஷயங்களைத் தீர்மானிக்கையில், ஒரு நடு நிலைமை நாட்டு மக்களின் செயலைப்போல் பாவிப்பதே முறையாகும். ஆதலால்தான், ஜப்பானைச் சேர்ந்துகொண்ட இந்தியரைக் 'கலகக்காரர்'போல் நடத்தாமல், யுத்தக் கைதிகள் போல் நடத்த வேண்டுமென்று பண்டித ஜவஹர் சொன்னார். இவ்விஷயத்தில் சர்க்கார் அறிக்கை பூர்ண திருப்தி அளிக்கவில்லை. ஆகவே, சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்து, இன்னும் சிறிது தாராளங் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

எவ்வளவு அனுபவம்?

சீமையில், கலாசாலை நிர்வாகத்தில் நிபுணரான ஒரு தலைமை உபாத்தியாயர் இருந்தார். ஒரு சமயம் ஓர் உயர்ந்த உத்தியோகத்துக்கு, ஆள் பொறுக்கும் தேவை ஏற்பட்டது. கலாசாலையின் சேவையில் இருபது வருஷமாய் இருந்து வரும் ஒருவரை விட்டுவிட்டு, புதிதாய்வந்த ஒருவரை அந்தப் பதவிக்கு அவர் நியமித்தார்.

இதைக் கண்ட இருபது வருஷ அனுபவசாலி வருத்தமடைந்தார். 'அனுபவ ரீதியான வரிசைக்கிரமத்தையே உதாசீனம் செய்து, இப்படிச் செய்திருக்கிறீர்களே! இது நியாயமா?' என்று, தலைமை உபாத்தியாயரை அவர் கேட்டார்.

'இல்லவே யில்லை, என் நண்பரே. உமக்கு இருபது வருஷ அனுபவம் இருப்பதாக நீர் நினைத்துக்கொண்டிருக்கிறீர். அது தான் இல்லை. ஒரு வருஷ அனுபவம்தான் உமக்கு ஏற்பட்டிருக்கிறது. அது இருபது தடவை திரும்பத் திரும்ப நேர்ந்திருக்கிறது; அவ்வளவுதான்' என்றார் தலைமை உபாத்தியாயர்.

ஒரு பிரார்த்தனை

பகவானே! மாற்ற முடியாத விஷயங்களை, பரம அமைதியுடன் பொறுத்துக் கொள்ளத் தக்க பலத்தை எங்களுக்கு அருளும். மாற்றக் கூடிய, மாற்றவேண்டிய விஷயங்களை மாற்றுவதற்குத் தேவையான தைரியத்தை எங்களுக்கு அருளும். அவை யாவை, இவை யாவை என்று பகுத்துக் கண்டறியத்தக்க விவேகத்தையும் எங்களுக்கு அருளும்.

—அட்மிரல் ஹார்ட்

முடிந்தால் பிடி

கே. சீனிவாசன்

திட்டம் உள்ள ஒரு மனிதன், திட்டம் இல்லாத தொண்ணூறு மனிதர்களுக்குச் சமம்-இது ஓர் அரசியல் சூத்திரமாகும். ஒரு திட்டம், எவ்வளவு மோட்டாவாயிருந்தாலும் சரிதான்; அது ஆக்கரீதியில் செல்லும் சிந்தனைக்கு அறிகுறியாகக் கொள்ளப்படுகிறது. தாராள உணர்ச்சிகள், அலங்காரமான சொற்கள், கம்பீரமான பிரகடனங்கள் எல்லாம் படிப்பதற்கு மிக்க பிரமாதமாய்த்தான் இருக்கும். ஆனால், அவையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோலும் நீர்க்குமிழி போலும் மாயமாய்ப் போகும்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியார் மூன்றாம் முறையாக அதிகாரத்துக்கு வந்திருக்கிறார்கள். அதுவும் இந்தத் தடவை பூரண பலத்தோடு வந்திருக்கிறார்கள். 1924-ஆம் ௵ தொழிற்கட்சி சர்க்கார் முதல் முறையாக அமைந்தது. அப்போது, இந்தியாவில் பிரமாதமான நம்பிக்கை எழுந்தது. இந்தியாவை நெடுநாளாய்ச் சூழ்ந்திருக்கும் அடிமை யிருள் விலகி விடிவு ஏற்பட்டுவிட்டதென்றும், இந்தியா அன்றிருந்து சுதந்தர நாடாகி, சுயேச்சையாய், சுயஆட்சி புரிந்துகொண்டிருக்குமென்றும் நம்பிக்கை எழுந்தது. ஏனென்றால், தொழிற்கட்சித் தலைவர்கள், இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்கிவிடவேண்டுமென்று ஏற்கனவே சதாகாலமும் வெகு ஆர்வத்தோடு வாதித்து வந்தவர்கள். "தொழிற்கட்சி மாத்திரம் என்றாவது அதிகாரத்துக்கு வந்தால், அது செய்யப்போகிற முதல் காரியம் என்ன தெரியுமா? இந்தியாவின் கைவிலங்கை முறித்தெறிவதுதான். இது எங்கள் தீர்மானமாகும்" என்று அவர்கள் அடிக்கடி கோஷித்து வந்தார்கள்.

ஜேம்ஸ் கீர்ஹார்டி, ராம்ஸே மக்டானல்டு இருவரும், தொழிற்கட்சியை இந்தியாவின் விடுதலை லட்சியத்தை நிறைவேற்றப் பரிபூர்ணப் பிரதிக்ஞை செய்யும்படி செய்திருந்தார்கள். இரண்டாம் தரத் தலைவர்களான லான்ஸ்பரி, வெட்ஜ்வுட், பென்ஸ்பூர் முதலிய பலரும், இவ்விஷயத்தில் தங்களுக்கு மேலுள்ள முதன்மையான தலைவர்களின் உற்சாகம் தங்களுக்கு மிருப்பதாய்க் காட்டிக்கொண்டார்கள். அதி தீவிர உணர்ச்சிகொண்ட இந்தியத் தேசியவாதிகள் எழுதினாலும் பேசினாலும் எப்படி யிருக்குமோ அவ்வளவு அபார உக்ரகத்தோடுதான் இந்தியப் பிரச்னையைப் பற்றி, இந்தத் தலைவர்கள் எழுதியும் பேசியும் வந்தார்கள். கனிந்த உணர்ச்சி, நியாயம் புரிவதில் திட்டமற்ற ஆசை-இவ்வளவோடு இது முடிந்துவிட்டது.

1917-ஆம் ௵ ஓர் அறிக்கை பிறந்தது. மனதின் பாரத்தை இறக்கி, தாராள நோக்கங்களை வெளியிடும் ஓர் அறிக்கையாய் அது அமையவில்லை. பொது ஜனங்களின் செல்வாக்குப் பெற்றவர்களின் கைக்கு அரசியல் அதிகாரத்தை மாற்றும் முதல் முயற்சியாக, மாண்டேகு சீர்திருத்தம் மதிக்கப்பட்டது. அப்போது அது என்னவோ காமா சோமா என்று தயாரான ஒரு நகல் அல்ல என்றுதான் சொன்னார்கள். அதற்கு முன் பத்து வருஷ காலமாய் உதவி இந்தியா மந்திரியாக இருந்து வந்தவர் எட்வின் மாண்டேகு. இந்தியாவில் சுயஆட்சியைப் புகுத்த, அவர் ஒரு திட்டம் தயாரித்தார்.

பிரிட்டனில் தொழிற்கட்சி மந்திரி சபை மகா பலத்துடன் வந்து விட்டதால், இந்தியாவுக்கு விமோசனம் பிறக்கும் என்று பலர் ஆவலோடிருக்கிறார்கள். இந்தத் தொழிற்கட்சியின் பழங்கதையை அலசுகிறார் நண்பர் கே. சீனிவாசன். 'போரம்' பத்திரிகையில் வெளியானது இந்தக் கட்டுரை.

அதைத் தம்முடைய தலைவரான லார்டு மார்லீயிடம் காட்டினர். 'அது மகா அமிதமாய்ச் செல்வது, அனுஷ்டான சாத்தியமல்ல' என்று மார்லீ எண்ணி, அதை நிராகரித்து, தமது பீரோவுக்குள் ஒரு மூலையில் போட்டு விட்டார். மெஸபடோமியா குளறலால், ஸர் ஆஸ்டின் சேம்பர்லீன் இந்தியா மந்திரி பதவியை இழந்தார். மாண்டேகு உள்ளே நுழைந்து, இந்தியா மந்திரியானர். தமது பழைய திட்டத்தை வெளியே எடுத்தார். சட்டமாக நிறைவேற்றினர். 'இந்தியாவில் அமைதியாய் இருந்து வந்த பிரிட்டிஷ் ஆட்சி', அதன் பலனுக, அமைதி குலைந்து போயிற்று. இந்த அமைதிக் குலைவு தீர்ந்து, மீண்டும் அமைதி ஏற்படுமா?

டோரி கட்சியாருக்கு எவ்விதத் திட்டமும் இல்லை. அவர்கள் இன்று வரையில் திரும்பத் திரும்பக் குட்டை குழப்பிக்கொண்டே யிருந்துவிட்டார்கள். மட்டிமன் கமிட்டி, ஸைமன் கமிஷன், வட்டமேஜை மகாநாடுகள், 1935-ஆம் ஆண்டு சட்டம் ஆகிய பல முயற்சிகளை அவர்கள் செய்துவிட்டார்கள். யுத்த நெருக்கடியிலேகூட, கிரிப்ஸ் தூது முயற்சியும் செய்து பார்த்தார்கள். இந்த ஒன்றிலும் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இதற்கு மிகவும் அடிப்படையான காரணம் என்னவென்றால், அவர்களுக்குத் திட்டமான ஒரு நோக்கம் கிடையாததுதான். இந்தியப் பிரச்னை சம்பந்தமாகக் கிளர்ந்தெழுந்த சக்திகளைக் கண்கட்டி ஏமாற்றிவிட்டு, கைமேல் உள்ள அவசர காரியத்தைச் சாதித்துக் கொள்வதிலேதான், அவர்களுக்குப் பலமான விருப்பம். இந்தக் கேலிக் கூத்துகளிலெல்லாம் பிரிட்டிஷ் தொழிற்கட்சியும் பூரணமாய்ப் பங்கெடுத்துக்கொண்டு வந்தது. 1924-ஆம் வருஷத்தில் தங்கள் கட்சி உத்தியோக மேற்றாலும் அதற்குப் போதிய பலமில்லை என்று தொழிற்கட்சியார் சொன்னர்கள். 1927-ஆம் ஆண்டு விசாரணை நடத்திய ஸைமன் கமிஷனில், தொழிற்கட்சி கலந்துகொண்டது; தற்போதைய பிரதம மந்திரி ஆட்லி அதில் ஓர் அங்கம் வகித்தார். வட்ட மேஜை மகாநாடுகளில், டோரிகளின் ஆட்டத்துக்கு, தொழிற் கட்சி தாளம் போட்டது. இப்போது, அந்தத் தொழிற் கட்சிக்கு ஒரு புதிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆனல், அதனிடம் நிச்சயமான ஒரு திட்டம் உண்டா? மனதிலோ வேறு விதமாகவோ இந்திய சுதந்தர லட்சியத்தில் ஈடுபட்ட ஒரே ஒரு தலைவன் கூடத் தொழிற்கட்சியில் இல்லை. கட்சி யறிக்கைகளும், பத்திரிகைப் பேட்டிகளும் ஏராளமாய்த்தான் வெளி வந்திருக்கின்றன. ஆனல், ஆக்கரீதியிலே எதுவும் இல்லை.

தொழிற் கட்சியின் தலைவரா யிருக்கும் பிரதம மந்திரி, மிக்க மந்த புத்தி யுள்ளவர்; கற்பனு சக்தியே இல்லாதவர்; ஏகாதிபத்தியப் பித்த முடையவர்; இந்திய அரசியல் பற்றிய விசாரணையில் தாம் கலந்துகொண்ட போது, லகான் போட்ட மாகாணச் சுயஆட்சிதான் சாத்தியம் என்று சொன்னவர். இவரது உதாசீனமான போக்கு, இவருடைய சகாவான வெர்னன் ஹார்ட்ஷான் என்பவரையும் கூடப் பிடித்துவிட்டது. பெரும்பான்மை அங்கத்தினர்களிடமிருந்து மாறுபட்ட தனி அறிக்கையை இவர்கள் சமர்ப்பித் திருந்தால், தொழிற்கட்சியாரின் நல்ல நோக்கங்கள் அந்தரங்க சுத்தியானவையே என்று நிரூபணமாகி யிருக்கும். அதை விட்டு, இந்த இரண்டு அபேதவாதப் பிரதிநிதிகளும், ஸைமன் அறிக்கையிலே கையெழுத்திட்டு விட்டார்கள்; அதன் மூலம், ஏகாதிபத்திய ஆதிக்க விஷயங்களில் டோரிகளும் தங்கள் கட்சியும் ஒன்றே என்று ஊர்ஜிதம் செய்துவிட்டார்கள். இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில், ஆட்லி பிரதம மந்திரியா யிருப்பது ஒரு தடங்கலாகும். அவருக்கு இதில் ஊக்கமும் கிடையாது; உள்வலியும் கிடையாது. சர்ச்சிலைப்போல், அற்பத்தனமான அகம்பாவம் இவரிடம் இல்லை. என்றாலும், இந்தியாவை பிரிட்டன் தன் பிடிக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும் என்ற ஆசையிலிருந்து இவரும் விடுபட்டவர் அல்ல.

இவர்தான் இப்படி யென்றால், இந்தியாவை விடுதலை பெறச்செய்யும் திட்டம் உள்ள வேறு எந்தத் தலைவராவது தொழிற்கட்சியில் இருக்கிறாரா என்றால், அதுவும் இல்லை. மந்திரி சபைக்குள்ளே மகா பலமான செல்வாக்குள்ளவர் மிஸ்டர் பெவின். அவர் நோக்கம் மிகவும் குறுகியதாயிருக்கிறது. இயந்திரக் கலையில் இந்தியருக்குப் பயிற்சி கொடுப்பதெப்படி என்பதிலே தான் அவர் யோசனை செல்கிறது. ராஜீய இயந்திரக் கலையிலும் இப்படிச் சில 'பெவின் பையன்'களைப் பயிற்சி செய்வதோடு, அவர் திருப்தியடைந்து விடுவார். மிஸ்டர் மாரிஸனுக்கோ, ஒரு பள்ளிக்கூடப்பையன் அளவுகூட இந்தியாவைப்பற்றி எதுவும் தெரியாது. டோரி மனோபாவம் ஊறிப்போன ஒருவர், அயல் நாடுகளில் யூனியன் ஜாக் கொடி பறப்பதில், எவ்வளவு பெருமை கொள்வாரோ அவ்வாறே தாமும் அதில் பெருமை கொள்பவர் தலைவர் மிஸ்டர் ஷின்வெல். லார்டு லிஸ்டோவெல், அரசியல் விஷயங்களில் ஒரு கற்றுக்குட்டி. அவருடைய சொல்லிலே வலிவும் கிடையாது; ஞானமும் கிடையாது. ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸுக்கு இந்தியப் பிரச்னைபற்றி ஏதோ கொஞ்சம் தெரியும்; அவர் ஏற்கெனவே சில அபிப்பிராயங்களைச் சொல்லி அகப்பட்டுக்கொண்டிருக்கிறார். என்றாலும், தாம் நுனிப்புல் மேயும் ஒருவரென்றும், எத்தகைய கொள்கைகளுக்கும் கட்டுப்படாமல் தன்னலத்திலே நாட்டங்கொண்டு தருணம் பார்த்திருக்கும் சமய சஞ்சீவி யென்றும் நிரூபணம் செய்துவிட்டார். லார்டு ஸ்டான்ஸ்கேட் (பழைய வெட்ஜ்வுட் பென்) குட்டிச் சுவராய்ப்போன ஓர் அரசியல்வாதி. அவர் தொழிற்கட்சி மந்திரி சபையில் இந்தியா மந்திரியாயிருந்த வாலிப காலத்திலேயே, காரியத்துக் குதவாத மகா விசித்திரமான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தவர். ஜேம்ஸ் மாக்ஸ்டன், தந்தக் கோபுரத்தில் (லார்டு சபையில்) உட்கார்ந்துவிட்டார். அவர் இந்தச் சீரழிந்த தொழிற்கட்சி ஆசாமிகள் கும்பலின் தொல்லையில் வந்து மாட்டிக்கொள்ளாமல், தமது சுயேச்சைத் தொழிற்கட்சி சகாக்களான இரண்டு மூன்று லார்டுகளோடு சேர்ந்து கொண்டு, வலதுசாரிக்காரர் ஆகியிருக்கிறார். இன்று தீவிரம் காட்டும் கோவ், ஸோரென்ஸன் போன்றவர்களின் பேச்சு, பத்து வருஷத்துக்கு முன்னே தீவிரங்காட்டிய பெத்விக் லாரென்ஸ், லான்ஸ்பரி போன்றவர்களின்பேச்சு எப்படி வலிமையற்றதோ அப்படித்தான் வலிமையற்றது.

தீவிரமாய்த் தாக்கும் உற்சாகம் நிறைந்த ஒரே ஒருவர் மட்டில் இருக்கிறார். அவர் புரொபஸர் ஹெரால்டு லாஸ்கிதான். தொழிற்கட்சி நிர்வாக சபையின் தலைவராயிருப்பவர். அவருக்கு ஊக்கமும் கற்பனா சக்தியும் இருக்கிறது. என்றாலும், புரொபஸர் இன்னமும் ஒரு புரொபஸராய்த்தான் இருக்கிறார். வெஸ்ட் மினிஸ்டரில் நடக்கும் பிரிட்டிஷ் அரசியல் என்ற ராவணன் கோட்டைச் சூழ்ச்சிகளில் அவருக்கு அனுபவம் கிடையாது. இந்தியா விஷயத்தில் அவரிடம் எவ்விதத் திட்டமும் கிடையாது; சிறிது உற்சாகம் மாத்திரமே உண்டு. இந்திய ஏகாதிபத்தியத்தை இழக்கும் விக்கிரய சாஸனத்தில் கையெழுத்திட அவருக்குத் தைரிய மிருக்குமா? இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்திலே தகராறு செய்வதால், தமது கட்சித் தலைமைக்கே ஆபத்துத் தேடிக் கொள்ள, அவர் துணிவாரா? பெரிதும் சந்தேகம்தான்.

மறுபடியும் ஆலசியம், தாமதம், ஒத்திப்போடல், ஆட்டபாட்டம் இவைதான் நடக்கப் போகின்றன. தீர்க்கமான, அடிப்படையான, முறைகளில் எவ்விதப் பரிகாரமும் நடக்கப் போவதில்லை. முடிந்த பிடியெல்லாம் பிடிக்கலாம் என்று நடக்குமே ஒரு மல்யுத்தம், அந்த மல்யுத்தம்தான் இனியும் இரு தரப்பிலும் நடக்கப் போகிறது.

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!

கண்ணாம்பா



சருமப் பாதுகாப்பிற்கு லக்ஸ் சோப் முறையையே தான் பின்பற்றுவதாக கண்ணாம்பா கூறுகிறார். மாசு மறுவின்றிச் சருமத்தை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ள இந்தச் சுகந்த அழகைத் தரும் சோப்பின் நுரையில் நம்பிக்கை வைக்கக் கூடுமென்று, மற்ற இந்திய சினிமா நட்சத்திரங்களைப் போலவே இவரும் கண்டறிந்திருக்கிறார். அறிவாளியானபடியால், ஒழுங்காக லக்ஸ் சோப்பை உபயோகிக்க இவர் தவறுவதில்லை.

லக்ஸ் டாய்லட் சோப்

LTS. 132-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

18 NOV 1945

அரிய நூல்கள்

காந்திஜீ

நமது மொழிப் பிரசினை — 2 8

நமது ஒப்பற்ற தலைவர் காந்தியடிகளின் பொதுமொழி பற்றிய கருத்துக்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள் — 3 0

யுத்த சமயத்தில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டிகள், எழுதிய கட்டுரைகள், அறிக்கைகள் அடங்கியிருக்கின்றன. சமீபகால அரசியல் நிலையை அறிய ஆவலுள்ளவர்களுக்கு இந்நூல் மிக்க உதவிபுரியும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

மலரும் மாலையும் — 6 0

நாஞ்சில் நாட்டு மருமக்கள் மான்மியம் — 1 0

ஆசிய ஜோதி — 2 0

தபால் செலவு தனி

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி

நைஜாம் சமஸ்தானம், ஆந்திர தேசம், தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள்:
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்
செகண்ட்ராபாத் — பெஜவாடா — மதுரை

மூன்று கவிஞர்கள்

நாமக்கல் கவிஞருக்கு நிதியளிப்பு வைபவம் சமீபத்தில் சென்னையில் அற்புதமாய் நடைபெற்றது. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் 70-ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. மகாகவி பாரதி விழா சமீபித்திருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளையொட்டி, இந்த மூவரையும் பற்றி, மூன்று விதமான கட்டுரைகளை இங்கே வெளியிடுகிறோம்.

பாரதியார் கனவு

வ. ரா.

பாரதியார் இனிய கனவு கண்டார். தமிழை, உலகமுழுதும் பரப்ப வேண்டும் என்பது அவரது ஆசை; பரப்ப முடியும் என்பது அவரது நம்பிக்கை. ஏன்? ஒவ்வொரு மொழியிலும், திடமான புலமை தோன்றுமாயின், அதைப் பிறநாட்டார் வணக்கம் செய்வதில் சந்தேகமே இல்லை. தமிழ் மொழியை (பாரதியாரின் ஆசை நம்பிக்கைக்கு இணங்க) நம்மவர்கள் வளர்க்கப் பாடு படுகிறார்களா என்பது தான் கேள்வி. இல்லை என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

பிரிட்டிஷ் தொழில் கட்சியின் கருணையினாலோ, அல்லது உலகக் கலக்கத்தின் அதிர்ச்சியினாலோ, அல்லது ஜின்னாவின் மகத்தான குறும்புத் தனத்தின் கோணல் வழியாகவோ, அல்லது வேறு எதிர்பாராத காரணத்தாலோ, இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வந்து விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். பாஷா வாரியாக, மாகாணங்கள் அப்பொழுது ஏற்படுவது உறுதி. அப்படியாயின், தமிழ் நாட்டில், தமிழிலே தானே, கல்வி போதிக்கப்படவேண்டும்? அவ்வாறு தமிழிலே, போதிக்க முடியுமா? தமிழ் இப்பொழுது இருக்கிற நிலையை யோசித்தாலும், தமிழ்ப்பற்று உடைய தலைவர்களின் ஊக்கத்தைக் கவனித்தாலும், தமிழில் இன்னும் முப்பது வருஷத்துக்குள் உயர்தரக் கல்வி போதிக்க முடியாது.

நமது பண்டை நாகரிகம், இகலோக வாழ்வை இகழ்வதும் முக்தியைப் பெரிது படுத்திப் பேசுவதுமாக இருந்தது. வாழ்க்கையைச் சுருங்கச் செய்வதுதான் அதன் நோக்கம். வாழ்க்கையை விஸ்தாரப்படுத்தி வாழ முயலுவதை, பண்டைப் பெரியார்கள், பாசமாகக் கருதினார்கள். ஊண், உடை, கலை, கவிதை, அறிவு எல்லாம் 'சுருக்குப் பை'தான். இவைகள் யாவும் அறவொழுக்கம் என்ற பெட்டிக்குள் அடங்கிக் கிடக்கவேண்டும். திருப்தி என்ற குணத்தைத் தான் பெரிதாகக் கொண்டாடினார்கள். எப்பொழுதும் 'சிக்கனம்' என்பதைப் பற்றித்தான் பேச்சு. வெற்றி, விஸ்தார வாழ்க்கை, செல்வச் செழிப்பு, இன்ப நுகர்ச்சி, அறிவு வளர்ச்சி முதலியவைகளைக் கேலி செய்தார்கள். எனவே, பாஷையும் சுருக்கம் அடைந்துபோனால், அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

கிராமிய நாகரிகம் என்ற கட்டை வண்டி மனப்பான்மையின் மூலமாக, எதுவும் செழிக்க முடியாது, சிறக்கவும் முடியாது. அஞ்சாமல் தனிவழி செல்லுதல் முட்டாள் தனமான செயலாக எண்ணப்படுமாகில், அந்தக் கூட்டத்தாரின் அறிவு வளர்ச்சியையும் செல்வச் செழிப்பையும் கருத்துப் புதினத்தையும் கலை ஆக்கத்தையும் கவிதைப் பண்பையும் பற்றி என்ன சொல்லுவது! தேமதுரத் தமிழ் ஓசை வெறும் 'அரவமாகப்' போய் விடாதா? தெலுங்கர்கள், தமிழை 'அரவம்' என்று சொன்னால், நாம் ஏன் ஆத்திரப்பட வேண்டும்?

படைப்பிலே காணப்படும் நுணுக்கங்கள் யாவற்றையும் விளக்கமாகவும் விரிவாகவும் அழகாகவும் ஆணித்தரமாயும் சொல்லுவதற்கு வேண்டிய வசதிகள், பாஷையில் இருக்க வேண்டாமா? அணுக்குண்டு என்ற ஆபத்து,

தோன்றி விட்டது. இங்கிலீஷ் படிக்காத தமிழர்களுக்கு இதைப்பற்றி எப்படி எடுத்து, விளக்கிச் சொல்லுவது? தமிழ்த் தினசரிப் பத்திரிகை ஆசிரியர்களையும் உதவி ஆசிரியர்களையும் நான் மிகுதியும் போற்றி வணங்குகிறேன். 'அணுக்குண்டை,' ஐந்து நிமிஷத்துக்குள், அவர்கள் தமிழில் தெளிவு படுத்தவேண்டும். சங்க இலக்கியத்தில் கைதேர்ந்த கடும்புலவர்கள் இந்த அரிய வேலையைச் செய்ய முடியுமா? முடியாது. அவர்கள் எழுதும் தமிழ் அவர்களுக்குத்தான் புரியும்.

வியாசர் தரும் விருந்தைப் பரிமாறும் ராஜாஜியும், கம்பர் தரும் காட்சியை அனுபவிக்கத் தூண்டும் டி. கே. சியும் சிலப்பதிகாரத்துக்கு விரிவுரை எழுதி வரும் ஸர். ஆர். கே. ஷவும் மிகவும் எளிதான வேலையில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வருகிறார்களே, அது என்ன மாயம்! தற்காப்புக்கேனும், அறிவு வளர்ச்சி வேண்டாமா தமிழர்களுக்கு? ஸயன்ஸ், பூமிநூல், எஞ்சினீரிங், பொருளாதாரம், அரசியல், கலை முதலியவைகளில் புதிது புதிதாக மேல்நாட்டில் கண்டு பிடிக்கிறார்கள்.

இவைகள் தமிழர்களுக்குத் தெரிய வேண்டாமா? இவைகளை, தமிழர்கள், இங்கிலீஷ் பாஷை மூலமாகத்தான் கற்கவேண்டும் என்று சாபம் பெற்றிருக்கிறார்களா?

வாழ்க்கையின் லட்சியம் இன்னதென்று வகுத்துக் கொள்ளாமலும் வாழ்க்கையின் தேவைகள் இவை என்று தேர்ந்து கொள்ளாமலும் தமிழனுடைய ஊக்கமும் உழைப்பும் இதற்காகத்தான் என்று திடம் செய்து கொள்ளாமலும், 'யோசிக்கும், வேலையில் பசிதீர உண்பதும் உறங்குவது'மாக முடிகிற மிருகப் பிராயமான வாழ்க்கை வாழ்ந்தால், தமிழர்களை உலகத்தில் ஒருவரும் மதிக்கமாட்டார்கள். கூலி வேலைக்கும், அதைச் செய்ய மறுத்தால் அணுக்குண்டுக்கும் தகுதி பெற்றவர்கள் என்றுதான், அரக்க மனப்பான்மை யுடைய அந்நியர்கள் நிச்சயமாய் நினைப்பார்கள்.

பாஷை மூலமாக, தமிழர்கள் அறிவும் அந்தஸ்தும் உலக மதிப்பும் பெறவேண்டுமானால், அவர்கள் இப்பொழுது அமைந்து கிடக்கும் தமிழ் மொழியின் மூலமாக, பெறவே முடியாது தற்போது, தமிழில் சிறிவரும் தமிழ் எழுத்தாளர்கள், தங்களுக்குள் பெருமை பேசிக் கொள்ளலாம். பிற நாட்டார் அவர்களை வணங்க மாட்டார்கள். தமிழ் எழுத்தாளர்கள் எழுதுவதை இங்கிலீஷ் படுத்தியோ அல்லது ரஷ்ய பாஷையில் மொழி பெயர்த்தோ பார்த்தால் தெரியும். இவர்களுடைய கீர்த்தி, காசி வரையில் கூட எட்ட வில்லையே! பிறகு லண்டனையும் மாஸ்கோவையும் நியூயார்க்கையும் பற்றிப் பேசுவானேன்!

சிறுகதை மன்னன், நாவல் வீரன், கட்டுரைச் சூரன், நாடகமணி, கலை வள்ளல், கவிச் சக்கரவர்த்தி என்று எழுத்தாளர்களுக்குப் பட்டம் சூட்டலாம் அல்லது அவர்களே சூட்டிக் கொள்ளலாம். என்றாலும், தமிழ் மொழியை உலகத்தார் (வட நாட்டார் உள்பட) மதிப்பார்களா? குழந்தைகளைப்போல, குடும்ப விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தால், குடும்பமும் வாழ்க்கையும் அர்த்தமாகி விடுமா?

பாரதியார் தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் தேடிக் கொடுத்த பெரும் புகழையும் நல்ல பெயரையும் கெடாமல் காத்து விருத்தி செய்யவேண்டிய பொறுப்பைத் தமிழர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசியல் வாதிகள் ஆகாயத்தில் பறப்பதும், கவிஞர்கள் கந்தர்வ லோகம் செல்வதும், பண்டிதர்கள் தங்கள் பெருமையைப் பறை சாற்றுவதும், தாய் தனது அன்பைக் குழந்தையின் பேரில் சொரிந்து தாலாட்டுவதும், கொடுங்கோலனை இரக்கமின்றி வீழ்த்திச் சுதந்தரத்தையும் சுகவாழ்வையும் நிலைநாட்டுவதும், நுணுக்கத்திலிருந்து கண்ட அற்புத அறிவை அயலானுக்கு அறிவிப்பதும்,

அநீதியை எதிர்த்துப் போராடுவதும், பாஷையின் மூலமாகத்தான் சாத்தியமாகும்.

தமிழ்ப் பாஷையை, தற்போதைய உலக நிலைமைக்கு ஏற்றவாறு பண்படுத்த வேண்டும். இதைப் பற்றித்தான் என் கவலை. இதில் பங்கு எடுத்துக்கொள்ளும் ஊழியர்கள்தான் உத்தமமான தேச பக்தர்கள். அடிப்படையான இந்த வேலையில் ஈடுபடுவதுதான், நம்மவர்கள் பாரதியாருக்குச் செய்யும் வணக்கமாகும்.

நாமக்கல் கவிஞர்

பொ. திருகூடசுந்தரம் பிள்ளை

யுத்தம் நின்று விட்டது, வெற்றி பெற்றுவிட்டோம் என்று சந்தோஷப் படுகிறார்கள்; விழாக்கள் கொண்டாடுகிறார்கள். இந்த யுத்தம் நின்று விட்டது உண்மைதான். ஆனால்,

> யுத்தம் என்ற மோகமே
> உலகை விட்டுப் போகுமா?

உலகில் ஒளியும் இருளும் கலந்தே காணப்படுவதுபோல, மனிதனிடமும் நல்ல குணமும் தீயகுணமும் கலந்தே காணப்படுகின்றன. மனிதனுடைய மனம் கண்ணாடியாகவேயிருந்தாலும், அதில் அழுக்குப் படிந்து கொண்டே தானிருக்கும். ஆகையால், அடிக்கடி அதைத் துடைக்க வேண்டியதுதான். இந்த மாதிரியே, யுத்தங்களும் நடந்துகொண்டேதானிருக்கும். அப்படிநடக்கும் பொழுதெல்லாம், அதை நடத்துவதற்கு ஆளும் ஆயுதமும் தேவையாகும். ஆனால், ஆளும் ஆயுதமும் இருந்தாலும், அந்த வீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்குவதற்காக, சேனாதிபதிகள் தக்கதொரு போர்க் கீதத்தை உபயோகிப்பது வழக்கம். போருக்கு அணிவகுத்துப் போகும் போது, 'பாண்டு' வாத்தியம்போன்ற போர் முரசங்களுடனே போவது பண்டைக்கால முதல் சகலதேசங்களிலும்நடைபெற்றுவரும்வழக்கமாகும்.

சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் பிரான்ஸ் தேசத்தில் சுதந்தரப் புரட்சி நடைபெற்ற சமயத்தில், மார்சேல்ஸ் என்னும் நகரத்தில், ஒரு சுதந்தரப் பட்டாளம் புரட்சி விஜயம் செய்யத் தயார் செய்து கொண்டிருந்தது. ராபர்ட் வில்லி என்ற ஒரு போர்வீரன் சுதந்தர கீதமொன்று பாடினான். அந்தக் கீதத்தைப் பாடிக்கொண்டே, அந்தப் படையினர் நாடெங்கும் புரட்சியை எழுப்பினார்கள். "அந்த மார்சேல்ஸ் கீதத்தைக் கேட்போர் யாராயிருந்தாலும், அவர்களுடைய கண்களில் தீப்பொறி பறக்கும்; அவர்களுடைய இதயம் சைத்தானையும் எமனையும் கொடுங்கோலனையும் ஒழிப்பதற்குத் துடி துடிக்கும்" என்று ஆங்கிலப் பேராசிரியர் தாமஸ் கார்லைல் கூறுவது உண்மை. பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் போர் நடந்த சமயத்தில், இதனாலேயே, ஜெர்மன் சேனாதிபதி, "ஐயோ! இந்தப் பாழாய்ப்போன கீதம் என்னுடைய சோல்ஜர்களில் ஆயிரக் கணக்கானவர்களுடைய உயிரைக் குடித்துக்கொண்டிருக்கிறதே! இந்த மாதிரியான கீதம் ஒன்றை எனக்குப் பாடித் தருபவர் யாருமில்லையே!" என்று வருந்தினான். அவ்வளவு அதிகமான சுதந்தர வெறியை ஊட்டுகிறது அந்த மார்சேல்ஸ் கீதம். ஆனால், அதுபோன்ற சிறந்த கீதம் ஒன்றை, நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் நமக்குப் பாடித் தந்திருக்கிறார்.

பண்டைக்கால முதல் இந்த யுத்தத்துக்கு முன்வரை நடந்துள்ள போர்களில் எல்லாம் உபயோகிக்கப்பட்ட ஆயுதங்கள் பலவிதமாயிருந்தாலும், அந்த யுத்தங்களின் வெற்றி தோல்விகள் எல்லாம் உடல்வலியை மட்டுமே பொறுத்தவையாக இருந்தன. அந்தப் போர்களில்.

> வாளுக்கு வாளாம்!
> வில்லுக்கு வில்லாம்!
>
> வகைமிக்க ஆயுதம்
> திர்ந்திடில் மல்லாம்!

ஆளுக்கு ஆள்நின்று
நேருக்கு நேராம்.

ஆண்மையும் ஆற்றலும்
செய்வது போராம்.

ஆனால், இந்த யுத்தத்திலோ, உடல் வலி உபயோகிக்கப்பட்டாலும் அறிவின் சக்தியே விஞ்ஞானத்தின் துணை கொண்டு வெற்றிக்கு ஆதாரமாக இருக்கிறது. அறிவின் சிகரமாக அணுக்குண்டு ஆக்கப்பட்டு விட்டது. இதைக் கண்டு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள அறவோர்களும் அந்தணர்களும் "ஐயோ! இந்த அணுக்குண்டால் மானிட ஜாதியே அழிந்தொழிந்து போய் விடுமே!" என்று ஏங்குகிறார்கள். "இந்த ஆலகால விஷத்தை மாற்றக் கூடிய மருந்து ஏதேனும் உண்டா?" என்று யோசிக்கிறார்கள். அப்படி யோசிக்க வேண்டியதில்லை,

இத்தனை தீமைக்கும் ஏற்ற மருந்து,
இந்திய ஞானிகள் கண்ட மருந்து,

உத்தமர் யாவரும் உவக்கும் மருந்து,
உலகத்தில் துன்பம் ஒழிக்கும் மருந்து

ஒன்றிருக்கிறது என்று, ஏற்கெனவே நம் கவிஞர் கூறியிருக்கிறார்.

அந்த மருந்து யாது? உடல் சக்தியும் அறிவுச் சக்தியும் மட்டுமே மனிதனிட மிருப்பதாக, நாம் எண்ணுகிறோம். அதனால்தான் இந்த இரண்டு சக்திகளின் கோரத்தையும் கண்டு அஞ்சுகிறோம். ஆனால், மனிதனிடம் இந்த இரண்டுக்கும் மேலான ஆன்ம சக்தி என்பதொன்றும் உண்டு என்பதை மறந்து விடுகிறோம். அந்தச் சக்தியை உபயோகித்து அணுக்குண்டை மட்டுமன்று, அதைவிட ஆற்றல் பொருந்திய ஆயுதங்களையும் வென்றுவிட இயலும். இது ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதமே யானாலும், இதை மகாத்மா காந்தியடிகள் காட்டிய பின்பே நாம் இதைப்பற்றிச் சிந்தித்து வருகிறோம். அணுக்குண்டை ஆக்கப் பல ஆண்டுகள் சென்றன. அதுபோலவே, ஆத்ம சக்தியைச் சரியான முறையில் உபயோகிக்கவும் பல ஆண்டுகள் செல்லலாம். ஆனால், அதுதான் மனித ஜாதியைக் காப்பாற்றி அமரநிலை எய்தச் செய்வதாகும். அந்த ஆன்மப் போருக்கு நம்மைத் தயார் செய்பவை நம் நாமக்கல் கவிஞரின் பாடல்கள். ஆன்மப் போர் எங்கே நடந்தாலும், எப்போது நடந்தாலும், அவருடைய

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது,

சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும்யாரும் சேருவீர்

என்ற கீதமே நமக்கு வெற்றி தேடிக் கொடுக்கும் படையணிப் பாட்டாகும். அத்தகைய சிறந்த உதவியைச் செய்யும் வள்ளல் ராமலிங்கக் கவிஞர் நீடு வாழ்க!

கவிமணி தேசிக விநாயகம்

எம். எஸ். ராமாநுஜம்

தென்திருவிதாங்கூரில் ஒரு பகுதி நாஞ்சில் நாடு. செழிப்பான இடம். எள்ளும் கொள்ளும், நெல்லும் புல்லும் எல்லாம் விளையும் பூமி. அதைத் திருவிதாங்கூரின் களஞ்சியம் என்றே சொல்லுவார்கள். 'நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவஞ்செய் குமரி'யை யடுத்து, பாண்டியபுரம் செல்லும் புத்தேரி என்ற ஊர் இருக்கிறது. செல்லும் வழியெல்லாம் செழித்த சோலையும் இரு புறமும் ஏரிகளும் நிறைந்து, குளிரும் நிழலும் மயங்கித் தழுவும். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் ஊர் இந்தப் புத்தேரிதான்.

கவி என்றால், பிரும்ம சிருஷ்டியில் விசித்திரப் பிறவியல்ல. மக்களோடு மக்களாய், அவர்களுடைய சுகதுக்கங்களில் குலவும் சாதாரண மானிடப் பிறவியே. ஆனால், கவிகளுக்கு அசாதாரண அமானுஷ்ய இயற்கையுள்ளம் இருக்கும். அத்தகைய உள்ளம் படைத்தவர்தான் கவிஞர் ஸ்ரீதேசிக விநாயகம் பிள்ளை. அன்

பும் அருளும், பண்பும் பயனும் பொருந்தியது பிள்ளையவர்களின் வாழ்க்கை. அவருக்கு எழுபது ஆண்டுகள் நிறைந்துவிட்டன. அவர் உடல் தளர்ந்தாலும் உள்ளந் தளராத வீரர். அக்கம்பக்கத்து மக்கள் யாவரும் அவரைப் 'பாட்டா' என்று பரிந்தழைக்கிறார்கள். அவர் வயதின் கனிவும் உள்ள மலர்ச்சியும் பெற்றவர்.

இயற்கை வாழ்க்கையே சிறந்த இன்பம். செயற்கைச் செழிப்பு, கனிவுக்குக் கல்லறை தேடுகிறது.

காட்டில் ஓநாயும் நரியும்
கடுவாயும் புலியும்

நாட்டு நாகரிகம் கண்டு
நகைக்க லாச்சுதையோ

என்பது கவிஞரின் வாக்கு. படாடோப வாழ்க்கை பண்பற்றது; அருளற்றது; இருளுற்றது. செட்டு வாழ்க்கையே சிறந்தது. பிள்ளையவர்கள் செட்டு வாழ்க்கை நடத்துபவர். பண்பு மிக்க வாழ்க்கை; அழகு நிறைந்த வாழ்க்கை! பிள்ளையவர்கள் வாழும் வீடு அரண்மனையல்ல. அரண்மனையின் ஆடம்பரம் அங்கே யில்லை. ஆனால், அழகு நிறைந்தது. மாடிவீடுதான். எங்கே பார்த்தாலும், காகிதக் கட்டும், சாசனக் குவியலும், சுவடிகளும் கிடக்கும். அவர் சரித்திர ஆராய்ச்சியில் ஆர்வமிகுந்தவர் என்பது, வீட்டைப் பார்த்தால் சொல்லாமலே விளங்கும்.

ஆளைப் பார்த்தாலோ வைதிகமாய்த் தோன்றும். பேசினால் அவர் கருத்திலே உயிரைக் காணலாம்; கண்ணிலே ஒளியைக் காணலாம். வருவோருக்கெல்லாம் உபசாரம் புரிவார். தெவிட்டாமல் பேசுவார்.

ஆணவத்தின் முனைப்பு ஆடம்பரமாகும். ஆடம்பரத்தில் முளைப்பது பகைமைதான். கனிவுக்குக் கட்டுப்பாடு வேண்டும்; பண்புக்குப் பணிவு தேவை. கவிஞர் யாவருக்கு மடக்கம்; யாவரும் கவிஞரிடம் அடங்குவர். குழந்தை முதல் கிழவர் வரை யாவரிடமும் அவர் புன்முறுவல்தான் காட்டுவார். அவருடைய உள்ளம் கள்ளமற்றது. அவர் பகையையும் வெல்லும் பண்புள்ளம் படைத்தவர்.

கவிஞர் கவி எழுதுவார். குழந்தைகளுக்குப் படித்துக் காட்டுவார். பாமரருக்குச் சொல்லிக் கேட்பார். அவர்கள் ஆமோதித்தால்தான் அச்சேற்றச் சம்மதிப்பார். காரணம் என்ன? கவிஞரின் மதிப்பிலே, பட்டம் பெற்ற பண்டிதர்களே பாமரராகவும், படிப்பறியாப் பாமரரே பண்டிதராகவும் தோன்றுகிறார்கள் போலும்! இது புரட்சிகரமாயிருக்கலாம்; ஆனால், உண்மை. பண்பு என்பது வேறே; படிப்பு என்பது வேறே - இதைக் கவிஞர் அறிவார்.

கவிஞர் கள்ளமற்ற உள்ளம் பெற்றவர். ஒரு காலத்திலே அவருக்குப் புகழில் விருப்பம் இருந்திருக்கலாம். இப்போது அது துளியுமில்லை. இன்று அவர் உள்ளத்திலே சமத்துவமே நிலவுகிறது. அவருக்கு இகழும் புகழும் ஒன்றுதான். பட்டமும் பதவியும் யாருக்கு? வாழ்க்கையின் உண்மையறியாதவர்களுக் கல்லவா அவை வேண்டும்? நம் கவிஞருக்கு அவை எதற்கு?

கவிருக்கு எழுபது ஆண்டுகள் நிறைகின்றன. பருவம் உடலுக்கு இடைஞ்சல் இழைத்தாலும், உள்ளத்தைத் தாக்க எதற்கும் வலியில்லை. நாட்கள் திரியும்; உடல் தளரும்; உற்றாரும் பெற்றாரும் மாறுவர். உள்ளத்தை இந்தப் பந்தங்களினின்று இழுத்துவிட்டால், நாகரிகத்தின் உண்மையுணர்ச்சி எழும்; மானிட வாழ்க்கையின் மர்மம் தெளியும். இது கைவரப் பெற்றவர் கவிஞர். அவரது பந்தமற்ற உள்ளம் பளிங்காகி, பண்பாகி, தங்கமாகி, எங்குமாகி, இயற்கை யின்பப் பெருக்காகி, பாடல்களாய்ப் பரிணமிக்கின்றன. அவர் உடல் ஊறுற்றாலும் உள்ளம் உயர்ந்தோங்கப் பெற்றிருப்பர். உள்ளத் துயர்வனையர் மாந்தர். பிள்ளையவர்கள் உள்ளத்துயர்வாய், உணர்ச்சியிலே குன்றா இளமையோடு வாழ்கிறார். அவர் நீடூழி வாழ்க!

✻

தாவரங்களின் வாழ்க்கை

மு. அருணசலம்

தாவர உயிரைப் பற்றிப் பொதுவாய்ச் சிறிதளவு தெரிந்திருப்பது நல்லது. தாவரங்களும் — அதாவது புல் பூண்டு செடி கொடி மரம் ஆகியவை யாவும் — உயிர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். மக்கள், மிருகங்கள், பறவைகள் போன்ற உயிர்களுக்கு எப்படிப் பிறப்பு வளர்ச்சி இறப்பு என்ற மூன்றும் பொருந்துகின்றனவோ அப்படியே மேற்சொன்ன தாவர உயிர்களுக்கும் பிறப்புண்டு, பின் வளர்ச்சியுண்டு, முடிவாக இறப்பும் உண்டு. இந்த அடிப்படையான உண்மையைக் குறித்து அதிக விளக்கம் தேவையில்லை.

மற்றெல்லா உயிர்களுக்கும் இருப்பவை போலவே, செடி கொடிகளுக்கும் தனித்தனியான உறுப்புக்களும், அவற்றுக்குரிய தனித்தனியான வேலைகளும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. இவ்வுறுப்புக்கள் யாவும் தம் தம் வேலையை முறையாகச் செய்தால்தான் செடி கொடிகள் வளரும்; இல்லையானல் அவை இறந்துவிடும்.

விதையிலிருந்து ஒரு செடி பயிராகிறதென்று நாம் கொள்வோமானல்; முதலாவதாக அந்த விதையை ஓர் உறுப்பென்று கொள்ளலாம். பின்னர் விதை முளைத்து இலை விடக் காண்கிருேம்; அவ்விலைகள் மற்றோர் உறுப்பு. இலையைத் தாங்கி நிற்கிற முளையானது நாளடைவிலே பெருத்துத் தண்டு அல்லது அடி மரமாகிறது; இது மற்றோர் உறுப்பு. செடியின் வளர்ச்சிக்கு ஆதாரமாயிருப்பது, பூமியினுள் செல்லும் வேர். கடைசியாகச் செடியானது பூவிட்டுக் காய்த்துப் பழுத்துப் பின் காய்ந்து போகிறது; அதில் விதை எடுக்கிருேம். இவ்விதை தோன்றுவதற்குக் காரணமான பூ மற்றோர் உறுப்பு. ஆகவே நாம் இங்கு முக்கியமான ஐந்து உறுப்புக்களைக் காண்கிருேம்.

இவ்வைந்திலும், உண்மையாகவே செடியின் வளர்ச்சிக்கு உதவுபவை வேர், இலை ஆகிய இரண்டும். வேரானது, தரைமட்டத்துக்குக் கீழிருந்து மண்ணிலுள்ள சாரத்தையெல்லாம் காற்றின் துணை கொண்டும் ஈரத்தின் துணை கொண்டும் உண்டு உணவாக மாற்றிச் செடிக்கு அனுப்புகிறது. பெரிய மரங்களின் வேர்களிலே முக்கியமானது ஒன்று, செங்குத்தாக நிலத்தில் ஆழமாய்க் கீழ் நோக்கிச் செல்லும்; இது ஆணி வேர். இவ்வேரின் கிளைகள் மண்ணில் நாற்புறத்திலும் பரவியிருக்கும். இவை பக்க வேர். இவை ஒவ்வொன்றிலு மிருந்து நுட்பமான எண்ணற்ற வேர்கள் பிரிந்து சென்று, மண்ணெங்கும் பரவி, உணவைக் கிரகிக்கும்; இவை சல்லி வேர். இவ்வேர்கள் யாவும் சேர்ந்து தான், செடியையும் மரத்தையும், காற்றினலும் மழையினலும் அசைந்து விழாதபடி செய்து, செங்குத்தாக நிறுத்துகின்றன.

செடிக்கு வேர் வாயாகப் பயன்படுவதுபோல, இலை மூக்காகப் பயன்படுகிறது. இலையானது, சுற்றியுள்ள வாயு மண்டலத்தி லிருக்கும் காற்றில் தனக்கு வேண்டிய பகுதியைக் கிரகித்துச் செடிக்கு அளிக்கிறது; இவ்வேலை, மற்ற உயிர்கள் மூச்சு விடுவதை ஒக்கும். தவிர, செடிக்கு வேரின் வழியாக வரும் ஈரத்தில் உபயோகமானது போக மிகுதியை, இலையே காற்றில் விட்டுவிடுகிறது.

---

*செடி கொடிகளின் வாழ்க்கை ஆராய்ச்சி மிக்க ரசமான விஷயமாகும். அது பற்றிய இந்தக் கட்டுரை, 'சக்தி காரியாலய' வெளியீடான '**காய்கறித் தோட்டம்**' என்ற புத்தகத்தின் ஒரு சிறு பகுதி. கறிகாய்களுக்கு அவதிப்படும் இந்தக் காலத்தில், நகரில் உள்ளோர் கூட்ச் சிறு தோட்டம் போட்டுக் கொள்ள, வழி காட்டும் புத்தகம் அது.*

இவ்விதமாக, செடிக்கு வேரும் இலையுமே உண்பதற்கும் சுவாசிப்பதற்குமுரிய வாயில்களா யுள்ளன. மற்ற உறுப்புக்கள் செடியின் வளர்ச்சிக்குத் தேவையா யில்லாவிட்டாலும், வேறு வழிகளில் உபயோகப்படுகின்றன. தண்டானது, செடி வளர வளர, மரத்தன்மை பெற்றுப் பெருத்துச் செங்குத்தாய் நிற்க உதவுகிறது.



தவிர, வேரின் மூலமாய்ச் செடியின் இலைகளுக்குச் செல்லும் உணவு இத்தண்டின் உள்ளாகச் செல்லுகிறது. இலைகளும் கிளைகளும் இதனிடமாகவே தோன்றுகின்றன. தண்டின் மேற்புறத்திலே நார்போன்ற பட்டை; அதன் உட்புறத்தில் மரத்தன்மை பெற்ற பாகம்; இதனுள் மத்தியிலே, சோறு என்னும் பகுதி இருக்கிறது. இதன் வழியாகவே செடிக்குரிய உணவானது சாறு ரூபத்தில் பரவுகிறது. உடம்பின் தோல்போன்றது பட்டை. இது, உள் மரத்துக்குக் கெடுதி நேராதபடி காக்கிறது; இதிற் சிறிது கெடுதி நேரிட்டாலும், பிறகு எளிதில் தானே கூடிவிடும் இயல்பு வாய்ந்தது.

வளர்ந்து முதிர்ந்த செடி, பூத்துப் பூபிஞ்சாகி முற்றிக் காயாகிக் கனிந்து பழமான பின் விதை தருகிறது. பொதுவாக இவ்விதையே இன உற்பத்திக்கு ஆதாரமா யிருக்கிறது. எனவே, விதையைத் தருகிற பூ, செடியில் ஒரு முக்கிய உறுப்பாகிறது. பூவுக்குத் தனித்தனியான சில பாகங்களுண்டு. முதலாவதாக, பூவைத் தாங்கி நிற்கும் காம்புக்கு அடுத்தபடியாக உள்ளது பூவின் புறவிதழ் (1) இது **புல்லி** எனப்பெறும்; பசுமையான நிறமுடையது. அடுத்துள்ளது பூவின் அக இதழ்கள் (2). இவை **அல்லி** எனப் பெயர் பெறும். இவை பலவேறு நிறங்க ளுடையன. இவ் விதழ்களுக் குட்புறமாக அமைந்துள்ள பிற பாகங்களே, பூ காயாக மாறுவதற்குக் காரணமா யிருப்பவை. பூவின் மத்திய பாகத்தி லிருந்து முளைத்து ஏறக்குறைய இதழ் முனை வரையில் சில மெல்லிய கம்பிகள் வளர்ந்து வந்திருக்கும். இவை **மகரந்தக் கம்பிகள்** (3). இவற்றின் நுனியிலுள்ளது **மகரந்தப் பை** (4). இவற்றுள் அமைந்துள்ள மென்மையான நுண்பொடியே **மகரந்தம்** என்பது. இம் மகரந்தமானது, பூவினடியில் இதழ்கள் பிரியும் இடத்துள்ள **கருப்பை**யில் (7) சேர்ந்தால்தான், பூவில் காய் பிடிக்கிறது. மகரந்தக் கம்பிகளின் இடையில் சிறிது பசைப் பிடிப்புள்ள மற்றொரு கம்பி இருப்பது தெரியவரும். இது **கிலம்** (5) எனப்படும். இதன் நுனியில் நுண்ணிய துவார முண்டு. இதன் கம்பியாகிய கிலக்குழாய் (6) வழியாக, மகரந்தப் பைகளிலுள்ள மகரந்தம் சென்று அடியிலுள்ள கருப்பையை (அண்டாசயத்தை) அடையும் போது, பூ காயாகிறது. இக்காய் முற்றவும், அதனுள் விதைகள் தோன்றுகின்றன. இவ் விதைகளே செடியின் உற்பத்திக்குக் காரணமா யிருப்பவை. மகரந்தத் தூள் (இதுவே பராகம் என்றும் சொல்லப் பெறும்) கருப்பையை அடையாதவரை காய்கள் உற்பத்தியாகமாட்டா.

மகரந்தத் தூள் இலக்குழாய் வழியாகக் கருப்பையை யடைந்து, கருவாகிப் பின் காயாக மாறி, விதை யுண்டாவது, பெரும்பான்மையும் இயற்கையில் நிகழும் நிகழ்ச்சி. இயற்கையில் நிகழ்வதாவது: காற்றடிப்பதனால் அத்தூள் மகரந்தப் பையினின்றும் சிதறி, அருகிலுள்ள பசைப் பிடிப்புடைய இலத்தில் தானே ஒட்டிக் கொண்டு கருப்பையை அடையும். ஒரு பூவிலுள்ள மகரந்தத் தூளானது, இவ்விதமாக அதே பூவின் கருப்பையைத் தான் அடையும். தேனுண்பதற்காகப் பூவிலே வண்டும் தேனீயும் வண்ணாத்திப்பூச்சியும் பிறவும்வந்து உட்காரும் போது, அவற்றின் கால்களிலும் துதிக்கையிலும் இம் மகரந்தம் ஒட்டிக் கொண்டு, பிறகு அவ்வண்டுமுதலியன வேறு பூவில் போய் அமரும்போது, அதில் உதிர்ந்து போகும். இப்படி உதிர்ந்து போகும் மகரந்தத் தூளின் பகுதி, அவ்வேற்றுப் பூவின் இலத்தில் ஒட்டிக் கருப்பையை அடைதலும் உண்டு. அடைந்தால் சிலசமயம் கருப்பிடித்துக் காயாகும். இப்படி உண்டாகின்ற காய், இயல்பான மகரந்தச் சேர்க்கையால் அச்செடியிலுண்டான காயினும் வேறாக இருக்கும்; விதைகளும் வேறாகவே இருக்கும். இவ்வகையினால், ஒரே காய்கறி வகையில் பல வேறு உருவங்கள், நிறங்கள் முதலியன பிறக்கின்றன. உதாரணமாக, கத்தரிக்காயைப் பார்க்கலாம். வெள்ளை, சிவப்பு, நீலம் எனப் பல நிற வேறுபாடுகள்; நீளம், குட்டை, உருண்டை, திரட்சி என வடிவ வேறுபாடுகள்; பெரியது, சிறியது, முள்ளுடையது, நாருடையது என்ற வேறுபாடுகள் - இவை யாவற்றுக்கும் காரணம், மேற்சொன்னபடி உண்டான வேற்று மகரந்தச் சேர்க்கைதான்.

இனி, செடியின் உற்பத்திக்கு மூலமாயுள்ளது விதை. அவரை விதையொன்றைக் கவனித்தோமானால், அது இரண்டு பருப்பாயிருப்பது தெரியவரும். பருப்புக்களின் இடையிலே நுண்ணிய முளை அமைந்திருக்கிறது. பருப்புக்களைச் சுற்றி மெல்லிய தோல் மூடியிருக்கிறது. இத்தோல்தான், காற்றினாலும் தட்பவெப்பத்தாலும் முளை கெடாதபடி காக்கிறது. விதையை மண்ணினுள் ஊன்றிச் சிறிது நீர் வார்த்தவுடனே, விதையை மூடிய தோல் அந் நீரில் ஊறுகிறது. ஊறியபின், சிறிது ஈரம் உட்சென்று பருப்பையும் முளையையும் பிடிக்கிறது. பருப்பினுள் அடங்கிய முளைப்புறம் அப்படியே நிற்க, அதன் மறுபுறத்தில் வேர் வளர்கிறது. வளர்ந்து தோலைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டு, மண்ணில் ஊன்றிக்கொள்கிறது. இவ்வாறு இது நன்றாய் ஊன்றி மண் சாரத்தை இழுத்துக் கொள்கிறவரையில், பருப்பினுள் அடங்கிய சத்தைக்கொண்டு முளை வளர்ந்து வருகிறது. விதை முளைப்பதற்கும், முளை வளர்வதற்கும் ஏற்றபடி, பருப்பு முதலியவற்றைச் சத்துள்ளனவாக அமைத்து வைத்திருப்பது, இயற்கையின் அற்புத மென்றுதான் சொல்லவேண்டும்.

பருப்புக்கள் இரண்டும் இரண்டு இலைகள் போல் இரு புறமும் விரிந்து நிற்க, முளைத்த செடி, கீழே வேர் ஊன்றிச் செல்லச் செல்ல, மேலே புதுத் தளிர்விட்டு வளர்ந்துகொண்டே போகிறது. விதை முளைக்கத் துணையாயிருப்பவை, ஈரமும் காற்றுமே யாகும். முளைத்தபின், வேரானது கொஞ்சம் கொஞ்சமாய் நிலத்திலுள்ள சாரத்தை இழுத்துச் செடிக்கு உதவத் தலைப்படுகிறது. இச் சாரத்தை உண்டு, இலைகள் மூலமாய்க் காற்றைச் சுவாசித்துச் செடி வளருகிறது.

செடியின் வாழ்க்கையிலுள்ள பொதுவான அம்சங்கள் இவ்வளவே.

✲

சயின்ஸ் நிபுணர் வல்லமை:—ஐயாயிரம் வருஷங்களுக்குப் பின்பு உலகம் எப்படியிருக்கப்போகிறது என்பதை அப்படியே சித்திரம் செய்து காட்டிவிட வல்லவர்கள் சயின்ஸ் நிபுணர்கள். ஆனால், அடுத்த வாரம் ஐரோப்பாவில் என்ன நடக்கப்போகிறது என்பதைச் சொல்ல மாத்திரம் தான் அவர்களால் முடியாது.

—ஒரு மேல்நாட்டுப் பத்திரிகை

சொல் அழகு

16 NOV 1945
MADRAS

[illegible] ர.

'சொல் வேண்டும்; ஒரு சொல் வேண்டும்' என்று தேவர்களை வேண்டுகிறார் பாரதியார். 'தேவர் வருக வென்று சொல்வதோ?—ஓம் என்றுரைத்துவிடில் போதுமோ?— உண்மை ஒளிர்க வென்று பாடவோ?' என்றெல்லாம் தியங்குகிறார். எதற்காக? 'வண்மை யுடைய தொரு சொல்லினால், உங்கள் வாழ்வு பெற விரும்பி நிற்கிறோம்' என்று தேவர்களுக்கு அவர் தெரிவிக்கிறார். சொல்லுக்குத் தவிப்பவர்களுக்குத் தான், இதன் கருத்துப் புலனாகும். 'வையத்தையே பாலித்திட' ஆசை கொண்டவர், கவியரசர் பாரதியார். அதற்கு அவர், சோலும் வாளும் கேட்கவில்லை. 'சொல்' தான் வேண்டும் அவருக்கு-மந்திர சக்தி வாய்ந்த சொல்.

ஆனால், ஒரு ரகசியம். அது பாரதி அறிந்ததுதான். ஏனென்றால், அதற்கு அவருடைய பாட்டுகளே சாட்சியமாகும். அது என்ன ரகசியம் என்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன்: மந்திர சக்தி வாய்ந்தது என்று தனியாகச் சொல் எதுவும் கிடையாது. ஒவ்வொரு சொல்லுமே மந்திர சக்தி வாய்ந்ததுதான். பிரயோகிக்கும் லாகவம் தெரிந்து பிரயோகித்தால், எந்தச் சொல்லுமே மந்திர சக்தி பெற்றுவிடும். நம்மில் ஒவ்வொருவரும், அநேக சமயங்களில், சொற்களைப் பிரயோகிக்கும் வழி தெரியாமல், தவித்துத் திணறுகிறோம். நாம் திணறுவது மாத்திரம் அல்ல; பதினாயிரம் வகையில் ஒரு சொல்லையுமே சித்திரவதை செய்துவிடுகிறோம்.

அகராதியில் இருக்கிறவரையில், ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. பிரயோகத்திலே தான் சொற்கள் பொருள் பெறுகின்றன; ஜீவன் பெறுகின்றன; சக்தி பெறுகின்றன. சொற்களின் ஆட்சி நயமும், கைக்குக் கை, இடத்துக்கு இடம், சமய சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு மாறுகிறது. கால தேச வர்த்தமானங்களை அனுசரித்து, சொற்கள் சில சமயம் நாம் எதிர்பாராத அர்த்தங்களையும்கூடப் பெற்று விடுகின்றன.

பல வருஷங்களுக்கு முன்னே, என் வீட்டில் ஒரு சம்பவம் நடந்தது. அதை இன்று நினைத்தாலும், எனக்கு ஒரு புறம் சிரிப்பு வருகிறது; மறு புறம் துயரமும் வருகிறது. நான் சின்னஞ் சிறு பையன். தாயை இழந்துவிட்டேன். வீட்டிலே தகப்பனாரும் நானும் தான். எங்களுக்குச் சமைத்துப் போட, ஒரு சொந்தக்காரி வந்து சேர்ந்தாள். அந்தச் சொந்தக்காரிக்கும் ஒரு மகன் உண்டு. அவன் பெயர் சீனு என்று ஞாபகம். சீனுவும் தன் தாயுடன் எங்கள் வீட்டிலேயே வசிக்கலானான். அவனும் நானும் மிகவும் சிநேகமாகிவிட்டோம். ஒன்றாய்ப் படிப்போம்; விளையாடுவோம். இப்படி யெல்லா மிருந்தும், திடீரென்று ஒரு நாள் ஒரு விபரீதம் நடந்தது. அதாவது, என்னை யறியாமலே நான் ஒரு குற்றவாளியாகி விட்டேன். எப்படி என்றால், அதுதான் வேடிக்கை.

சின்ன வயதில், யாருக்குமே கதை கேட்பதில் வெகு பிரியம். கதைகளில் வரும் விசேஷ வசனங்கள், பழமொழிகளை மனனம் பண்ணுவதும் வழக்கம். நானும் இதற்கு விலக்கல்ல. யாரிடமாவது புதுப் புதுக் கதைகள் கேட்பேன். மூடனும் செட்டியாரும் பிரயாணம் சென்ற கதையை, அப்போதுதான் யாரோ எனக்குச் சொல்லி யிருக்கிறார்கள். வழியிலே

மொழி வளர்ச்சிக்குப் புத்தகாசிரியன் எப்படி உதவுகிறான்? இதுபற்றிச் சென்னை ரேடியோ நிலயத்தில் ஆகஸ்டு-மீ 15-உ பேசிய பேச்சு இது. நிலயத்தாரின் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

இருட்டிவிட்டது. செட்டியார் மடியிலே பணப்பை இருந்தது. அவர் ஜாக்கிரதையாய், சாலை ஓரத்தில் ஒதுப்புறமாய்ப் படுத்தார். மூடன் நடு ரோட்டிலே 'ஹாய்' யாகப் படுத்து விட்டான். யாரோ திருடர்கள் வழியோடு போனார்கள். முன்னே வந்தவன் காலிலே மூடன் இடறினான். "அண்ணே! இங்கே ஒரு மரக்கட்டை கிடக்குது; பார்த்து வா" என்றான் முதல் திருடன். "ஓஹோ! உங்க வீட்டு மரக்கட்டை, வேட்டித் தலைப்பிலே காலணாக் காசையும் முடிஞ்சுக்கிட்டு, இப்படித்தான் படுத்துக் கிடக்குமோ?" என்று கேட்டான் மூடன். சும்மாப் போன திருடர்கள், மூடனின் அந்தக் காலணாக் காசைப் பிடுங்கிக் கொண்டு நடந்தார்கள். போகும் போதே, "அண்ணே! இந்தக் காசு செல்லுமோ, என்னமோ?" என்று கேலியாகப் பேசிக் கொண்டார்கள். மூடனுக்கு இது பொறுக்குமா? "என் காசா செல்லாக் காசு? செல்லும் செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார், அதோ அந்த மரத்தடியிலே. போய்க் கேளுங்க" என்றான் மூடன். செட்டியார் இருந்ததை அறியாத திருடர்கள், இந்த மூடனின் உளறலால் அறிந்து, அவருடைய பணத்தையும் அடித்துப் பறித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

'செல்லும் செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார்' என்ற இந்தப் பழமொழியைக் கேட்டதிலிருந்து, நாலைந்து நாள் வரைக்கும், ஓயாமல் இதை முணு முணுத்துக் கொண்டேயிருந்தேன். நான் கண்டேனா, இதற்குள்ளே என்னென்னவோ அர்த்தம் புகுந்திருக்கிறதென்று! கல்மஷம் எதுவும் இல்லாமலேதான், நான் இதை உச்சரித்தேன். அந்தச் சொந்தக்காரி, முன்னே என்னிடம் மிக்க பிரியமாகவே இருந்தாள். இப்போது, இரண்டு மூன்று நாளாய் என்னைக் கண்டால் ஒரு தினுசாய் முறைத்துப் பார்க்கத் தொடங்கி விட்டாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் வழக்கப்படியே நடந்து கொண்டேன். நாலாவது நாள், அவளால் தாளவில்லை போல் இருக்கிறது. சொந்தக்காரி ஒரு பரதேவதை போல் சீறிக்கொண்டு கூடத்துக்கு வந்தாள். அங்கே நானும் என் தகப்பனாரும் இருக்கிறோம். "அடே சீனு! இங்கே வாடாப்பா. இனிமேல் ஒரு க்ஷணமும் இந்த வீட்டிலே நாம் இருக்கப்படாது. பார்த்தால் பசுப்போலே, பாய்ந்தால் புலி போலே யிருக்கிறது இந்தப் பிள்ளை. நாம் இங்கே ஒரு நிமிஷம் தாமதித்தாலும் குடி கெட்டுப் போய் விடும்" என்று அவள் கூச்சலிட்டாள். மகன் சீனுவைக் கையைப் பிடித்துக் கரகர என்று இழுத்துக் கொண்டு வாசற் பக்கமாய்ப் போய் நின்று கொண்டாள். "அடே மகராஜா! என் கையை மடியை நன்னாய்ப் பார்த்துக்கோ! ஒண்ணும் இல்லே" என்று என்னைப் பார்த்து உறுமி, சேலைத் தலைப்பை உதறிக் காட்டினாள். நான் திகிலடைந்தேனே யொழிய, அவள் சொன்னது ஒன்றும் எனக்குப் புரியவில்லை. "ஏ மிருத்யு! நீ என்னடா சொன்னாய்?" என்று என்னைக் கேட்டார் தகப்பனார். நான் மௌனம் சாதித்தேன்.

"ஏண்டா இடிச்ச புளி மாதிரி நிக்கறே? சொல்லேண்டா - சொல்லேன்" என்றாள் சொந்தக்காரி.

என்னத்தைச் சொல்வது? ஏதாவது விளங்கினால் தானே சொல்ல?

"நாலா நேத்திக்கி, ஒரு வாய் அவல் இருந்துது. சீனுவுக்குப் பழையது கூட இல்லை. பட்டினி கிடக்கிறதேன்னு, அதுங்கிட்டக் கொடுத்துட்டேன். அந்த அவலை அவன் கிட்டக் கொடுத்ததிலே யிருந்து, 'செல்லும் செல்லாததுக்குச் செட்டியார் இருக்கார், இருக்கார்'னு ஓயாமெ ஜாடை சொல்றது இந்தப் படுவட்டு" என்றாள் சொந்தக்காரி.

அப்போதுதான் எனக்கு ரகசியம் விளங்கியது. நான் கேட்ட கதையிலுள்ள பழமொழிக்கு, இப்படி ஓர் அர்த்தம் கிளம்புமென்று நான் எதிர்பார்க்கவே யில்லை. 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட' கதைதான் இது!

நானும், அதற்கு மேலே என் தகப்பனாரும் எத்தனையோ சமாதானம்

சொல்லியும், சொந்தக்காரியும் அவள் மகனும் கேளாமலே வெளியேறி விட்டார்கள்.

இதை எதற்காகச் சொன்னேன் என்ருல், சொற்களுக்கு இயற் பொருளைவிடத் தொனிப் பொருள் அநேக சமயங்களில் மிக்க வலிமை யுடையதா யிருக்கிறது என்று குறிப் பிடத்தான். சமய சந்தர்ப்பங்களால் தான், தொனிப் பொருள் விளைகிறது.

நம் மனதிலே தோன்றும் கருத்துக் களை வெளியிட, சொற்களை ஒரு கோவைப்படுத்தி உபயோகிக்கிருேம். ஆனல், அப்படி வெளியிடும் கருத்து, பிறருடைய அறிவை மட்டில் தாக்கி னல் போதாது; உள்ளத்தையும் தாக்க வேண்டும். அப்போதுதான் அதற்குப் பயன் உண்டு. ஒரு கருத்தைச் சொல் லும் விதமாய்ச் சொல்லவேண்டும்; எதிரிக்குப் புரியும்படி சொல்லவேண் டும்; அவன் உள்ளம் பூரிக்கும் வித மாகவும் சொல்லவேண்டும். இந்த மூன்றிலும் எத்தனைக்கெத்தனை ஒரு வன் வெற்றிபெறுகிருனே, அத்தனைக் கத்தனை அவன் சொல் பிறர் மன தைக் கவர்கிறது. இதுதான் புத்த காசிரியனின் வேலை.

மனதிலே விஷயம் நிறைய இருக்க லாம். ஆனல், அதை வெளியிடும் வகை தெரியாத வரையில், தவிக்க வேண்டியதுதான். பல சமயங்களில், பளிச்சென்று நமது மனதில் ஓர் உண்மை உதயமாகிறது; அளவற்ற ஆனந்தம், அதிசயம், வேதனை, குது கலம் முதலிய உணர்ச்சிகள் நம் உள்ளத்திலே உண்டாகின்றன. ஆனல், இவைகளைப் பிறருக்கு வர் ணித்துச் சொல்ல முடியாமல் திக்கு முக்காடிப் போகிருேம். 'மனதில் இருக்கிறது; வாயில் வரமாட்டேன் என்கிறதே!' என்று ஏங்குகிருேம். பிறருக்கு எடுத்துச் சொல்ல, நமக்கு அனுபவம் வேண்டும்; கருத்து வேண் டும். இந்த இரண்டும் மட்டில் இருந் தால் போதாது. சொல்லச் சொல் வேண்டும்; அந்தச் சொல்லைச் சொல் லும் முறையும் தெரியவேண்டும். சொல்லுக்கு என்ன பஞ்சம்? அக ராதி நிறைய வார்த்தைகள் இருக் கின்றன. வாழ்க்கையிலும் எத்த னையோ வார்த்தைகள் அடிபடுகின் றன. ஆனல், அவைகளை உபயோ கிக்கும் லாகவம் அல்லவா கைவர வேண்டும்? இந்த வித்தையிலே தேர்ந் தவன்தான் புத்தகாசிரியன்.

புத்தகாசிரியனுக்கு, சொற்கள் ஒரு சாதனமாகும். அவன் அவற்றைக் கொண்டு விதம் விதமான கருத்துக் களை வெளியிடுகிருன்; உணர்ச்சிகளை எழுப்புகிருன். தன்னை யார் படிக்க வேண்டு மென்று எண்ணுகிருனே, அவர்களுக்குப் புரியும் சொற்களை அவன் கையாளுகிருன். முன் காலத் திலே, ஒரு கம்பனுக்கு ஒரு சடையப்ப வள்ளல் இருந்தார்; ஒரு புகழேந்திக்கு ஒரு சோழன் இருந்தான். அந்த நாட் களில், புலவர்களுக்கு அரசர்களும் சீமான்களும் வாரி வாரிப் பரிசு வழங்கினர்கள். இந்தக் காலத்துப் புத்தகாசிரியர்களுக்கோ, சடையப் பரும் சோழனும் பொது மக்கள் தான். இது ஜனநாயக காலம். ஒரு புத்தகாசிரியனுக்கு, எவ்வளவுக்கெவ் வளவு அதிகமாய்ப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவுதான் அவன் பேரும் பெருமையும் அடைகிருன். ஆகை யால், முன் காலத்து நூலாசிரியர்கள் சொற்கள் விஷயத்தில் என்ன முறை யைக் கையாண்டாலும் சரிதான்; தற்காலத்துப் புத்தகாசிரியர்கள், மிக ஏராளமான மக்களுக்குப் புரியத்தக்க சொற்களையே பெரும்பாலும் உப யோகிக்கவேண்டி யிருக்கிறது.

அதாவது, பாமரனுக்கும் புரியத் தக்க சொற்களில் அவர்கள் எழுதி ஞல்தான், அவர்கள் எழுத்துக்குப் பயனும் புகழும் உண்டு. பாஷைப் பிரபுக்களான பண்டிதர் கள், தாங்களே இலக்கிய பாஷை யின் பூஜாரிகள் என்று பாத்தியம் கொண்டாடக் கூடிய காலம் மலை யேறிவிட்டது. புத்தகங்களிலும், பத் திரிகைகளிலும் தற்காலம் நடை முறையிலுள்ள ஜீவ பாஷைக்குத் தான் மதிப்பு உண்டு. இங்கே மட்டிலு மல்ல; உலகெங்குமேதான்.

பொதுமக்கள் பேசும் பாஷை, எல்லாக் காலத்துக்கும் ஒரே விதமாய் இருக்க முடியாது. வழக்கொழிந்து செத்த பாஷைகள் வேண்டுமானால், எல்லை கட்டி முளையடித்துக் கிடக்கலாம். ஜனவழக்கில் உள்ள எந்த ஜீவ பாஷையும், சரித்திரப் போக்கிலும் வாழ்க்கை மாறுதல்களாலும், திரிந்து கொண்டேதான் இருக்கும். அதிலே புதிய சொற்கள் வந்து குவியும். அந்நியரின் கருத்துக்களும் புதுமையான அனுபவங்களும், புதிய சொற்களைப் பிறப்பிப்பது மட்டிலுமல்ல; புதிய புதிய பதத்தொடர்களையும் மரபுகளையும் வாக்கிய அமைப்பு முறைகளையும் கூடத் தோற்றிவிடுகின்றன. தற்காலத்துப் புத்தகாசிரியன் இவைகளை யெல்லாம், புத்தக வழக்குக்குக் கொண்டு வந்து, பாஷைக்கு வளங்கொடுக்கத் தயங்குவ தில்லை.

ஆனால், ஓர் எச்சரிக்கையைக் கைக்கொள்வது நலமாகும். புதுமையாக வரும் எதையும் உடனே உபயோகித்துவிட, அவன் துடித்துக் கொண்டிருக்கக்கூடாது. புதிய சொற்கள், பதத் தொடர்கள், மரபுகளைக் கைக்கொள்வதிலும், நலிந்து நழுவும் பழைய சொற்கள் முதலியவற்றைக் கைவிடுவதிலும், அவனுக்கு ஒரு நிதானம் வேண்டும். போதிய அளவு வழக்கிலே ஊன்றி விட்டவைகளைக் கொள்ள வேண்டும்; அடியோடு வழக்கிலிருந்து ஆட்ட மெடுத்தவற்றைத் தள்ள வேண்டும். மனம்போனபடியெல்லாம், அவற்றைக் கொள்ளவோ தள்ளவோ கூடாது. அப்படிச் செய்தால், அந்த ஆசிரியனுக்குத்தான் நஷ்டமாகும். வழக்கொழிந்து செத்த புரியாத பாஷையில் பேசுவது எவ்வளவு அறியாமையோ அவ்வளவு அறியாமைதான் வழக்கிலே பலமாய் நிலைப்படாத புரியாத பாஷையில் பேசுவதும். "நாகரிக மோஸ்தர்கள் எப்படியோ அப்படித்தான் சொற்களின் விஷயமும். புதிய சொற்களைப் பரீட்சிப்பதில் முதல் ஆளாய், இராதீர்கள்; பழைய சொற்களைத் தள்ளுவதில் கடைசி ஆளாயும் இராதீர்கள்" என்று, போப் என்ற ஆங்கிலப் புலவர் சொல்லியிருப்பதை, நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன். எல்லாருமே இப்படி ஜாக்கிரதைப் பட்டுவிட்டால், பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற கதை ஆகிவிடுமே என்று நண்பர்கள் கேட்கலாம். அந்தக் கவலை நமக்கு வேண்டியதில்லை; யாராவது புண்ணியவான்கள் கட்டுவார்கள். அவர்களுடைய பாக்கியத்தை நாம் ஏன் கெடுக்க வேண்டும்?

✲

இங்கிலாந்தில் நடந்தது

ஒரு குழந்தைக்குப் புட்டிப் பால் கொடுக்கும்படி, மருத்துவச்சி சொன்னாள். பால் டிப்போ வியாபாரியிடம் போனால், அவன் டாக்டர் அத்தாட்சி கேட்டான். அடுத்த நாள் டாக்டர் அத்தாட்சி கொடுத்தார். அதைக் கொண்டுபோனதும், "இது உணவு அதிகாரியிடம் போய் வர வேண்டும்" என்றான் வியாபாரி. உணவு அதிகாரியின் காரியாலயம் அன்று மூடியாகி விட்டது.

மறுநாள் அங்கே போனபோது, "குழந்தையின் ஜனன அத்தாட்சி வேண்டும்" என்று அங்குள்ளோர் கேட்டார்கள். அது சனிக்கிழமை. சனி, ஞாயிறு விடுமுறையாதலால், ஜனன மரண ரெஜிஸ்திரார் எங்கேயோ போய்விட்டார். அவர் திங்கட்கிழமை திரும்பி வந்து, குழந்தையின் ஜனன அத்தாட்சி கொடுத்தார். குழந்தை இதற்குள் பரலோகம் போய்விட்டது.

பாதிரியிடம் போய்க் குழந்தையைப் புதைக்கவேண்டு மென்றார்கள். "டாக்டரிடம் போய் மரண அத்தாட்சி வாங்கி வாருங்கள்" என்கிறார் இப்போது பாதிரியார்!

—வொர்ல்ட் டைஜஸ்ட்.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி
லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000
நூற்கும்
கதிர்கள்

ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்

நம்பர்
80 வரை
நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதர்கவும் கூறுகிறுர்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,
மானேஜர்கள்

MYSORE SANDAL
OIL
இன்றுவரை
நிகரற்றது.
கிடைக்கக்கூடிய சந்தன அத்தர்களில் மைசூர்
சந்தன அத்தர்தான் மிக உயர்ந்ததும் சுத்த
மானதும் ஆகும். வைத்திய உபயோகத்
திற்கோ அல்லது சோப், இதர வாசனை திர
வியங்கள் தயார் செய்யவோ மைசூர்'
பெயர் கொண்ட சந்தன அத்தருக்கு
மிஞ்சியது ஒன்றுமில்லை.
மைசூர்
சந்தன அத்தர்
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.
MSK-9-TM

ஜீவாம்ருதம்
ஆண்மைக்கும்
ஆரோக்கியத்திற்கும்
ஆண்மைக்கும்
ஆரோக்கியத்திற்கும்
நிகரற்ற இந்த டானிக்
1898 வருஷம் முதல் பிரசித்தி பெற்
றது. இது நரம்புகளுக்கு வலுவை
யூட்டி எக்காலத்திலும் எதையும்
எதிர்த்து நின்று ஜெயிக்
கக்கூடிய சக்தியை
அளிக்கிறது.
ஆயுர் வேதாஸ்ரமம், மதராஸ்

ரயில்

லா. ச. ராமாமிருதம்

வாழ்க்கையின் சிக்கலே போன்று, தண்டவாளங்கள் பின்னியும் பிரிந்தும், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும், அதற்கு அப்பாலும் ஓடுகின்றன. அங்கங்கே ஆப்பு அறைந்தாற்போன்று தந்திக் கம்பங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. இரு மருங்கிலும் வயல்களும், குன்றுகளும் வீடுகளும், மரங்களும், பாய்ந்து சுழன்று செல்கின்றன. ஒரு சமயம் ஆகாயத்தின் முழு நீலம்; ஒரு சமயம் அதில் அடித்த பஞ்சைப் போன்ற வெண்மேகம்; ஒரு சமயம் அத்தனையையும் மறைக்கும் புகைப்படலம்.

இத்தனைக்கு மிடையில், அத்தனையினதும் நடுநாடி போல், அலுப்பற்று, ஒரே நிதானமான வேகத்தில், ஒரு ரயில் வண்டித் தொடர், மரவட்டை போல் நெளிந்து நெளிந்து, விரைந்து செல்கிறது.

'ஜன்னலைத் திற!'

'இல்லேடா கண்ணு—அங்கே உட்காரப் படாதுடா—'

'மாட்டேன்—அங்கேதான் உக்காரணும்—நான் ஜன்னல் வழியாப் பார்க்கணும்—ஐயோ—அம்மா—இதோ பாரேண்டி—அக்கா திறக்க மாட்டேங்கிறடி—!'

'சனி தொலையட்டும்; திறந்து விட்டுடேண்டி — எப்படியாவது அழாமலிருந்தால் போதும்—'

'இந்தா, தொலைச்சுக்கோ.'

வண்டிக்குள்தான் எத்தனைபேர்—எத்தனை விதமாய், உட்கார்ந்து, படுத்து, நின்று, குமைந்து வருகின்றனர்—எத்தனை விதமான பேர்கள்—எங்கெங்கிருந்து, எங்கெங்கேயோ போகிறவர்—

எஞ்சினின் ஊதல் ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு போகிறது—அதுவே ஒவ்வொருவருக்கு, அவரவர் மனத்திற் கேற்ப, ஒவ்வொரு விதமாய்ப் படுகிறது. ஒருத்தருக்கு இருப்புக் குதிரையின் உற்சாகமான கனைப்பா யிருக்கிறது. ஒருத்தருக்கு, பின்வரும் விபத்தின் முன்னோலைக் குறியாய் மனத்தில் 'சுறுக்'கென்று தைக்கிறது.

மூணு நாலு பேர் சேர்ந்தாற்போல் ஒரே பெஞ்சில் நெரிகின்றனர்—

'என்னப்பா—உன்னை நம்பி—'

'என்னத்தை என்னை நம்பி? நான் தான் அப்பவே சொன்னேனே—குதிரை என்னவோ நல்ல குதிரை தான்—ஆனால் அந்த ஜாக்கி ஏறினால் கோவிந்தாதான் என்று!—போனால்போறது போ—வர சனிக்கிழமை நைஜாம் பிளேட் இருக்கு, போ—'

'அட பாவி—என்னடா இருக்கு இருக்கு என்கிறே?—இன்னிக்குப் போனால் வீட்டில் அவள் மூக்கைச் சிந்திச் சிந்திப் போடுவளேடா!—எப்படியடா போய் முழிப்பேன்? அவளுக்கு அப்பப்போ குடும்பச் செலவுக்குக் கொடுக்கிற பணத்தில், அவள் மிச்சம் பிடித்து—கடுகு டப்பாவிலும் மிளகு டப்பாவிலுமாய்ப் போட்டு வைத்திருந்ததை யெல்லாம் பிராய்ந்து எடுத்துக்கொண்டு, முப்பதை முந்நூறாய்க் கொண்டுவறேன்னு சொல்லி வந்தேனே!—'

'என்னடா மூக்காலே அழறே? இங்கே மாத்திரம் வாழுறதோ?—ஸ்வஸ்திக் வளையல் ஒரு ஜோடி அடித்துப் போன மாஸம்தான் அவள் பிறந்த வீட்டில் போட்டார்கள்—இன்னிக்குக் கழட்டிகொண்டு வந்து

ரயில் பிரயாணம் ஒரு விநோதமாகும். அதிலே தான் எத்தனை எத்தனை விசித்திரங்கள், வேடிக்கைகள்! ஆனால், அதே மாதிரி இன்னொரு பிரயாணமும் நாம் அத்தனை பேரும் செய்கிறோம். அதிலே மாத்திரம், என்ன விபரீதம் இருக்கிறது? ஏன் கலக்க மடைகிறோம்?

இங்கே கப்பங் கட்டியாச்சு—எல்லாம் இப்படித்தான்—'

'ஒரு நாள் வரதுதான், ஒரு நாள் போறதுதான்—இதெல்லாம் பார்த்து முடியாதப்பா.'

'நீ என்னப்பா பண்ணுவே—இன்னிக்கு உனக்கு இந்த வேதாந்த மிருப்பது ஒண்ணும் விஞேதமில்லே—உன் ஜேபியிலே, லட்சணமாய் நூறு ரூபாய் நோட்டுக்கள் இரண்டு பதுக்கியிருக்கை யோன்னே!—'

'எனக்கு எல்லாம் ஒண்ணுதான்—இருந்தாலும் ஒரே பேச்சுத்தான்; இல்லாவிட்டாலும் அதே பேச்சுத்தான்; என்னவோ — என்னேயா— என்னேயா அவ்வளவு அவசரமாய் மேலே இடிச்சுண்டு ஓடறே!—எதிரே நிக்கறேனே கல்லாட்டமா, தெரியல்லே!—'

'இல்லே மன்னிக்கணும்—இந்த ஸ்டேஷனில்தான் இறங்கணும்—அடி பட்டுடுத்தா'

'அதெல்லாம் ஒண்ணுமில்லேன்ன! பரவாயில்லே போங்கோ—வண்டி பாஸாயிடுத்தே—'

'டிக்கட், டிக்கட்—'

'இதோ உள் ஜேபியிலே--ஐயையோ—'

'என்ன என்ன???—' வண்டி முழுவதும் ஒரே கலவரம், ஆரவாரம்.

'பைக்குள்ளே தேளா—? கொட்டிடுத்தா.'

'ஐயையோ! என் காசைக் காணேமே—கடியாரத்தைக் காணேமே—பர்ஸ்—டிக்கட்—'

'அதனுல் என்னப்பா—நீதான் சொன்னேயே — இருந்தாலும் ஒண்ணுதான், இல்லாவிட்டாலும் ஒண்ணுதான் என்று—எல்லாம் நீ சொல்லிக்கொடுத்த வேதாந்தம் தானே —'

'திருட்டா யார்! யார்!!—'

'யார், யார் என்ருல் உங்க கிட்டே சொல்லிக்கொண்டு போவன?—எல்லாம் அவரு, வழிகூட்டி யனுப்பிச்சாரே அந்த ஆசாமிதான், கைவெச்சிருக்கணும்—இல்லாட்டா அவனுக்கென்னேயா அவ்வளவு அவசரம், வண்டி புறப்படற சமயத்தில் இடிச்சுப் புடிச்சுண்டு இறங்கும்படியா?—'

'இதே மாதிரிதான் ஸார்—நான் பத்து வருஷங்களுக்கு முன்னுல் விருத்தாசல மார்க்கத்தில் போய்க் கொண்டிருக்கையில்—'

'—டாமிட்! டிக்கட், டிக்கட்—'

'ஒருத்தரையும் குற்றம் சொல்வதற்கில்லே. இந்த முழி பிதுங்கும் கூட்டத்தில் அவாளவாள் ஜேபியைப்பற்றியே சந்தேகம் வந்து விடுகிறது—தன் பையென்று நினைத்து இன்னெருத்தன் சட்டையில் கைவிட்டு விட்டான்—அவ்வளவு தான்—'

வண்டியின் ஊதல் எல்லாரையும் பரிகசிக்கிறது. விதியின் விலக்க முடியாத கதிபோன்றிருக்கிறது, வண்டி ஒரே திக்கில் செல்லும் தீர்மானம்.

'டேய், சொன்னத்தைக் கேளு—நீ ரொம்ப ரொம்ப எட்டிப் பார்க்கறே—காலே வாரி விட்டுடப் போறது—'

'நீ என் காலேப் புடிச்சுக்கோ—அதைவிட, உனக்கு என்னடி வேலே?—'

அந்தப் பக்கம் முழுதும் இதைக் கேட்டதும் ஒரே சிரிப்பு.

'பேஷ்—பிழைக்கிற பிள்ளேதான்—என்ன இருந்தாலும் ஆண் பிள்ளேகள் ஆளப் பிறந்தவர்கள் தான்.''

பிள்ளேயைப் பெற்றவளுக்கு உள்ளூர ஆனந்தம் பொங்குகிறது.

'என்னடா, உன்னக்கா உனக்கு இன்னமும் சிசுரூஷை பண்ணிண்டு இருக்கணுமா, அவளுக்குக் கலியாணம் ஆன அப்புறங்கூட?—போனுலும் போறதுன்னு ஒரு வார்த்தை சொன்னேயே, அதுவும் மாப்பிள்ளேயை எதிரே வெச்சிண்டு!—'

சர்க்கரை யென்று நினைத்து உப்பை வாயில் வைத்துக்கொண்ட முகம்போல், மாப்பிள்ளே மூஞ்சியில் அசடு வழிகிறது. கலியாண வெறி இன்னமும் தணிந்தபாடில்லே அவனுக்கு. மாமனுர் வீட்டில் க்ஷேத்ராடனம் போகப் போகிறுர்களென்று,

வீட்டில் கூடச் சொல்லிக் கொள்ளாமல், 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வந்திருக்கிறன். அவன் மாமியார் ஏதோ பெரும் வெற்றியைக் கண்டுவிட்டது போல், பெண்ணையும் மாப்பிள்ளையையும், ஒன்ருய் உட்கார வைத்துவிட்டு மனமகிழ்கிருள்.

அவனுக்குள் அவனையும் அவளையும் சுற்றித்தான் உலகமே சுழல்வதாய்த் தியானம். மணலில் தலையைச் சொருகிக் கொண்ட நெருப்புக் கோழிபோல், ஒருவரும் தன்னைப் பார்க்கவில்லையென்று அவன் நினைத்துக்கொண்ட போதெல்லாம், அவள் தோள் பக்கமாய்க் கையைப் போடுகிறன். இந்த விரசத்தில் தட்டும் வெறுப்பில் அவளுக்கு முகம் சுளிக்கிறது. அதே சமயத்தில் ஒரு திருட்டுச் சந்தோஷமும் அந்த வெறுப்பில் கலந்திருப்பதால், சுளிப்புக் கரைந்து மூறுவலாய் மாறுகிறது. இப்படியே-அவள் பக்கத்தில், அவள் புதுப்புடவை சலசலத்துக்கொண்டு, உடல் பட்டதும் படாததுமாய், இருவரும் உராய்ந்துகொண்டு, இப்படியே - ரயில் எப்பொழுதுமே எங்கும் நிற்காமல் போய்க்கொண்டே இருக்காதா?

'இந்த ரயில் எப்பொதான் நிற்குமோ தெரியவில்லை !—'

'ஏன் இப்படிக் கரித்தெடுக்கறேள்?—எப்பவோ ஒரு தடவை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் சேர்ந்தாப்போலே லீவு வரதே! வேளாவேளை எந்தெந்த ஊரிலே யிருந்தோ பெருமாளைச் சேவிக்கணும்னு வராள்—நாம் இப்படிப் பக்கத்து ஊரிலே யிருந்துண்டே ஒரு தடவையாவது பார்க்காம லிருக்கிறதான்னு கூப்பிட்டால்–'

'இதோ பார்—எனக்கு எங்கேயாவது போய்த் தலையைச் சாய்ச்சால் போதுமென்றிருக்கு—இத்தனை குழந்தையும் குட்டியும், மூட்டையும் முடிச்சுமாய்ப் போய், இந்தப் புண்ணியத்தைச் சம்பாதிச்சுண்டு வரணும்னு எனக்கு ஆசையே யில்லை—'

'உங்கள் கூட்டமே நாஸ்திகக் கூட்டம்தானே—உங்களுக்கெல்லாம் ஒரே ஆசைதான்—புகையிலையைப் போட்டுக்கொண்டு கண்ட இடத்தில் துப்பவும் சீட்டாடிக்கொண்டு இருக்கவுமே யொழிய—'

'அம்மா, தாயே—'

'நீங்கள் என்ன வேணுமானுலும் சொல்லலாம்—நீங்கள் சொன்னுலும் சொல்லாவிட்டாலும் நான் தாய் தான்—நானும் கலம் [கலம்=டஜன்=பன்னிரண்டு] பெற்ருயிடுத்து—'

'ஐயோ! நம்ம வமிசாவளி யெல்லாம் இங்கே வந்துகூடவா படிக்க வேண்டும் !—'

'ஏன் இப்படி—'

இல்லை, மற்றதொன்றும் கேட்கவில்லை. வண்டியின் ஊதல் எல்லாச் சத்தத்தையும் அடக்கி விடுகிறது.

தடக்—தடக்—தடக்—

வண்டி விழுங்க விழுங்க, தண்டவாளம், திரௌபதியின் துகில்போல் நீண்டுகொண்டே போகிறது. அது வளைந்து சுழன்று மறுபடியும் வெறித்துச் செல்லும் ரீதியைப் பார்க்கையில் அதுவும் காலத்தைப்போல் எல்லையே அற்றதுபோ லிருக்கிறது. எங்கெங்கெல்லாம் எப்படி யெல்லாம் போகிறது!—ஓர் இடத்தில், தாபத்தால் உடைந்த இதயம்போல், பூமி பளார் பளார் என்று அங்கங்கே, தண்ணீரே காணுமல் வெடித்திருக்கிறது. இன்னோர் இடத்தில், துக்கம் நிறைந்த உள்ளத்தினின்று பிழியும் கண்ணீர்போல், சதுப்பு நிலத்தில் ஜலம் கசிகிறது. இன்னெரு சமயம், இரு மருங்கிலும் கண்ணடித்தகடு வார்த்தாற்போல், ஏரியில் தண்ணீர் விளிம்பு கட்டி அசைவற்று நிற்கிறது.

ஒரு சமயம், கோபத்தில் வெதும்பும் மனம்போல், வானத்தில் மேகங்கள், கறுத்தும் வெளுத்தும் புழுங்குகின்றன. இன்னெரு சமயம் ஆகாயம் பிரேதம்போல் ஒரே நீலமாய்ப் பூரித்து இருக்கிறது.

ஒரு சமயம், மாலை வேளையில் மலரும் மலர்களின் மணம், மனத்தை மயக்குகிறது. மறுசமயம் ஜலதையில் வேகும் பிணத்தின் நிணம் மூக்கைப் பொசுக்குகிறது. வண்டி ஒரு மூலை

யில் திரும்பியதும், அதோ சவுக்கந் தோப்புக் கப்பால், சுடுகாட்டினின்று எழும் ஜ்வாலைகளே தெரிகின்றன.

வேளை முதிர முதிரக் கவியும் இருளில், ஒரு விளக்கு வெளிச்சம் மினுக்கென்று தோன்றுகிறது. கண்மூடி வழிகாட்டும் லட்சணம்போல், எட்டியும் கிட்டியும் நிலையற்று எரிகிறது.

ரயிலில் பெஞ்சியோரத்தில் ஒருத்தி இத்தனை பேரிடையிலும் தன்னந் தனியாய்ப் பதுங்கிக்கிடக்கிருள். பாம்பின் கண் பட்ட இரைபோல், பார்வை நிலை தவறி ஒரே குத்தலில் விறைத்திருக்கிறது. மார்த்துணி சரிந்திருப்பதுகூட அவளுக்குத் தெரியவில்லை. வண்டி அலறும்போதெல்லாம், அவள் கைகள் அவளை அறியாமலே, அடிவயிறைப் பிட்டாய்ப் பிசைகின்றன.

அவள் போய்ச் சேரும் இடத்தில் என்ன காத்திருக்கிறதோ அவளுக்கு! வண்டி இவ்வளவு சிக்கிரம் பிரயாண முடிவை நெருங்குகிறதே எனும் பயங்கரம் ஒரு பக்கம்; 'ஐயோ! இந்தச் சங்கடத்தை சகிக்கமுடியவில்லையே. ஒரே வழியாய்ச் சுருக்கப் போய்ச் சேர்ந்துவிடமாட்டோமா!' எனும் உள்ளப் பதைப்பில், உயிரே ஊசலாடுகிறது—

'ஐயோ நான் படும்பாடு, சிவனே— உலகோர் நவிலும் பஞ்சுதான் படுமோ —சொல்லத்தான் படுமோ!—'

'இதென்ன கஷ்டம்! நாம் இடமில்லாமல் படும் கஷ்டம் போதாதென்று பிச்சைக்காரர்களின் உபத்திரவம் வேறேயா? இந்தக் கும்பேனிக்காரன் எல்லாத்துக்கும் ஒரு வரி போடருனே, இவாள் மேலே ஒண்ணு போடப்படாதோ?—'

'ஏன் ஸ்வாமின்னு, உங்களுக்கு அவ்வளவு தயாளம்? அவன் வயிற்றுக்கொடுமை, ஏதோ கத்திவிட்டுப் போருன்.'

'ஏதேது அவனுக்குக்கூட வராத கோபம் பெரியவாளுக்கு வராப்போலே யிருக்கு—பெரியவா ஏதேனும் வாரிசோ?'

'வாரிசு என்ன, சுவாமி—பார்க்கப் போனுல் உலகத்திலே எல்லாருமே

> **ஆண்டவன்**
>
> **எங்கே இருக்கிருர்?**
>
> ஆண்டவனைத் தேடி எங்கே போகிறீர்கள்? துன்பப்பட்டவர்கள், பலவீனர்கள், ஏழைகள் இவர்கள் எல்லாரும் தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையிலே கிணறு வெட்டுவார் உண்டா? ஏழைகளையே கடவுளாய்க் கொள்ளுங்கள். அவர்களைப்பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்குச் சேவை செய்யுங்கள். இடைவிடாமல் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது கடவுள் உங்களுக்கு வழி காட்டுவார்.
>
> —ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர்.

பிச்சைக்காராள் தானே!—நான் ஒரு பிச்சைக்காரன்—நீரும் ஒரு பிச்சைக்காரன்—'

'என்னடா சொன்னுய் என்னை! நீ வேணுமானுல் பிச்சைக்காரனுயிரு—என்னை—பல்லை—'

'சீச்சீ—'

'சூ—சூ—' (இது ஒரு சமாதானக்காரர்)

வண்டி முழுவதும் ஏகக் கூச்சல்; களேபரம்.

'தடக்—தடக்—தடக்—' (இது வண்டி.)

'என்ன சிரிக்கிறேள்?'

'என்னத்துக்கு அழ வேண்டும் என்றுதான் சிரிக்கிறேன்—'

'என்ன புதிர்ப் போட ஆரம்பித்து விட்டீர்களே?—'

'புதிரே யில்லை—எல்லாம் வெட்ட வெளிச்சம்தான்—எல்லாம் கண்ணெதிரே நடக்கிறதுதான்—ஒரு

சிமிழுக்குள்ளேயே உலகம் அடங்கி யிருக்கிறது உமக்கு ஒரு பெரிய விந்தையா யில்லையா ?—'

'இந்த மாதிரி எல்லாம் பேசினல் எனக்குப் புரிந்துவிடுமோ ?—'

'சொல்கிறேன், கேளும்—'

'அக்காவை விரட்டிக் கொண்டு ஜன்னலின் வெளியே வேடிக்கை பார்க்கும் சின்னப் பையனைய் நான் இருந்திருக்கிறேன். இன்னமும் மாப் பிள்ளைக் கருக்கழியாமல், வண்டியே தனக்காகத்தான் ஓடுகிற தென்று நினைத்துக்கொண் டிருக்கும் வயசுப் பிள்ளையாகவும் இருந்திருக்கிறேன். ஏண்டாப்பா இத்தனை பெரிய குடும் பத்தைப் படைத்தோம் என்று ஏங் கும் அந்தச் சமுசாரியாகவும் இருந் திருக்கிறேன்—'

'உங்கள் எண்ணத்தின் கடுப்புத் தானே என்னவோ, அஞ்சும் பெற்று, வளர்த்து, வயசு வந்த பிறகு ஒவ் வொன்ருய்ப் பறிகொடுத்தேன்—'

'அதுவும் சரிதான்-நீரும் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டீர்; இல்லையென்ரு சொன்னேன்? ஏதோ நீர் பட்டதில் பாதியாவது நான் பட்டிருக்க மாட் டேனு? உமக்கு இருந்தது எனக்கும் இருந்திருக்காதா ?—'

'இப்பொ என்னத்துக்கு அதெல் லாம் ?—'

'அதைத் தானே சொல்ல வந் தேன் !—உப்பு மில்லை, புளியுமில் லாததிற் கெல்லாம், உறுமிக்கொண் டும், கறுவிக்கொண்டும், குலாவிக் கொண்டும் கொக்கரித்துக்கொண்டும் இருந்திருக்கிருேம்—இருக்கிருேம்— ஆனல் இப்போ—'

'என்ன, டக் என்று நிறுத்திவிட் டேள் ?—'

'இப்போது நமக்கும் வயசாகி விட்டது. நீர் முந்திக் கொள்கிறீரோ, நான் முந்திக் கொள்கிறேனே—எல் லாம் பட்டாய் விட்டது. சந்தோஷப் படவும் அலுப்பா யிருக்கிறது—துக் கப் படவும் தென்பில்லை. என் னவோ போகிருேம்—வருகிருேம்— எங்கே போகிருேம்—எதற்காக— என்னும் அக்கரையும் அதிக மில்லை. இந்த மாதிரி சமயங்களில்—உல கத்தை விட்டு நாம் ஒதுங்கி நின்று, அதன் வேடிக்கையைக் கவனிக்கும் போது—மனதிற்கே ஒரு நிம்மதி பிறக்கிறது—ஏதோ சந்தேகம் தெளிந் தாற்போல் ஒரு கனம் குறைகிறது— இதைச் சரியாய் வெளியில் சொல்லக் கூட முடிகிறதில்லை. மனதுக்கு மனது தான் தெரியும்—

'அதே சமயத்தில் உலகத்தில் இருக் கும் சுகதுக்கங்களுக்கும் குறை வில்லை—உலகம் மாத்திரம் சுழன்று கொண்டுதான் இருக்கிறது. காலமும் கடந்து கொண்டிருக்கிறது — இத் தனையையும் ஏந்திக்கொண்டு இந்த வண்டி போகிறமாதிரி—பாரும், இது வும் உலகத்தின் நடுநாடிபோல் அடித் துக் கொள்கிறது—ஒரே நிதானமாய்— தடக்—தடக்—தடக்—தடக்—'

✲

உலகெங்கும் நடக்கும் கதை

மாஜி அமெரிக்க ஜனதிபதிகளில் பிரபலமான ஒருவர் ஆபிரகாம் லிங்கன். ஒரு நாள், அவர் வீட்டுக் குழந்தைகள் அழும் சத்தம் கேட்டு, லிங்கனுடைய பக்கத்து வீட்டுக்காரர் வெளியே ஓடி வந்தார். லிங்கன் தம்முடைய இரு சிறு குழந்தைகளைக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு போவதை, அடுத்த வீட்டுக்காரர் பார்த்தார்.

"என்ன லிங்கன்? உங்களுடைய குழந்தைகள் ஏன் அழுகிறுர் கள் ?" என்று விசாரித்தார்.

லிங்கன் சொன்னுர்: "இப்போது உலகெங்கும் நடப்பதென்ன? அதே கதை தான் இந்தப் பையன்கள் சங்கதியும். நான் மூன்று முந்திரிக்கொட்டைகள் வைத்துக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொருவனும் தனக்கு இரண்டு முந்திரிக் கொட்டைகள் வேண்டுமென்று கத்துகிருன்" என்ருர் லிங்கன்.

அணுவும் - - அணுக்குண்டும்

வி. சு. அங்கப்பன்

நாகரிக முன்னேற்றத்துக்கும் மனிதனின் கொலை இச்சைக்கும் என்றுமே தொடர்பு உண்டுபோல் இருக்கிறது. சென்ற ஆகஸ்டு மாதம் ஆறுந்தேதி, ஹிரோஷிமா நகரம் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டது. அத்துடன் உலகத்தில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்ப மாயிற்று. அந்த நகரை அழித்த அணுக்குண்டின் பயங்கரம், உலக மக்களைத் திடுக்கிடச் செய்துவிட்டது. மனிதன் தன்னைத் தானே அழித்துக்கொண்டு மறையும் காலம் வந்துவிட்டது என்று பயப்படுவார் சிலர். இனி நாகரிகத்தின் உச்சநிலையைப் பார்க்கப் போகிறோம் என்று களிப்பார் வேறு சிலர். இந்தக் குண்டின் ரகசியத்தை உலகறியச் செய்யவேண்டு மென்பார் ஒருவர். கூடவே கூடாது என்பார் மற்றொருவர். இவ்வளவு, பரபரப்பையும் உண்டு பண்ணியது கேவலம் ஓர் அணு!

இந்த அணுவுக்குத்தான் இவ்வளவு சக்தி எப்படி வந்தது? ஒரு பதார்த்தத்தின் மிகச் சிறிய பகுதிதான் அணு என்பது. வெள்ளியின் அணுவுக்கும் தங்கத்தின் அணுவுக்கும் வேறுபாடு உண்டு. ஆனால், ஒரு பதார்த்தத்தின் வெவ்வேறு அணுக்கள் ஒன்றுபோலவே யிருக்கின்றன. பத்துக் கோடி அணுக்களை ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக வைத்தால், ஓர் அங்குல நீளம்தான் இருக்கும். இதை மனதில் வைத்துக்கொண்டால், ஓர் அணு (ஆட்டம்) என்பது எவ்வளவு சிறியது என்று ஒருவாறு புலனாகும்.

'கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்'டினார் திருவள்ளுவர். இப்போதைய விஞ்ஞானிகளோ, 'அணுவைத் துளைத் தேழ்' உலகையும் அழிக்கும் சக்தியைக் கிளப்புகிறார்கள். அணுவைப்பிளப்பது சம்பந்தமான ஆராய்ச்சிப் படங்களை நடுப் பக்கங்களில் பார்க்கவும்.

இந்த அணுக்கள் பகுபடாதவை என்றும், உருண்ட, சிறிய, கெட்டியான தூசிகள் என்றும் முன்னே கருதி வந்தார்கள். அதுவரையில் அவைகளில் அடங்கியுள்ள சக்தியை யாரும் அறியவில்லை.

ரேடியம் என்னும் உலோகம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான், அணுவைப்பற்றிய எண்ணம் மாறிற்று. சகல பதார்த்தங்களின் அணுக்களும், 'தன்னணு' (புரோட்டான்), 'மின்னணு' (இலெக்ட்ரான்) என்னும் இரண்டு விதமான தூசிகளால் ஆக்கப்பட்டவை என்று இப்போது அறிவோம். தன்னணு என்பது நேர் (பாஸிட்டிவ்) மின்சாரமும், மின்னணு எதிர் (நெகடிவ்) மின்சாரமும் உடையவை. இதனால் தன்னணுவுக்கும் மின்னணுவுக்கும் இடையே கவர்ச்சியுண்டு. மின்னணுவைக் காட்டிலும் தன்னணு இரண்டாயிரம் மடங்கு பெரியது.

ஒவ்வோர் அணுவும் தன்னளவில் ஒரு சூரிய மண்டலம் போன்றது. சூரியனைச் சுற்றிப் பூமியும் இதர கிரகங்களும் சுழன்று வருகின்றன. அது போலவே, அணுவிலும் ஒரு மையப் பொருளை வேறு தூசிகள் சுற்றி வருகின்றன. அணுவில் எத்தனை தன்னணுக்கள் உண்டோ அத்தனை மின்னணுக்களும் உண்டு. அணுவின் மையப் பொருளைச் சுற்றிவரும் தூசிகள் மின்னணுக்களே. மையப் பொருளில் தன்னணுக்கள், தனியாகவோ, சில மின்னணுக்களோடு கெட்டியாகப் பொருந்தியோ இருக்கும். உதாரணமாக, செம்பின் அணு-மையப் பொருளில் நாற்பத்து நாலு தன்னணுக்களும், பதினைந்து மின்னணுக்களும் பொருந்தி யிருக்கின்றன. இதைச் சுற்றிவருபவை மீதியுள்ள இருபத்தொன்பது மின்னணுக்கள். வெவ்

வேறு பதார்த்தங்களின் அணுக்களில், தன்னணுக்களும் மின்னணுக்களும், அளவிலும் சேர்க்கை அமைப்பிலும் மாறுபடுவதால், பதார்த்தங்களின் குணங்கள் மாறுபடுகின்றன.

பெரும்பாலான பதார்த்த அணுக்களின் மையப் பொருள்களிலுள்ள தன்னணுக்களும் மின்னணுக்களும் அபாரமான சக்தியால் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், அவைகள் தங்கள் அமைப்பிலிருந்து மாறுபடுவதில்லை. ஆனால், ரேடியம் என்னும் உலோகத்தின் மையப் பொருளிலிருந்து இயற்கையாகவே பீறிட்டுக் கொண்டு இரண்டு விதமான தூசிக் கிரணங்கள் கிளம்புகின்றன: ஒன்று 'ஆல்பா' கிரணங்கள்; மற்றொன்று 'பீட்டா' கிரணங்கள். 'பீட்டா' கிரணங்கள் மின்னணுக்களாலானவை. 'ஆல்பா' கிரணங்களின் ஒவ்வொரு தூசியும் நான்கு தன்னணுக்களும் இரண்டு மின்னணுக்களும் சேர்ந்தது. மையப் பொருளிலிருந்து இப்படித் தூசிகள் வெளிச் செல்வதால், ரேடியம் தன் இயற்கை திரிந்து வேறு உலோகமாக மாறி, இறுதியில் ஈயமாகிறது. மையப் பொருள் இப்படிச் சிதறும் போது, அபரிமிதமான உஷ்ணம் வெளிக் கிளம்புகிறது. ரேடியம் போன்ற பொருள்கள் சூரியனிடத்தில் இருப்பதால் தான், கோடிக்கணக்கான வருஷங்களாகச் சூரியன் இவ்வளவு வெப்பத்தோடு இருக்க முடிகிறது.

மையப் பொருள் சிதறுவதால் இவ்வளவு சக்தி பிறக்கிறது என்று கண்ட விஞ்ஞானிகள், இதர பதார்த்தங்களின் அணுக்களைச் சிதைத்து அவைகளில் புதைந்திருக்கும் சக்தியை வெளிப்படுத்த முயன்றார்கள். அதிவேகமாகச் செல்லும் தூசிகளால் மையப் பொருளைத் தாக்கினால், அதைச் சிதறவைக்க முடியும் என்று கருதப்பட்டது. மையப் பொருளிடத்தில் நேர் மின்சாரம் இருக்கிறது. ஆகையால், தாக்கும் தூசி கனமாயிருப்பதோடு மின்சாரம் இல்லாமலுமிருக்கவேண்டும். தாக்கும் தூசியிடம் நேர் மின்சாரமிருந்தால், மையப் பொருளை நெருங்க முடியாது.

1932 - ஆம் வருஷம் ஆசிரியர் சாட்விக் என்பவர் பொது-அணுவை (நியூட்ரான்), கண்டு பிடித்தார். இதில் மின்சாரம் இல்லை. ஆகையால், மையப் பொருளை நெருங்கித் தாக்க, இதனால் முடிகிறது. யுரேனியம் என்னும் உலோகத்தைப் பொது அணுக்களைக் கொண்டு தாக்கினால், அதன் ஒவ்வோர் அணுவின் மையப் பொருளும் வெடிக்கிறது என்று ஐரீன் க்யூரி என்ற பிரபல பெண்மணி 1939-ஆம் வருஷம் கண்டு பிடித்தார்.

யுரேனியம் என்பது ஓர் உலோகம். ரேடியம் போலவே, யுரேனியமும் தூசிக் கிரணங்களைத் தன் அணுக்களின் மையப் பொருளிடமிருந்து கிளப்புகிறது. ஆகவே, யுரேனியம் அணுவின் மையப்பொருள் இயற்கையிலேயே ஸ்திர மற்றது. இந்த நிலையில் அது பொது அணுவால் தாக்கப்பட்டால், ஒரு மையப் பொருள் இரண்டாக வெடிக்கிறது. அப்போது மறைகிற பொருள், சக்தியாக (எனெர்ஜி) வெளிப்படுகிறது. ஓர் அவுன்ஸில் இருபத்தெட்டில் ஒரு பகுதி யுரேனியத்தில் உள்ள அணுக்கள் வெடிப்பதால், பத்து லட்சம் யூனிட்டு மின்சாரத்துக்குச் சமமான சக்தி பிறக்கிறது என்று கணக்கிடுகிறார்கள்.

யுரேனியத்திலேயே இரண்டு விதம் உண்டு. ஒன்றின் மையப் பொருளில் 238 தன்னணுக்கள் இருக்கின்றன; மற்றொன்றில் 235 தன்னணுக்கள் தான் உண்டு. உலகத்தில் கிடைக்கக் கூடிய மொத்த யுரேனியத்தில், இரண்டு லட்சத்தில் ஒரு பங்குதான் இரண்டாவது வகை யுரேனியம் கிடைக்கிறது.

யுரேனியத்தின் மையப் பொருள் வெடிக்கும்போது, பிரமாதமான சக்தி வெளிப்படுவதோடு, பொது அணுக்களும் உற்பத்தியாகின்றன. ஆகவே, ஒரு பொது அணுவைக் கொண்டு யுரேனிய அணுவின் மையப் பொருளைத் தாக்கினால், சக்தியும் வேறு பொது அணுக்களும் கிளம்புகின்றன. இந்த அணுக்கள் இன்னும் சில

அணுக்களின் மையப் பொருள்களைப் பிளக்கின்றன. அதனால் கிளம்பும் பொது அணுக்கள் மேலும் சில அணுக்களின் மையப் பொருள் களைத் தாக்குகின்றன. இப்படியே தொடர்ச்சியாகச் சக்தி வெளிக் கிளம்ப முடியும்.

238 - தன்னணுக்களைக் கொண்ட யுரேனியத்தின் மையப் பொருள் வெடித்தால் உண்டாகும் பொது அணுக்கள், அதிக வேகங் கொண் டவை. வேகங்கொண்ட பொது அணுக் கள், யுரேனிய அணுக்களின் மையப் பொருள்களைச் சந்திப்பது துர்லபம். உதாரணமாக, வேகமாகப் போகும் வண்டிச் சக்கரத்தின் ஆரக் கால்களை நோக்கி அதிவேகமாக ஒரு கல்லை நாம் விட்டெறிவதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கல், சக்கரத் தின் எந்த ஆரக்காலிலும் படாமலே ஊடுருவிச் சென்றுவிடக் கூடும். ஆனல், அதே கல்லை மிக மெதுவாக வீசினோமானல், ஆரங்களில் தட்டுப் படுவது நிச்சயம். இதுபோலவே தான், 238-யுரேனிய அணுக்களை, பொது அணுக்கள் தாக்கவேண்டு மானல், அவைகளின் வேகம் குறை வாக இருக்கவேண்டும். இப்படி வேகத்தைக் குறைப்பதற்கு, ட்யூட் ரான் என்னும் தூசிகளை உபயோகப் படுத்துகிறார்கள். ட்யூட்ரான் என்பது, கனமான ஜல வாயுவின் (ஹெவி ஹைட்ராஜன்) மையப்பொருளாகும். இந்தக் கனமான ஜலவாயுவின் அணுக்கள், சாதாரண ஜலவாயுவின் அணுக்களைப்போல் இரண்டு மடங்கு பெரியவையாகும். இந்த விதமான ஜல வாயு அபூர்வமாகத்தான் அகப் படுகிறது. 235-யுரேனியத்தில் இந்தக் கஷ்டம் இல்லை. அதாவது, இந்த ட்யூட்ரான்களை உபயோகிக்கத் தேவை யில்லை.

பளுவான 238-யுரேனியத்திலிருந்து மற்ற வகையான 235-யுரேனியத் தைப் பிரிப்பது, சமீப காலம் வரை யில் சிரமமாக இருந்தது. இதற்குக் கையாளும் முறையை, சென்ற இரண்டு வருஷங்களில் அமெரிக்கா வில் பக்குவத்துக்குக் கொண்டுவந்து விட்டார்கள். அதோடு அணுக்களைத் தாக்குவதற்காக, ஆசிரியர் லாரென்ஸ் என்பவர் ஒரு கருவியையும் கண்டு பிடித்திருக்கிறார். அதுதான் பெயர் பெற்ற சைக்லோட்ரான் என்னும் யந்திரம்.

ஒரு பவுண்டு யுரேனியத்தின் சக்தி, 50 லட்சம் பவுண்டு நிலக்கரி, அல்லது 30 லட்சம் பவுண்டு பெட்ரோலின் சக்திக்குச் சமமாகும்.

ஒரு சிறிய கிண்ணம் நிறைய உள்ள யுரேனியம் சிதறுவதால் உண்டாகும் சக்தியைக் கொண்டு, குவீன் எலிசபெத் போன்ற மிகப் பெரிய கப்பல் அட்லாண்டிக் சமுத் திரத்தை இரண்டு முறை கடக்கலாம். யுரேனியத்தில் ஒரு சிறு தூசியை வைத்துக்கொண்டு, ஒரு விமானம் உலகத்தைச் சுற்றி வரலாம்.

யுத்தம் ஆரம்பமான போதிருந்தே, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, ருஷ்யா ஆகிய நாடுகளில் அணுவைப் பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து வந்தன. குபிட்ஜா என்னும் ருஷிய விஞ்ஞானி, பத்து வருஷங் களுக்கு முன்பு அணுவைக் காந்த சக்தி கொண்டு தகர்க்க முயற்சி செய்துகொண் டிருந்தார். கேம்பிரிட் ஜில் ஆராய்ச்சி செய்துவந்த அவர், 1935-ஆம் ஆண்டு ருஷியாவுக்குச் சென் றார். பிறகு, இங்கிலாந்துக்குத் திரும்பி வரவில்லை. தம்முடைய ஆராய்ச்சி களை ருஷ்யாவில் குபிட்ஜா தொடர்ந்து நடத்தி வந்திருப்பார் என்று கருதப் படுகிறது. இங்கிலாந்தில் தாம்சன் என்பவரின் தலைமையில், ஒரு கமிட்டி ஆராய்ச்சி செய்து வந்திருக் கிறது.

டென்மார்க் நாடு ஜெர்மனியின் ஆதிக்கத்துக்கு வந்த பின்பு, ஆசிரி யர் போர் என்னும் விஞ்ஞானி, ஜெர் மானியரின் மேற்பார்வையில் அணு ஆராய்ச்சி செய்துவந்தார். ஆனல், ஜெர்மானியர் இந்தத் துறையில் முன் னேறுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அவ்வப்போது ஜெர்மானியருடைய ஆராய்ச்சியின் நிலைமையை, பிரிட்டி ஷாருக்கு அவர் அறிவித்து வந்தார். 1943-ஆம் ஆண்டு அவர் டென்மார்க்கி

லிருந்து தப்பி, முதலில் ஸ்டாக்ஹோமுக்கும், பிறகு இங்கிலாந்துக்கும் சென்றார். அவர் அறிவித்த செய்திகளும், பிரிட்டிஷ் அமெரிக்க விஞ்ஞானிகள் அணுக்குண்டு உற்பத்தி செய்வதற்கு உதவியா யிருந்தன.

யுரேனியம் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கானடாவிலும் கிடைக்கிறது. 235-யுரேனியத்தைத் தயார் செய்வதற்குப் பெரிய ஆலைகளை அமெரிக்காவில் கட்டியிருக்கிறார்கள்; அணுவைத் தாக்கும் யந்திரங்களையும், தயார் செய்திருக்கிறார்கள். மெக்ஸிகோ பாலைவனத்தில் முதல் அணுக்குண்டை வெடிக்கவிட்டு, சோதனை செய்தார்கள். அதன்பிறகு தான், ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரண்டு நகரங்கள்மீதும் குண்டுவீசப் பட்டது.

அணுக்குண்டு ஒரு சிறிய பந்தளவு தான் இருக்கும். ஆனால், அது விளைவிக்கும் சேதம் ஐந்நூறு டன் குண்டு செய்யும் சேதத்துக்குச் சமமா யிருக்கிறது. இருபது டன் எடையுள்ள ஓர் அணுக்குண்டைத் தயார்செய்ய முடியுமானால், அது ஐம்பது கன மைல் அளவு நிலத்தை உயரக் கிளப்பி வீசி எறியும் என்றும், அது விழுந்த இடத்தில் ஒரு மைல் ஆழமுள்ள குழி ஏற்படு மென்றும் கணக்கிடுகிறார்கள். இவ்வளவு பயங்கர ஆயுதத்தைச் செய்யும் ரகசியம் இப்போது அமெரிக்கா, பிரிட்டன் இந்த இரண்டு நாடுகளுக்கு மட்டும்தான் தெரியும். இந்த ஆயுதத்தின் உபயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் ஏற்பாடு செய்யும் வரையில், இந்த ரகசியத்தை வெளியிடப் போவதில்லை என்று, இரண்டு தேசத் தலைவர்களும் தீர்மானித் திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆயுதத்தை இரண்டு தேசங்கள் மட்டும் ரகசியமாய் வைத்திருப்பது இயலாத காரியம் என்றும், இதில் மற்ற நாடுகளும் போட்டியிட்டு, முடிவில் ரகசியத்தை அவைகளும் கண்டு பிடித்துவிடும் என்றும் பிரபல விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இந்த அணுக்குண்டு தோன்றியிருப்பதன் பலனாக, சர்வதேச அரசியல் சம்பந்தங்களே மாற வேண்டியிருக்கும் என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள். இனி வருங்காலத்தில் நெம்பர்-1 பிரச்னை, இந்த அணுவின் சக்தியைப்பற்றியதா யிருக்கும். அணுக்குண்டின் சக்தியைக்கொண்டு செவ்வாய்க் கிரகத்துக்குப் போகும் முயற்சி புதுப்பிக்கப்படும். பூமியிலிருந்து ஐயாயிரம் மைலுக்கு மேலே பூமியின் ஆகர்ஷண சக்தி நின்றுவிடுவதால், ராக்கெட்டுகளை (ஆகாச வாணரீதியிலுள்ள ஒரு வகை யந்திரங்கள்) கொண்டே அங்கே ஒரு மேடை இயற்ற முடியுமாம். அந்த மேடைகளில் பிரம்மாண்டமான கண்ணாடிகளை அமைத்து, அந்தக் கண்ணாடிகளை ரேடியோ மூலம் வேண்டியவாறு திருப்புவதால், சூரிய வெப்பத்தைப் பூமியின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் திருப்ப முடியுமாம். ஆக்கவும் அழிக்கவும் இந்த உஷ்ணத்தை உபயோகிக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அந்த மேடையிலிருந்து, செவ்வாய்க்கும் சுக்கிரனுக்கும் பிரயாணம் செய்யவும் முடியுமாம். இந்த ஆச்சரியமான மேடையை

ரசவாதம்

அணுவின் சக்தி வெளிப்பட்டு விட்டதன் பயனாக, சில ஆச்சரியமான காரியங்கள் சாத்தியமாகியிருக்கின்றன. அவைகளில் ஒன்று, ஓர் உலோகத்தை மற்றொன்றாக மாற்றக்கூடிய ரசவாதமாகும். இப்போது, சயின்ஸ் நிபுணர்களால் பிளாட்டினத்தைத் தங்கமாக மாற்ற முடிகிறது; தங்கத்தை ஈயமாக மாற்றவும் முடிகிறது. ஆனால், ஈயத்தைத் தங்கமாகவும், தங்கத்தைப் பிளாட்டினமாகவும் மாற்றத்தான் முடியவில்லையாம். ஆனால், ஒன்று முடிவதால், மற்றொன்றும் ஒரு நாள் சாத்தியப்படும் என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

இயற்றுவது பற்றிய ஆராய்ச்சிகளை, ஜெர்மன் விஞ்ஞானிகள் புரிந்துவந்திருக்கிறார்களாம். நேசநாட்டினரிடம் சிக்கிய சில ஜெர்மன் விஞ்ஞானிகளே, இந்தச் செய்தியை, அவர்களிடம் கூறியுள்ளார்கள்.

வருங்காலத்தில், காற்றை வெளியில் இறைத்துச் சூன்யமாக்கிய பிரம்மாண்டமான குழாய்களின் வழியாக, காந்த சக்தியால் மிதந்து, மணிக்கு மூவாயிரம் மைல் வீதம் போகக்கூடிய எக்ஸ்பிரஸ் வண்டிகளை உண்டாக்குவதும் சாத்தியம் என்று டாக்டர் லாங்மூர் என்பவர் சொல்கிறார்.

இவைகளை யெல்லாம் எண்ணும் போது, நாம் நாகரிகத்தின் உச்ச நிலையைச் சமீபிக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால்...? நட்சத்திரங்கள் வெடித்து அழிவதுபோல, மனிதனும் தான் ஆரம்பித்த அணுவாராய்ச்சியின் பயனைப் பூமியைப் பொசுக்கிக் கொள்ளப் போகிறான் என்கிறார் பெர்னார்ட் ஷா. ஒரே நாளில் ஒரு நாட்டில் உள்ள நகரங்கள் அத்தனையையும் அணுக்குண்டு தாங்கிய ஒரே ஒரு விமானமே நிர்த்தூளி யாக்கிவிடமுடியும் என்பதை நினைத்தால், நம் நாகரிகம் - மனித நாகரிகம் - நிலைக்குமா என்று சந்தேகப்படத்தான் தோன்றுகிறது. சர்வதேசத் தகராறுகளைத் தீர்க்க யுத்தம் உதவாது என்ற முடிவுக்கு மனித குலம் வரவேண்டும்; யுத்தங்களின் அடிப்படையான காரணங்கள் அனைத்தும் நீங்கவேண்டும்; விஞ்ஞானிகள் உலகத்துக்குக் கொடுக்கும் சக்திகளை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தவேண்டும். இல்லை என்றால், 'ஆப்பதனைப் பிடித் தசைத்த குரங்' கின் கதிதான் மனித குலத்துக்கு நேரும் என்பதில் சந்தேகமில்லை.

✲

பட்டினி பயனில்லை

ஜான் டிரிங்க்வாட்டர் என்ற பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கவிஞர், பிரசங்கங்கள் புரிந்துகொண்டு ஒரு சுற்றுப் பிரயாணம் செய்தார். ஒரு நாள் அவர் ஒரு குடியானவனின் சிறிய வீட்டில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

குடியானவனின் மனைவி, பகலெல்லாம் சிரமப்பட்டு, அந்தச் சிறப்பு வாய்ந்த விருந்தாளிக்காக ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தாள்.

ஆனால், கவிஞர் "நான் பிரசங்கம் செய்வதற்கு முன் ஒன்றும் சாப்பிடுவதில்லை. சாப்பிட்டால், என் பிரசங்கமே கெட்டுப் போகும்" என்று சாக்குச் சொல்லி, சாப்பிட மறுத்து விட்டார். அதனால் வீட்டுக்காரி பெரிதும் வருத்தமடைந்தாள்.

அன்று மாலையில் கவிஞரின் பிரசங்கத்துக்குக் குடியானவன் மட்டும் போயிருந்தான்; அவன் மனைவி வீட்டிலேயே தங்கிவிட்டாள்.

பிரசங்கம் முடிந்ததும், குடியானவனின் வீட்டுக்குக் கவிஞர் திரும்பினார். தமது படுக்கையறைக்குப் போகும் வழியில், அடுப்பங்கரையில் குடியானவனும், அவன் மனைவியும் தம்மைப் பற்றி ஏதோ பேசுவதைக் கேட்டார். சற்று நின்று கவனித்தார்.

குடியானவனின் மனைவி, "என்ன? எப்படி யிருந்தது பிரசங்கம்?" என்று குடியானவனைக் கேட்டாள்.

அதற்குக் குடியானவன், "அவர் சாப்பிட்டுவிட்டே போயிருக்கலாம்" என்று பதிலளித்தான்.



மகாகவி பாரதியார்



மேலே: ஆகாகான் அரண்மனை;
பக்கம்: ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்;
கீழே: ஆகாகான் அரண்மனையில் கஸ்தூரிபாய் சமாதியும், மகாதேவ தேசாய் சமாதியும்

மேலே: ஜப்பானில் அழகிய பூஜி மலையும் மொடோஸு ஏரியும்





பக்கம்: பம்பாயில் 50 ஆயிரம் மக்களுக்கு ஸர்தார் பட்டேல் பிரசங்கம்

பக்கம்: ஸர்தார் பிரசங்கித்த கூட்டம். நடுவே மேடையில் ஸர்தார் வல்லபாய் பட்டேல் அமர்ந்திருக்கிறார்



நாமக்கல் கவிஞர்
ராமலிங்கம்

கவிஞரும் அவருடைய
மனைவியும் மக்களும்

சென்னையில் நாமக்கல் கவிஞர்
நிதியளிப்பு வைபவத்தில்
ராஜாஜி பேசுகிறார்

ராஜாஜி பேச்சைக் கவிஞர்
ஆவலுடன் கேட்கிறார்

மேயர் பேசுகிறார்

வைபவத்தில் கலந்துகொண்ட
ஸ்ரீமான்கள் டி. கே. சி., முத்து
ரங்கம், காமராஜ் நாடார்

ஜம்மு தேசிய மகா நாட்டில் ஜவஹரின் ஊர்வலம்

பர்மாவில் கிராம வாசிகள் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள்

ஜம்மு தேசிய மகாநாட்டில் ஷேக் அப்துல்லாவின் தலைமைப் பிரசங்கம்

அணுவைத் துளைக்கும் பிரம்மாண்டமான ஸைக்ளோட்ரான் யந்திரத்தின் படங்கள். மேலே வட்டமாயுள்ள படம், ஸைக்ளோட்ரானில், டியூட்ரான் புகும் குழாயைக்காட்டுகிறது. இடது புறத்தில், குழாயைச் சரியாய் அமைப்பவர் படம். மூன்றுவதில், ஸைக்ளோட்ரானைச் சுற்றி ஜலம் சூழ்ந்திருக்கும் காட்சி. நான்காவதில், ஸைக்ளோட்ரானை நடத்தும் இயந்திரம் வேறோர் அறையில் இருப்பதைக் காட்டுகிறது





அணுக்குண்டு செய்வதில் உழைத்த இரண்டு பிரிட்டிஷ் விஞ்ஞானிகள்: (1) இடதுபுறம்: ஸர் ஜார்ஜ் தாம்ஸன்; வலதுபுறம்: ஸர் சார்லஸ் டார்வின்

எழுபது வயது நிறைந்த
கவிமணி தேசிகவிநாயகம்

பொம்மை வீடு

'நாரா'

ராயப்பன் ஒரு சாதாரணக் குமாஸ்தாதான். ராணுவ சிப்பாய்களுக்கு உடுப்புத் தைத்துக் கொடுக்கும் ஒரு கம்பெனியில் வேலை பார்க்கும் எத்தனையோ குமாஸ்தாக்களில் இவனும் ஒருவன். சுமார் முப்பது வயதிருக்கும்; மாதச் சம்பளம், யுத்தப் படி உள்பட ரூபாய் எழுபத்துச் சில்லரை. குமாஸ்தா வேலை ராயப்பனுக்குப் பிடித்துவிட்டது. காலா காலத்தில் ஆபீசுக்குப்போய், மாமூல் வேலைகளையெல்லாம் முறையாய்ச் செய்து முடிப்பான். அன்றாட வேலையில் ஏதாவது பாக்கி யிருந்தால், ஆபீஸ் நேரத்துக்குப் பின்பு தங்கியிருந்து, பாக்கி வேலையைப் பூர்த்தி செய்த பிறகே,வீட்டுக்குப் போவான். நேரங் கெட்ட சாப்பாடு நன்றாயிராது தான். அதற்காக ராயப்பன் யாரையும் கோபிப்பதில்லை; தனக்குள்ளே வருத்தப்பட்டுக் கொள்வது மில்லை. இலையில் உட்கார்ந்ததுமே, மனைவியிடம் ஆபீசில் ஏற்பட்ட சுணக்கத்துக்கு இன்ன வேலை பாக்கியாய்க் கிடந்ததே காரணம் என்பதையும், அதை இன்ன மாதிரி உடனே செய்து முடித்துவிட்ட தனது சாமர்த்தியத்தைப் பற்றியுமெல்லாம் சுவாரஸ்யமாய்ப் பேசத் தொடங்கிவிடுவான். ஆள் வெகு யோக்கியன்.

ராயப்பனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தைதான் உண்டு. வயது ஏழு; பெயர் வல்லி. வல்லி பெரியவளாகிற போது கலியாணச் செலவுக்குப் பணம் வேணுமே, அதற்கு என்ன செய்யலாம்? அதற்காகத்தான் வல்லிக்குப் பதினறு வயது ஆனதும்,

ரூபாய் இரண்டாயிரம் ரொக்கமாய் ஒரே சமயத்தில் கிடைக்கத் தக்க ஓர் இன்ஷியூரன்ஸ் பாலிஸி எடுத்திருந்தான். ஆனல், இன்ஷியூரன்ஸ் பிரிமியத்தைத் தவணைப்படி தவருமல் செலுத்தி வருவதுதான் பிரும்மப் பிரயத்தனமாய்ப் போய்விட்டது. வருகிற சம்பளம் சோற்றுச் செலவுக்கே கட்டுப்படியாகாமலிருக்கும் போது, இன்ஷியூரன்ஸுக்கு வேறே மாதா மாதம் பணம் ஒதுக்குவதில் விழி பிதுங்கிவிடும்போலிருந்தது.

மகள் வல்லி, மிகவும் அருமையான பெண். தாய் தகப்பனை, அதை இதை வாங்கித் தரும்படி தொந்தரவு செய்யவே மாட்டாள். பெற்றோரின் ஏழைமை நிலையை அனுசரித்து, ஏதோ இரண்டொரு பழைய மரப் பாச்சிப் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடுவதுடன் திருப்தியடைந்து விடுவாள். ஆனலும், என்ன இருந்தாலும், குழந்தை மனமில்லையா? ஒரு நாள், பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரும் வழியில், கடைத் தெருவில், மிக்க அழகான பொம்மை வீடு ஒன்று, ஒரு விளையாட்டுச் சாமான் கடையில் இருப்பதைப் பார்த்துவிட்டாள். நிஜ வீடு மாதிரியே ஜன்னல்கள், வாசல்கள், மேல் மாடி, படிக்கட்டு எல்லாம் சின்னச் சின்னதாய், வெகு நேர்த்தியாய்ச் செய்து வைத்திருந்ததைக் கண்கொட்டாமல் நெடு நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீட்டுக்கு வந்தாள். தான் கடையில் கண்ட பொம்மை வீட்டைப் பற்றி, அம்மா, அப்பாவிடம் உற்சாகத்துடன் வருணித்துச் சொன்னுள். அவர்களையும் அந்த அழகிய வீட்டைப் போய்ப்பார்த்து வரும்படி வேண்டினுள். அதைத் தனக்கு வாங்கித் தரும்படி மட்டும் கேட்கவில்லை. கடைக்காரன் கேட்கும் விலையைக் கொடுக்க அப்பாவிடம் போதிய பணமில்லை என்று அவளுக்குத் தெரியுமோ, என்னமோ!

'சிருஷ்டி'யிலே எந்த மனிதனுக்கும் ஓர் இயற்கை இன்பம் உண்டாகிறது. நாச உணர்ச்சிகளையெல்லாம் வெல்லக்கூடியது அதுதான். இதை விளக்கும் இந்த உணர்ச்சிச் சித்திரம் ஓர் ஆங்கிலக் கதையின் தழுவல்.

குழந்தை ஆசைப்படும் பொருளை எப்படியாவது வாங்கிக் கொடுத்து விடவேண்டு மென்று ராயப்பனின் மனம் துடி துடித்தது. ஆனால், இதற்காக இருபது முப்பது ரூபாய் செலவு செய்ய அவனால் முடியாதே. அதற்கு என்ன வழி பண்ணலாம்? நாலாறு கள்ளியம் பலகைத் துண்டு கிடைத்தால், ஒரு மாதிரியாய்ச் சக்கைகளை ஆணி அடித்துச் சேர்த்து வீடுமாதிரி பண்ணிவிடலாம். வர்ணம் பூசி விட்டால், கடையில் வைத்திருக்கும் வீடு போலவே அழகாய் இருக்கும்.

எதற்கும் பொம்மையை ஒரு தரம் பார்த்துவிட்டு வரலாமே என்று மூவரும் கடைக்குப் புறப்பட்டார்கள். பொம்மை வீட்டை நன்ருய்ப் பார்வையிட்ட பிறகு, ராயப்பன் தன் மனைவியைப் பார்த்து, "சுத்தமாய் ஐம்பது ரூபாயாம்! ஒரு தம்பிடி கூடத் தள்ளித் தர மாட்டானும்" என்ருன்.

மேலும், "என்ன கொள்ளையப்பா! இரண்டு மூன்று ரூபாய்க்கு ஒட்டுப் பலகையை வாங்கி, ஆணி அடித்துச் சேர்த்து, காமா சோமா என்று வர்ணத்தைப் பூசிவிட்ட இந்த லட்சணத்துக்கா இத்தனை ரூபாய்! சகிக்க முடியாத தண்ட விலையாயிருக்கே!" என்று கடைக்காரனிடமே இரைந்து பேசிவிட்டான். உடனே மகள் பக்கம் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண், பாவம், ஏக்கமாய்ப் புன்னகை செய்தபடி நின்று கொண்டிருந்தது. விலை மதிக்க முடியாத இந்தப் பொக்கிஷம் தனக்கு ஒரு நாளும் கிடைக்கப் போவதில்லை என்று அவளுக்கு நிச்சயமேற்பட்டு விட்டதோ, என்னமோ! கண் மட்டும் அடிக்கடி பொம்மை மேலேயே பார்வை செலுத்திக் கொண்டிருந்தது.

எல்லாருமாய் வீடு திரும்பி வரும் போது, "பலகை மட்டும் கிடைத்து விட்டால்..." என்று ராயப்பன் யோசனையிலாழ்ந்தபடி ஏதோ சொல்லிக்கொண்டு வந்தான்.

"ஆமாம். பலகை கிடைத்தால், பொம்மை பண்ணி விடலாம்" என்ருள் வல்லியின் தாயார். இது, மகளைச் சமாதானப் படுத்துவதற்குச் சொன்னதே யல்லாமல் வேறல்ல. கணக்குப் பதியும் வேலையில் ராயப்பன் நிபுணனுயிருக்கலாம். பொம்மை வீடு செய்கிற தென்னமோ, ராயப்பனுக்கு வரவே வராதென்பதுதான் அவள் நினைப்பு.

ராணுவ சிப்பாய்களுக்கு மரச் சாமான் செய்து தரும் கம்பெனி ஒன்றில் ராயப்பனுக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவரிடம் போய்க் கேட்டால், வேலைக்கு ஆகாமல் கழித்துப் போட்ட நாலைந்து பலகைத் துண்டு வாங்கி வரலாம். அப்புறம் வேலை சுலபந்தான். உடனே, தன் எண்ணத்தை மனைவியிடமும் மகளிடமும் சொன்ஞன். மறுநாள் மாலை நண்பன் வேலை செய்யும் மரச் சாமான் கம்பெனிக்குப் போஞன். இவன் நண்பன்தான் அங்கே தச்சு வேலைக்குத் தலைமை ஆள். அவனிடம் விஷயத்தைச் சொன்ஞன்.

"என்னப்பா! இந்த யுத்தத்தில் மரத் துண்டு அவ்வளவு சுலபமாய்க் கிடைக்கிற வஸ்துவா? நான் என்ன பண்ணுகிறது?" என்று நண்பன் சொல்லிவிட்டான்.

அங்கே கிடந்த சில மரத் துண்டுகளைக் காட்டி, "இதிலிருந்து கழித்துப் போட்டதில் சில துண்டு தந்தால் போதும்" என்று ராயப்பன் அழுத்திக் கேட்டான்.

"இது சரியாய்த்தான் வரும். ஆனால், இது கழிவுத் துண்டில்லை. பெயர் எழுதிக் கட்டித் தொங்க விடுவதற்காக விளம்பர அதிகாரி கேட்டிருந்தார். அவருக்காக இருபத்து நாலு சட்டம் செதுக்கிச் சேர்த்திருக்கிறேன். அதற்காக ஆறு நாளாய் அலைந்து தேடினேன். இவற்றை அடித்து நிறுத்த நீள மரங்கள் வேண்டும். அதற்கு என்ன செய்வதென்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்" என்ருன் தலைமைத் தச்சன்.

"சரி, வல்லிக்குக் கொடுத்து வைக்கவில்லை. அவ்வளவுதான். ஒரு வேளை, எப்படியோ பலகை கிடைத்

தால், என்னை மட்டும் மறந்து விடாதே. ஞாபக மிருக்கட்டும்'' என்ருன் ராயப்பன். தச்சனும் சரி என்று ஒப்புக்கொண்டான்.

நாலைந்து நாள் கழித்து, விளம்பர அதிகாரி தச்சன் பட்டரைக்கு வந்தார். "இன்னும் வேலை ஆகவில்லையா?'' என்று தச்சனைத் துரிதப் படுத்தினர்.

"அவசரப் படுத்திப் பிரயோஜனம் இல்லை. கையில் இருக்கும் மரத்தில் பதினறு கம்பங்கள் மட்டுமே செய்ய முடியும். பலகை சரியாய் இருபத்து நாலு இருக்கிறது. கம்பத்தின் விஷயந் தான் தகராறு. பதினறுக்கு மேற் கொண்டு ஒரே ஒரு கம்பங்கூடத் தேருது'' என்ருன் தச்சன்.

அதிகாரிக்குச் சள்ளையாய்ப் போய் விட்டது. சற்று வாதாடியும் பார்த் தார். கடைசியில், "சரி, இனி என்ன செய்வது? பதினறு கம்பத்துக்கு இருபத்து நாலு பலகையை வைத்துக் கொண்டு என்ன பிரயோஜனம்?'' என்று சொல்லிப் போய்விட்டார்.

முடிவில், பதினறு பலகைகளை மட்டுமே வேலைக்கு எடுத்துக் கொள்வதென்று தீர்மான மாயிற்று. இப்போது, எட்டுப் பலகை மிச்சப்பட்டு விட்டது. ராயப்பனுக்குக் கொடுத்து விட்டாலோ? மேலதிகாரிகள் நிரம்பக் கண்டிப்புச் செய்கிருர்களே. உள்ள படி, மரம் கிடைப்பதும் அரிதாகவே யிருக்கிறது. அதோடு, கம்பெனிச் சொத்தைத் தாஞக வெளியாருக்குக் கொடுப்பது சரியா? தச்சன் தங்க வேலு பழங் காலத்து மனுஷன். நேர்மை நேர்மை என்று நினைத்துத் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியாமல் தோல்வியையே கண்டுவரும் கஷ்ட ஜீவன்களைச் சேர்ந்தவன். இப்போதைக்கு இந்தப் பலகைத் துண்டுகள் யாருக்கும் தேவை யில்லை. யார் கண்ணிலாவது இவை பட்டுவிட்டால் தான் ஆபத்து. அப்போது இவற்றை எதற்கு உப யோகிக்கலாம் என்ற சிந்தனை சில ருக்கு ஏற்படத் தொடங்கிவிடும்... ராயப்பன் சினேகத்துக்கு நல்ல ஆள்... தங்கவேலுவுக்கும் நாலு வயது மகன் ஒருவனிருக்கிருன்.

தன் மகனுக்கே ஏதாவது விளை யாட்டுச் சாமான் பண்ணிவிட்டால்? சேச்சே! அது தப்பு. இன்னெருவ னுக்காக ஒரு காரியத்தைச் செய்வது ஒன்று, தனக்கென்று செய்து கொள் வது மற்ருென்று. கம்பெனிச் சொத் தைத் தனக்காக அபகரித்துக் கொள்ள, அவன் மனம் இடங் கொடுக்கவில்லை.

அங்கே அப்போது யாருமில்லை. சட்டங்களை ஒழுங்காய்ச் சீவி இழைத்து வைத்தான். ராயப்பனுக்கு வேலை சுலபமாகிவிடும். அப்போது எதிர்பாராதபடி தலைமைக் குமாஸ்தா அங்கே வந்து சேர்ந்தார். இழைத்துக் கொண்டிருந்த பலகைகளைப் பார்த்து "இது என்னத்துக்கு?'' என்று கேட்டார். தங்கவேலு விஷயத்தைச் சொன்னன். மனதுக்குள் சற்றுச் சள்ளையாய்த்தான் இருந்தது.

"என்னமோ, மானேஜருக்குத் தாக்கல் தெரியாமல் மட்டும் பார்த் துக்கொள். அவ்வளவுதான் சொல்லு வேன்'' என்று எச்சரிக்கிற பாவனை யில் சொல்லிய தலைமைக் குமாஸ்தா, சற்று நேரத்தில் குழந்தைப் பொம்மை செய்யும் விதங்களைப் பற்றித் தச்சனேடு சுவாரஸ்யமாய்ச் சர்ச்சை பண்ணத் தொடங்கிவிட்டார். வீடு அமைப்பு விஷயத்தில் இருவரும் கலந்து பேசிப் பலமாய்த் திட்டங்கள் போட்டார்கள்.

மறுநாள் ராயப்பனுக்குத் தகவல் அனுப்ப, அவனும் வந்து பலகை களை எடுத்துச் சென்ருன். இரண் டோர் ஆணியைப் பலகையில் அடித் ததும், பலகை தெறிக்கத் தொடங்கி விட்டது. ஆணி பெரிய ஆணி. சற்றுச் சிறியதா யிருந்தால், சட்டம் தெறிக் காது. அடுத்த நாள் தங்கவேலுவிடம் போனன். தங்கவேலுவுக்குக் குஷி பிறந்துவிட்டது. தானே ஆணி அடித் துச் சேர்த்துத் தருவதாகச் சொல்லி விட்டான். விஷயத்தை மட்டும் யாரிமுடம் சொல்லிவிடாமல், ரகசிய மாய் வைத்துக் கொள்ளும்படி ராயப் பனை எச்சரித்து வைத்தான். அப்படி

யிர்ஞல், தனக்காக ஒன்றும் சங்கடத்தில் மாட்டிக்கொள்ள வேண்டாமென்று எவ்வளவோ சொல்லியும் தங்கவேலு கேட்கவில்லை. இரண்டு நாளில், வேலை முடிந்ததும், தகவல் சொல்லி யனுப்புவதாகச் சொன்ஞன்.

தினசரி ஒருமணி நேரம், அரை மணி நேரம், சாப்பாட்டு வேளையில் தங்கவேலு பொம்மை வீட்டைக் கட்டி முடித்துக்கொண்டு வந்தான். ஒரு நாள், மறுபடியும் தலைமைக் குமாஸ்தா தச்சுப் பட்டரைக்கு வந்தார். தங்கவேலு இன்னும் பொம்மை வேலையிலேயே ஈடுபட்டிருந்ததைக் கண்டதும், அவனைச் சற்றுக் கடிந்து கொண்டார்.

"ஏதோ உன் நன்மைக்காகவே சொன்னேன். எனக் கொன்றுமில்லை. உதவி மானேஜர் இந்தப் பக்கம் வந்தாலும் வருவார். அவர் கண்ணில் படாமல் பொம்மையை வைத்துக்கொள். அவர் வெகு கண்டிப்பான பேர்வழியாக்கும்" என்ருர் தலைமைக் குமாஸ்தா. தச்சன், அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு, சுறு சுறுப்பாய்ச் சட்டங்களை ஒன்று சேர்ப்பதில் முனைந்து விட்டான். இதை நெடுகலுமே கவனித்துக் கொண்டிருந்த இன்னுஞ் சில வேலைக்காரர்கள், தாங்களும் பொம்மைக்காக வேண்டியதைச் செய்வதாக முன் வந்தார்கள். ஒருவன் வர்ணம் பூசினன்; ஒருவன் ஸ்பிரிங் கதவு போட்டான்; ஒருவன் பூச்செடிகளை முற்றத்தில் பண்ணிப் பூட்டினன்; இப்படி எல்லோரும் பொம்மை வீட்டில் சிரத்தை கொண்டு விட்டார்கள்.

இவ்வாருக, நாலு நாளில் பொம்மை வீடு, யாரும் எதிர்பாராத விதமாய், ஒரு சின்னஞ் சிறு மாளிகை போல் பூர்த்தியாகி விட்டது.

"ஜன்னலுக்கு நாலு மைக்காத் தகடு மட்டும் கிடைத்து விட்டால், கண்ணுடிக் கதவு போட்டுவிடலாம்" என்ருன் தங்கவேலு. பண்டகசாலையில் கொஞ்சம் வாங்கிக்கொண்டால் போகிறது" என்று சொன்ஞன் ஒருவன். "நல்ல மாதிரியாய்ப் போச்சு, பண்டக சாலையில் இருப்பவர்களுக்கும் விஷயம் தெரிந்து விடுவதற்கா இந்த வேலை? கூடவே கூடாது" என்று மறுத்துவிட்டான் தங்கவேலு. தலைமைக் குமாஸ்தா, தாம் வேண்டியதை செய்வதாகச் சொல்லிவிட்டு, எங்கேயோ அவசரமாய்ப் போஞர்.

தலைமைக் குமாஸ்தா நேரே உதவி மானேஜரிடம் போஞர். அவரது மேஜை டிராயரில் ஒரு மைக்காத் துண்டு கிடந்ததை, முன் ஒரு சமயம் பார்த்திருக்கிருர். அவரிடம் அதைத் தரும்படிக் கேட்டார். அவர் தேடி எடுத்ததும், ஏன், எதற்கு என்றெல்லாம் விசாரணை செய்யத் தொடங்கி விட்டார். குமாஸ்தா முதலில் சால் ஜாப்புச் சொல்லிப் பார்த்தார். கடைசியில், நேரம் வீணுய்ப் போகிறதே, பொம்மை வேலை தாமதமாகிறதே என்று நினைத்து, விஷயத்தை ஒரு தினுசாய்ச் சொல்லி முடித்தார்.

"என்ன! காரியம் இவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டதா! இங்கே நாஞெருவன் இருக்கிறேன் என்கிற நினைப்பே உங்களுக்கு இல்லைபோலிருக்கு?" என்று கண்டிப்பான குரலில் உதவி மானேஜர் கேட்டார். குமாஸ்தா சமாதானம் சொல்லி, பொம்மையை ஒரு தரம் வந்து பார்த்துவிட்டுப் பிறகு கோபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

பட்டரைக்கு வந்து, பொம்மையைப் பார்த்த மாத்திரத்திலே, அவருடைய கோபம் இருந்த இடந் தெரியாமல் மறைந்து விட்டது. அதற்குப் பதில் அவரும் கண் மூளியாகி விட்டார். தட்சணம் மைக்காத் தகடும் வந்து சேர்ந்தது. அதை அளவுப்படி துண்டு துண்டாக வெட்டி ஜன்னலில் திருகு ஆணி போட்டு முடுக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி. எல்லாரும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். இந்தா, அந்தா என்று வேலை முடியுந் தறுவாயி லிருக்கும் போது, எதிர்பாராத ஓர் ஆபத்து வந்துவிட்டது.

மானேஜர் வந்து விட்டார்! சாதாரணமாக எப்போதும் சிரித்த முகத்தோடே இருக்கக் கூடிய அவர் இன்று வெகு கோபாவேசமாய்க் காணப்பட்டார். சில வேளை அவருக்கு பொல்லாத தலைவலி வந்துவிடும். அந்தச் சமயங்களில் மனுஷன் மகா பொல்லாதவராகி விடுவார். இதர சமயங்களில் வெகு தாராளமாய் இருப்பார். இப்போது தலைவலி உச்சநிலையிலிருப்பதாகவே தோன்றிற்று. சரசரவென்று எல்லாரும் அவரவர் வேலையைக் கவனிக்கப் போய்விட்டார்கள். தங்கவேலு மட்டும் ஒன்றும் செய்யத் தோன்றாமல் முக வாட்டத்தோடு கையில் திருப்புளியைப் பிடித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

"ஏனப்பா சும்மா நிற்கிறாய்? ஆணியை முடுக்க இவ்வளவு நேரமா?" என்று மானேஜர் சொன்னதும், தங்கவேலுவுக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. கோபிப்பார் என்று எதிர்பார்க்க, இப்படியாயிற்றே என்று எல்லாருக்கும் ஒரே ஆச்சரியமாயிருந்தது. தங்கவேலு ஒரு மாதிரியாய்த் திருப்புளியை வைத்துக் கொண்டு தடுமாறினான். சற்று நேரம் சும்மா நின்றுகொண்டிருந்த மானேஜர் பொறுமையை இழந்தார். தச்சன் கையிலிருந்த திருப்புளியைத் தாம் வாங்கிக் கொண்டு குனிந்து, ஒரு நிமிஷத்தில், ஜன்னல்களில் மைக்காவைப் பொருத்திவிட்டு, பெருமிதப் பார்வையோடு தலை நிமிர்ந்து சற்று முற்றும் பார்த்தார். பட்டறை ஆட்கள் அத்தனை பேரும் மகிழ்ச்சியும் வியப்பும் கலந்த புன்னகைபுரிந்தபடி இருந்தார்கள். மானேஜருக்குப் பெருமையாலும் சந்தோஷத்தாலும், முகம் மலர்ந்து விட்டது.

"யாருடைய தப்பா, இந்த வேலை?" என்று கேட்டார்.

"நாங்கள் எல்லாருந்தான் சேர்ந்து செய்தோம். தங்கவேலுதான் முழுப் பொறுப்புக்கும் பெருமைக்கும் உரியவன்" என்று ஒருவன் சொன்னான்.

"வேலை வெகு அபூர்வம்! சொக்கழகாயிருக்கிறது. இதை யாருக்காகச் செய்திருக்கிறீர்கள்? கம்பெனி வேலை தாமதமாவதற்கு இப்போது தான் காரணம் தெரிகிறது. எத்தனை நாளாக இப்படி நடக்கிறது?" என்று மானேஜர் கேட்டபோது, ஒருவரும் பதில் சொல்லத் துணியவில்லை. தங்கவேலு வினயமாக விஷயத்தைச் சொன்னான். அப்போது தங்கவேலுவின் ஸ்தானத்தில் தாம் இருந்திருந்தால் திண்டாடவில்லையே என்று ஒவ்வொருவரும் மனதுக்குள்ளே சந்தோஷப்பட்டுக் கொண்டார்கள்.

குழந்தைக்கு என்றவுடன், மானேஜருக்குத் தம்முடைய மகளின் நினைப்பு வந்து விட்டது. அதனால், அவர் மனம் இளகி விட்டது. இருந்தாலும், கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை. பொம்மை, இன்ன கம்பெனியில் குமாஸ்தாவாயிருக்கும் ராயப்பனுக்கு என்று சொன்னதும், மானேஜருக்கு மீண்டும் ஆத்திரம் வந்து விட்டது. தம் கம்பெனிக்குப் போட்டிக் கம்பெனியில் வேலை பார்க்கிற ஒருவனுக்கா இவ்வளவு அபூர்வமான வேலைப்பாடமைந்த பொம்மை வீட்டை இத்தனை ஆட்களும் சேர்ந்து செய்து முடித்தார்கள்? "கூடவே கூடாது. நம் கம்பெனியிலேயே இதை வைத்துக் கொள்வோம்" என்று எண்ணினார். ஆனால், இதை எல்லாரும் பார்க்க நேரிட்டால், இதைச் செய்து முடித்த விருத்தாந்தம் எங்கும் பரவிவிடும். கம்பெனியின் வேலை நேரத்தில் ஆட்கள் வெளி வேலையில் ஈடுபடுவதாக வெளிக்குத் தெரிய விடக்கூடாது.

"தங்கவேலு! வேலைப்பாடு என்ன இருந்தாலும், நீங்கள் எல்லோரும் செய்தது சுத்தத் தப்பு. இந்தப் பொம்மையை நீ ராயப்பனுக்குக் கொடுக்கக் கூடாது. இதை என்ன பண்ணுவதென்று பிறகு சொல்கிறேன். சாயங்கிரம் என்னை வந்து பார்" என்று சொல்லிவிட்டு, மானேஜர் தமது அறைக்குப் போய்விட்டார்.

சாயங்கிரம் ராயப்பனும் வந்து சேர்ந்தான். பொம்மையின் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டதுமே, அவனுக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. தங்கவேலுவிடம் தன்

நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டான். தங்கவேலு அதற்குள், மானேஜர் சொன்ன விவரத்தைச் சொல்லி, பொம்மையை ராயப்பனுக்குத் தர முடியாமல் நேர்ந்து விட்டதற்கு மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டான்.

மானேஜர் என்ன வெல்லாமோ யோசித்துப் பார்த்தார். ஆள் மகா நேர்மைக் கிறுக்குப் பேர் வழி. பொம்மை செய்த மரம் கம்பெனியின் மரமா இல்லையா என்று அவருக்குச் சந்தேகம். "மரம் ஒரு வேளை ராயப்பனுடைய தாகவே இருந்துவிட்டால், கம்பெனியில் பொம்மையை வைத்திருப்பது தப்பாகி விடுமே. போட்டிக் கம்பெனிக்குப் புத்தி வரப் பண்ணி விட்டால்—? நம் கம்பெனி ஆட்களின் கைவேலையை, அந்தக் கம்பெனிக் குமாஸ்தா ஒருவன் மூலம் போட்டிக் கம்பெனியில் உள்ள எல்லாரும் கண்டு பொருமைப் படட்டுமே. இது தான் சரியான முடிவு" என்று தமக்குள் எண்ணமிட்டார் மானேஜர்.

அவர் மனத்தில் பலபட்ட எண்ணங்கள் மோதிச் சாடலாயின. கண்ணைக் கவரும் அழகு வாய்ந்த பொம்மை வீட்டின் தோற்றம் இன்னும் கண்ணுக்கெதிரே இருப்பது போல் தோன்றியது. வர்ணத்தின் பளபளப்பு மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. திருப்புளியைத் தம் கையில் எடுத்துக் கொண்டபோது, வேலையாட்கள் 'இவருக்கு என்னடா தெரியும்?' என்கிற மாதிரி சந்தேகத்தோடு பார்த்தார்கள். பிற்பாடு, ஒரு நிமிஷத்தில் ஆணியை முடுக்கிவிட்டு, நிமிர்ந்து பார்த்தபோது, அவர்கள் முகத்தில் தோன்றிய ஆச்சரியமும், சந்தோஷமும் மனதுக்கு எவ்வளவு திருப்தியா யிருந்தது! தொழிலாளிகளின் பாராட்டுதல் எவ்வளவு பெருமை தரக்கூடிய விஷயம்! தாம் மட்டும் நினைத்தால், எப்போதும் தம் கைத் திறத்தைக் காட்ட முடியும் என்பதை நிரூபித்தாயிற் றல்லவா? மானேஜர் தானே, அவருக்கு ஆணி முடுக்கவா தெரியப் போகிறது என்று நினைத்து விட்டார்கள், இல்லையா?

பட்டரையில் நிகழ்ந்த காட்சியைப் பற்றி நினைக்க நினைக்க, மானேஜருக்கு மனம் பூரித்து, முகத்தில் புன்னகை அரும்பத் தொடங்கிவிட்டது. சற்று யோசித்தார். புன்முறுவல் மெல்ல மெல்ல மறைந்தது. என்ன எண்ணம் திடீரென்று தோன்றிற்றோ, டெலிபோனைக் கையிலெடுத்துக் கொண்டார்.

*   *

பட்டரையில் ஒரே அமளி குமளியாய்க் கிடக்கிறது. மானேஜருக்கு விஷயம் தெரிந்துவிட்டது எல்லாருக்கும் ஆபத்துத்தான் என்ற எண்ணமே பெரும்பாலாரின் மனத்தை வாட்டியது. சிலர் சமாதானம் சொன்னார்கள். சிலர் மற்றவருக்கு அனுதாபம் தெரிவித்தார்கள்.

நியாயமான கட்டணம்

ஒரு கிராமத்து டாக்டர் வீட்டுக் கதவை ஒரு நாள் இரவு மூன்று மணிக்கு யாரோ இடித்தார்கள். டாக்டர் எழுந்து கதவைத் திறந்தார். கதவிடித்தவன் பத்து மைலுக்கப்பாலுள்ள ஓர் ஊருக்கு உடனே புறப்படும்படி டாக்டரை அவசரப் படுத்தினன். அவசர அவசரமாக உடுத்திக் கொண்டு, தமது காரில் புறப்பட்டார் டாக்டர். அந்த மனிதனும் டாக்டருடைய காரில் ஏறிக்கொண்டான். கார் வெகு வேகமாய்ச் சென்றது.

போய்ச் சேர வேண்டிய இடம் வந்ததும், அந்த மனிதன், "உங்களுடைய விஸிட்டிங் பீஸ் என்ன?" என்று டாக்டரைக் கேட்டான்.

அவன் கேள்வியைக் கேட்க, டாக்டருக்கு வியப்பா யிருந்தது. "இரண்டு ரூபாய்" என்று அவர் பதிலளித்தார்.

டாக்டர் சொன்னதைக் கேட்டதும், அந்த மனிதன், தன் பையிலிருந்து இரண்டு ரூபாய் எடுத்தான். "இந்தாருங்கள், உங்கள் பீஸ். நியாயமான கட்டணம். அந்த டாக்ஸிக்காரன் ஐந்து ரூபாய் அல்லவா கேட்டான்!" என்று சொல்லிக்கொண்டே, அந்த இரண்டு ரூபாயை டாக்டரிடம் நீட்டினன்.

"பாவம்! ராயப்பன் கொடுத்து வைக்காதவன். என்ன ஜோரான பொம்மை வீடு! கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை" என்ருன் ஒருவன் அனுதாபத்தோடு.

"பாவமாவது, புண்ணியமாவது! இந்தக் காலத்தில் யாருக்கும் கொஞ்சங்கூட உதவி ஒத்தாசை பண்ணவே கூடாது. ராயப்பனும் ராயப்பன்! நல்ல ராயப்பன் வந்தான், இப்படி எனக்கு வினை வைக்க. இனிமேல் என் கதி என்ன ஆகிறது? சீட்டுக் கிழிய வேண்டியதுதான். மானேஜர் என்னைச் சாயந்திரம் தம்மிடம் வரச் சொல்லி விட்டார். என்ன ஆகுமோ தெரியாது" என்று ஆத்திரம் ஆத்திரமாய்ப் பேசினன் தலைமைத் தச்சன் தங்கவேலு. ராயப்பன் மிகவும் கவலையோடு பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

அப்போது திடீரென்று ஓர் ஆசாமி அங்கே வந்து சேர்ந்தான். மானேஜர் தான் அனுப்பினரோ, தங்கவேலுவைக் கூட்டிப்போக வந்தவனே! எல்லாரும் ஒரு முகமாய் வந்தவனை ஆவலோடு நோக்கினர்கள். வந்தவன் எலக்ட்ரிக் வேலை பார்க்கிறவன். "இது என்ன வேலை அப்பா, அவ்வளவு சீக்கிரமாய்ப் பார்த்து முடிக்க வேண்டியது?" என்று அவன் கேட்டான்.

"வேலையா? இங்கே என்ன வேலை?" என்று வெறுப்புத் தட்டிய குரலில் திருப்பிக் கேட்டான் தங்கவேலு.

"எதிலேயோ விளக்குப் போட வேணுமாமே, அதுதான் - என்னையா எல்லாரும் இப்படிப் பேசாமடந்தைகளாய்ப் போய்விட்டீர்கள். சும்மா விழித்துக்கொண்டு நின்ருல், நான் வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குப் போவது எப்படி? மானேஜர்தான் டெலிபோனில் சொல்லியனுப்பினரே. யாரோ ராயப்பனமே ராயப்பன்; அவனுக்குப் பொம்மை செய்தாயாமே; அதிலே எலக்ட்ரிக் விளக்குப் போட வேணுமாம். விளக்குப் போடாமல் பொம்மையை, அவனிடம் கொடுக்கக்கூடாதாம். போட்ட பிறகே, ராயப்பனிடம் கொடுக்கும்படி, எஜமான் உத்தரவு - சரி, பொம்மை எங்கே ஐயா? எங்கே விளக்கு வைக்க வேணும்? வேலையை உடனே மள மள என்று முடித்து விடும்படி கட்டளை" என்ருன் எலக்ட்ரிக் வேலை பார்க்கிறவன்.

✲

சாம்ராஜ்ய உண்மைகள்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய இந்த விஷயங்கள் உங்களுக்குத் தெரியுமா?

1. ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் விஸ்தீர்ணம் 6 லட்சம் ஏக்கர்கள். 29 ஜோடி போர்வை, 30 கண்டிர கோடாலிகள், 100 கத்திகள், 50 கத்தரிக்கோல்கள், 200 கைக்குட்டைகள், 100 பவுண்டு மாவு, 6 ஷர்ட்டுகள், இன்னும் சில சில்லறைச் சாமான்கள் இவைகளை ஜாக் பாட்மான் என்பவர் ஆஸ்திரேலியச் சுதேசிகளுக்குக் கொடுத்து, அந்த ஆறு லட்சம் ஏக்கரா நிலத்தையும் 1835-ஆம் ஞு வாங்கிவிட்டார்.

2. இந்தியாவில் 1800 முதல் 1850-ஆம் ஞு வரையில் 15 லட்சம் பேரும், 1850 முதல் 1900-ஆம் ஞு வரையில் இரண்டு கோடி பேரும் பஞ்சத்தால் மாண்டார்கள்.

3. தெற்கு ரொடீசியாவில் உள்ள 25 ஆயிரம் ஓட்டர்களில் 30-பேர் தான் சுதேசிகள்.

4. 1943-ஆம் ஞு ஏப்பிரல் மீ இந்தியா பற்றி நடந்த பிரிட்டிஷ் காமன்ஸ் சபை விவாதம் ஒன்றின்போது, 600 அங்கத்தினரில் 15 பேர் தான் பிரசன்னமாகி யிருந்தார்கள்.

விட்ட குறை

மகாத்மா காந்தி

கதர் கட்டுவோரெல்லாம் நூற்றுத்தான் ஆகவேண்டும் என்று, மீண்டும் வற்புறுத்துகிறார் மகாத்மா. அதுதான் நமது மனோபாவத்திலேயே அஹிம்சைப் பண்பை ஏற்படுத்தும் என்பதற்கு விரிவான காரணமும் சொல்லுகிறார். ‘கிராம உத்தியோக்’ ஆசிரியரின் அனுமதியுடன், இந்தக் கட்டுரையை வெளியிடுகிறோம்.

என்னிடம் ‘கிராம உத்தியோக’ பத்திரிகாசிரியர் இவ்வாறு சொல்லுகிறார்: “ஜனங்கள் ஏன் கதருக்கு நூல் கொடுக்கவேண்டும் என்பது பற்றி நீங்கள் எழுதியிருந்த சென்ற கட்டுரை திருப்திகரமாயில்லை என்று நான் அஞ்சுகிறேன். ஒவ்வொருவரும் நூல் நூற்காவிட்டால், அஹிம்சா தர்ம சுயராஜ்யம் அசாத்தியமாகும் என்ற அபிப்பிராயத்தையே அந்தக் கட்டுரையில் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லுகிறீகள். உங்கள் வாதம் பூராவும் இந்த ஒரே அபிப்பிராயத்தைத்தான் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. என்றாலும், இந்த முக்கிய அம்சம் தெளிவாய் விளக்கப்படவேயில்லை. ஆனால், இதை எதிரி ஒப்புக்கொண்ட விஷயம் போல் வைத்துக்கொண்டு, திரும்பத் திரும்ப ஊர்ஜிதம் செய்கிறீர்கள். நூற்பதைவிட அதிக லாபகரமான தொழில் செய்பவர்கள் பலருண்டு. அவர்கள் உள்படச் சகல ஜனங்களும் தத்தமக்கு வேண்டிய துணிகளைப் பெறுவதற்காகச் சர்க்காவைச் சுற்ற வேண்டும் என்கிறீர்கள். இதற்கும் அஹிம்சா தர்ம சுயராஜ்யத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறதென்று நீங்கள் விளக்கவேண்டும். இல்லாவிட்டால், உங்கள் வாதம், பலருக்குத் திருப்தியளிக்காது. ஏனென்றால், தாங்கள் அதிக லாபகரமான தொழில்களைச் செய்யக்கூடியவர்களாயிருந்தாலும்கூட, கதர் உடுத்த விரும்புவோர் எவரும் நூற்கத்தான் வேண்டும் என்று கேட்பது நியாயம் அல்ல என்று அவர்கள் மனப்பூர்வமாய் எண்ணுகிறார்கள். எனவே, உங்கள் வாதத்திலே சொல்லாமல் விடுபட்டுப் போன குறையை நீக்கி, நூல் நூற்பதன் மூலம் அஹிம்சா தர்ம சுயராஜ்யம் நமக்கு எப்படிக் கிடைக்கும் என்பதை அடுத்த இதழில் விளக்கினால் நன்றாயிருக்கும்.”

இப்போது இங்கிலீஷிலே பதிலளிப்பதுதான் நல்லது. இங்கிலீஷ் தெரியாதவர்கள் ‘விட்ட குறை’யைப் பற்றிக் கேட்க மாட்டார்கள். அப்படிக் கேட்பவர்களும் ஒரு சிலர்தான் இருக்கமுடியும். காரணம் வெகு சுலபமானது. நூல் நூற்பதற்கும் அஹிம்சா தர்மப்படி பெறும் சுயராஜ்யத்துக்கும் உள்ள தொடர்பை என் வாதத்தில் நான் எப்படி எடுத்துக் காட்டியிருக்கிறேன் என்பதை அவர்கள் அறிவார்கள். அதனால் அவர்களுக்கு விட்ட குறையின் விளக்கம் தேவையில்லை. சுயராஜ்யத்தைப் பெறுவதற்கு எப்படியும் உழைத்தாக வேண்டும். அது பலாத்கார ரீதியிலோ, அஹிம்சா தர்ம ரீதியிலோ இருக்கலாம். பலாத்கார வேலை பற்றி நமக்குத் தெரியும். நாசத் தொழில் புரியும் நவீன ஆயுதங்களிலும், நாசத் தொழிலுக்கு என்னென்ன அவசியமோ அத்தனை விஷயங்களிலும் பயிற்சி பெறவேண்டியது அதற்கு மிக்க அவசியமாயிருக்கிறது. எல்லாரும் ஏகோபித்து இந்த வழியை உதறித் தள்ளிவிட்டோம். சட்ட ரீதியான வழி, அஹிம்சைப் போக்கிலுள்ளதேயாயினும், அதுவும் வெகு நாளைக்கு முன்பே காலங்கடந்த சங்கதியாகிவிட்டது. ஆயுதந் தரித்த எதிரியிடமிருந்து இந்த வழியில் விடுதலை பெற்றுவிட முடியுமென்று நினைப்பது மூட நம்பிக்கை என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, சுதந்தரம் பெறுவதற்கு உள்ள ஒரே மார்க்கம் அஹிம்சா தர்ம வேலைதான். அஹிம்சா முயற்சியில் ஈடு

படுவதற்குத் தம்மைப் பக்குவப் படுத்திக் கொள்ள, இந்தியர்கள் எந்தப் பயிற்சியை அல்லது வேலையை மேற்கொள்ள வேண்டும்? இந்தியாவின் முக்கியமான தொழில், பருத்தித் துணி நெய்தல். இது கிராமங்களில் நடைபெற்று வந்தது. இந்தத் தொழிலும், இதை நடத்திவர உதவியாயிருந்த இதர பல தொழில்களும் அழிந்து போனதனுல்தான், இந்தியா சுதந்தரத்தை இழந்துவிட்டதென்று பலர் எடுத்துக்காட்டி யிருக்கிருர்கள். ஆகவே, நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்? அஹிம்சா தர்மத்துக்குப் பொருந்துகிற முறையில், இந்தத் தொழிலையும் இதோடு சேர்ந்த இதர தொழில்களையும் மீண்டும் உயிர்ப்பித்தாக வேண்டும். நமது நினைப்பெல்லாம் இவ்வாறு தொழில்களை உயிர்ப்பிப்பதிலேதான் படிந்திருந்தது. ஆங்கிலேயரும், இதர நவீனத் தொழில்காரர்களும் செய்வதைப் பின்பற்றி, மனித உழைப்புக்குப் பதிலாக யந்திர சாதனங்களைக் கையாள முயற்சி செய்தோம். என் மனதுக்கு இது சரியாய்ப்படவில்லை; அஹிம்சா தர்ம ரீதியான மனித உழைப்பை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக யந்திரங்களை உபயோகிக்கிற தென்பது பலாத்கார முறையாகும். ஆதலால், நான் இதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன். அஹிம்சைக்கும் பலாத்காரத்துக்கு மிடையே உள்ள போராட்டம் இன்னும் நடந்து கொண்டே இருக்கிறது. இப்போது முடிவடைந்து வரும் யுத்தம், பலாத்காரத்தால் ஒரு பயனுமில்லை என்பதை நிரூபித்துவிட்டதாகவே, நான் கருதுகிறேன். ஆனுல், அஹிம்சையே பயனுள்ளது என்பதை இனிமேல்தான் நிரூபிக்க வேண்டும். மேல் நாட்டில் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நிலைமையைச் சமாளித்துக்கொள்ளப் புதிது புதிதாக ஏதாவது செய்து கொண்டே யிருப்பார்கள். அவர்களைப் போலவே நாமும் செய்தால்தான், யந்திர சாதனத்தால் இந்தியாவின் நடுநாயகமான தொழிலை உயிர்ப்பிக்க முடியும். இப்படிச் செய்ய முடியாவிட்டால், இந்திய மக்களில் பெரும் பகுதியினர் இன்றிருப்பதைவிடச் சற்றும் மேல் நிலைக்கு வந்துவிட முடியாது. என் திட்டத்தை நிரூபிப்பதற்கு நான் எவ்வித வாதமும் செய்யவில்லை. ஏனென்ருல், ஏற்கெனவே, பிரசுரமாகியுள்ள என் புத்தகங்களில் நான் எழுதியுள்ளவற்றைக் கவனமாய்ப் படித்தால், என் காரணங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இனி, இழந்துபோன தொழிலையும் அதன் உப தொழில்களையும் மீட்பதற்கு, நாட்டிலுள்ள ஆண், பெண், குழந்தைகளில் மிகப் பெரும்பாலோர் செய்யத்தக்க ஒரே அஹிம்சா தர்ம வேலை எது? அதுதான் ராட்டை சுற்றுவது. இப்படிப் பார்க்கும் போது, சர்க்காவானது, அஹிம்சையின் இணையிடில்லாச் சின்னமாகிவிடுகிறது. அது சுயராஜ்யம் பெறுவதற்குரிய கருவியாக இருக்கவேண்டுமாகையால், அதற்குச் சர்க்காரின் ஆதரவோ, வேறு எவருடைய ஆதரவோ இருக்கப்படாது. இத்தகைய ஆதரவுகள் இல்லாமலே, அது செழிப்படைய வேண்டும். ஒரு வேளை, சர்க்கார் எதிர்க்கிறது, அல்லது நூல் ஆலை, நெசவு ஆலைகளின் முதலாளிகள் எதிர்க்கிருர்கள் என்ருல், அந்த எதிர்ப்புக்களையும் சமாளித்து, சர்க்கா வளரவேண்டும். கிராமாந்தரங்களில் உள்ள லட்சக்கணக்கான மக்களின் பிரதிநிதி சர்க்கா. ஆலைச் சொந்தக்காரர்களுக்கும் அவர்களைப் போன்ற பிற முதலாளிமார்களுக்கும் அது பிரதிநிதி யல்ல.

"சர்க்காவின் நோக்கம் அஹிம்சா தர்மப்படி சுயராஜ்யத்தைக் கொண்டு வருவதே யென்று வைத்துக்கொண்டால், இன்னும் அதிக உபயோகமான தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவன், அல்லது நூல் நூற்கப் பிரியப்படாத ஒருவன் ஏன் நூற்கும் தொழிலைச் செய்யவேண்டும்?" என்று ஆசிரியர் கேட்கிருர். காரணம், வெறும் உபயோகத்தை மட்டும் பொறுத்த தல்ல; மனுேபாவத்தையே பொறுத்ததாகும். கிராம வாசிகள் நகர வாசிகளைப் பின்பற்றப் பழகி விட்டார்கள். அதனுல், கிராமத்திலேயே இருந்து தங்கள் நிலையைச் சீர்படுத்திக் கொள்

வதற்குப் பதிலாகக் கிராமவாசிகள் நகர்ப் புறங்களின் கழிவிடங்களையே வாசஸ்தலமாக நாடி ஓடுகிறார்கள். அஹிம்சா தர்ம சுயராஜ்யத்தைப் பெறுவதன் பொருட்டு, ஒவ்வொரு மனிதனும் நூற்பதற்கென்று கொஞ்ச நேரத்தையாவது தனியாய் ஒதுக்கி வைத்தால், நூற்பதற்கு அனுகுணமான ஒரு சூழ்நிலை உண்டாகிவிடும். கதர், இப்போது பெரும்பாலும் இருப்பதுபோல் வெறும் வியாபாரப் பொருளாயிராமல், சொந்த உபயோகப் பொருளாக ஆகிவிட்டால், ஆலைத் துணியோடோ, வேறு எந்தத் துணியோடோ போட்டியிட வேண்டிய அவசியம் இராது. பரம ஏழையும் பெரும் பணக்காரனும், கொஞ்சமும் சிரமமில்லாமல் கதரை அணிய முடியும். கதர் 'நமது விடுதலைச் சின்னமான உடை' என்று பண்டித ஜவஹர்லால் நேருவே குறிப்பிட்டிருக்கிறார் என்றால், அதில் ஆச்சர்யமில்லை.

['கிராம உத்யோக' ஆசிரியரின் குறிப்பு: தமது வாதத்தில் சொல்லாமல் விட்டுப்போன குறையை, காந்திஜி நீக்கியுள்ளார். கதர் அணிவதனாலே மட்டும் கதர் மனப்பான்மை வந்து விடாது. இப்போது கதரை ஒரு சின்னமாகவே அணிகிறோம். ஆக்கத் திட்டத்திலுள்ள 14 ஷரத்துக்களில் கதரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அது பெரிய விஷயமாகி விட்டது. அது மட்டும் போதாது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அது பரவியிருக்கவேண்டும். ஒவ்வொரு துறையிலும், தனி நபருக்கும் சரி, கிராமத்துக்கும் சரி, கதரானது அவரவருடைய சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு பொருளாகும். கதர் அணிபவர் மில் துணியைத் தொடமாட்டார். அதே போல், முதலாளித்துவ முறையில் தேக்கிவைத்துள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் எந்தப் பொருளையும் உபயோகிக்க மாட்டார். ஆலையில் உற்பத்தியாகும் பொருள்களை நாம் உபயோகிப்பதால், கைத்தொழில் செய்கிறவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. இன்று யுத்தங்கள் ஏற்படுவது பொருளாதாரக் காரணங்களாலேயே. நாம் அன்னிய நாட்டுப் பண்டங்களை உபயோகிப்பதால், அன்னியப் பண்ட உற்பத்தியாளர்களுக்குப் பேராசை மூண்டு விடுகிறது. இது, அயல் நாட்டாரை வலிய அழைத்து நம்மை ஆளும்படி அவர்களைக் கேட்பது போல் ஆகிவிடுகிறது. யுத்தங்கள் மூலவும், அரசியலில் அடிமைப்படவும் இப்படித்தான் நாம் வழி தேடிக் கொண்டு விடுகிறோம். அஹிம்சா தர்ம சுயராஜ்ய மடைவதற்கு நாம் முதன் முதலில் செய்யவேண்டிய வேலை 'கதரைத் தவிர வேறு துணி உடுத்துவதில்லை; கிராமாந்தரங்களில் செய்யப்பட்ட பண்டங்களைத் தவிர வேறு பண்டங்களை உபயோகிப்பதில்லை' என்று சங்கல்பம் செய்து கொள்வதே யாகும். பலாத்காரத்தை அடிப்படையாய்க் கொண்ட ஆட்சி முறையிலே, புறக் கட்டுப்பாட்டின் நிமித்தம் பயிற்சி அளிக்கவேண்டியிருக்கிறது. மேலே இருந்து வரும் உத்தரவுகளைச் சரியா தப்பா என்று எதிர்த்துக் கேட்காமல் தட்சணமே கீழ்ப்படிந்து நடக்கிற பழக்கம் பெறுவதற்காக, நாள்தோறும் கவாத்து நடத்துவதும், படைகளை அணி வகுப்பதும் மிக்க அவசியம். இதே போல, சுயமான கட்டுப்பாடு பெறுவதற்காக, நாள்தோறும் நூற்பது நல்ல பயிற்சி தரும். தினசரி நூற்பது எவ்வளவுக் கெவ்வளவு சங்கடமாகவும், தொந்தரவாகவும் ஆகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகப்படியான சுய கட்டுப்பாடு ஏற்பட்டு விடும். அஹிம்சா தர்மத்தை அடிப்படையாய்க் கொண்ட சுயராஜ்யத்துக்குச் சுய கட்டுப்பாடு மிக்க அவசியம்.]

*

காற்றும் பரமனும்

காற்று நல்ல வாசனையையும் கெட்ட வாசனையையும் கொண்டு வீசுமாயினும், அவைகளால் விகாரப்படுவதில்லை. பரம்பொருளும் அந்தக் காற்றைப் போன்றதே.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

சோனால்	பயோ-சர்சா
படை, சொறி சிரங்கு, முகப் பரு, சேற்றுப்புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய எல்லாவிதமான சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு.	ரத்த சுத்தி திராவகம் துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான் முதலியவைகளுக்கும், வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலிகள் பிடிப்பு பக்ஷவாதம், மொழி சூலை முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்து. பாட்டில் 1-க்கு விலை **2-8-0**

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஏஜண்டுகள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்

மருந்து ஷாப் : : மதுரை



சந்தோஷத்தைப் போலவே குடும்ப சௌகரியத்துக்கும் முன்னதாக திட்டம் போடவேண்டும்

சில சிறிய சுகபோகப் பொருள்கள் இல்லாவிட்டால குடும்ப வாழ்க்கை உற்சாகமற்றதாகவே இருக்கும். இப்பொருள்களை வாங்கி வைத்துக்கொண்டு அனுபவிக்கக்கூடிய மனிதன் சந்தோஷசாலிதான்! ரேடியோ, டெலிபோன, புஷ்பங்கள், குழந்தைகளுக்குரிய விளையாட்டுச் சாமான்கள்—இவைதான் பணம் படைத்தவனுக்கும் அது படைத்திராதவனுக்கும் உள்ள வேற்றுமைகளாகும். இவைகள் இந்த யுத்தததிற்குப் பிறகு ஏராளமாய்க் கிடைக்கும். ஆனால், ஒருமாத வருமானத்திலிருந்து அல்லது மூன்றுமாத வருமானத்திலிருந்துகூட நீர் இப்பொருள்களையெலலாம் வாங்கமுடியாது.

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜென்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

ஆகையினால் தான் இப்போது பணம் சேர்த்துவைக்க முடியுமென்று நினைக்கும் அநேகர் ஒவ்வொரு மாதமும் கிரமமாக சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய எதிர்கால வாழ்வு வாடகைக் கிரய ஏற்பாடாகிய பாறைகளின் மேல் மோதி உடைபடாது. தங்கள் சேமிப்புகளைச் சிறந்த முறையில் வட்டிக்குப் போட்டுவைப்பதற்கு உகந்ததென்று அவர்கள் தெரிந்துகொண்ட சாதனம்

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி $4\frac{1}{4}$ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அது வரையில் சேர்ந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

AAA 127

தமிழரின் தியாகம்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

மத்திய இந்தியாவிலே ஒரு பிரதேசம் ரஜபுதனம். அதன் பல நாடுகளில் ஒன்று உதயபுரி. முன்னம் சித்தூர் என்றே அதன் பெயர். சித்தூர் வேந்தன் உதய சிம்மன். அவனோ பச்சைக் குழந்தை. தாயுமில்லை, தந்தையுமில்லை. பண்ணா எனும் தாதியிடம் வளர்ந்து வருகிறான். சிற்றப்பன் வனவீரன், பிரதிநிதியாக இருந்து, பரிபாலனம் செய்கிறான்.

"பச்சைப்பாலன் இவன். நானோ கணவனுடன் உடன் கட்டை ஏறுகிறேன். இவனுக்கு நீயே தாயும் தந்தையும். தக்க வயது வரும் வரையில் காத்துவருதல் வேண்டும். அரியணையில் இவன் அமரும் வரையில், இவன் உன் அடைக்கலம்" என்று சொல்லிப்போனாள் ஈன்றெடுத்த அன்னை. தாதியும் கண்ணிமைபோல் காத்து வந்தாள் ராஜகுமரனை.

அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர் ஆயினும் என்ன? பெறலரும் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாவர் என்பர் பெரியோர். எனவே, சாமானிய மானிடர் எம்மாத்திரம்! வனவீரன் அரசுரிமையைச் சுவைத்தான்; அறிவு கலங்கினான்; ஆயுள் அளவும் தானே ஆளவேண்டுமெனக் கருதினான்; அரசுக்குரிய உதய சிம்மனை வாளுக்கு இரை யாக்கவும் எண்ணினான்! ஏனென்று கேட்பார் யார்?

ஒரு நாள் மாலைப்பொழுது. பாலனைப் பொன் ஊஞ்சலில் இட்டுப் பண்ணா தாலாட்டுகிறாள். அது சமயம் ஒருவன் விலாப்புடைக்க ஓடி வந்தான்; பண்ணாவின் காதில் ஏதோ ஓதிவிட்டுச் சிட்டாய்ப் பறந்தான். அவ்வளவுதான். ராஜகுமரனை ஒருவன் எடுத்துச் சென்றான் கூடையில் மறைத்து. இதற்குள் வனவீரன் அங்கு வந்து சேர்ந்தான் உடைவாளுடன்; "எங்கே உதயன்?" என்று வினவினான்.

பொன்னூஞ்சலைக் காட்டினாள் பண்ணா எனும் தாதி. கணநேரங்கூட அக்காவலன் தயங்கவில்லை. உடைவாளை உருவி வீசினான். குழந்தையோ தலைவேறு, உடல்வேறு ஆயது. பண்ணாவுக்கோ ஒரு பக்கம் அளவிலா ஆனந்தம். ராஜகுமரன் கூடையில் மறைந்து உயிர் தப்பியதே ஆனந்தத்துக்குக் காரணம். ஒரு பக்கம் ஆறாத் துயரம். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த பாலன் வெட்டுண்டான் என்பதே துயரத்துக்கு மூலம்.

பத்தாண்டுகள் கழிந்தன. உதய சிம்மன் வெளிக் கிளம்பி, அரியணையில் அமருகிறான். அப்போதுதான், பண்ணா தன் பாலனைப் பறிகொடுத்தாள், ராஜபாலனைக் காத்தருளினாள் என்று உலகம் உணர்ந்து கொண்டது. உடனே பண்ணா பெருங்கீர்த்தியடைந்தாள்; சரித்திரத்திலும் சிறப்பு எய்தினாள்; பற்பல பாஷைகளிலும் அவள் சரிதம் வெளியாயிற்று. உலகம் உச்சிமீது கொண்டு கொண்டாடியது. இப்போது அவள் சரிதமோ வெள்ளித் திரையிலும் ஏறிவிட்டது. "தியாகதேவி" என்று எல்லாரும் அவளை ஏத்துகின்றனர்.

நம் தமிழகத்திலே, பண்ணாவை விஞ்சும் வீரத் தியாகியர்—ஆடவரிலும் பெண்டிரிலும் — கொஞ்சமா, நஞ்சமா? ஆயினும் என்ன? கும்பலக்ன ஜாதகனைப்போல் குடத்து விளக்காகவே இருக்கின்றனர். மலையுச்சி விளக்காக ஒளி வீச வைக்காதது

'பகைவனுக் கருள்வாய், நன்னெஞ்சே - பகைவனுக் கருள்வாய்!' என்று பாடினார் பாரதியார். பகைவனுக் கருள்வது எளிதிலே கை வரக்கூடிய மனோபாவமல்ல. அதிலும் அதற்காகப் பெருந் தியாகமும் புரிவதென்றால், ஆச்சர்யமல்லவா? இதற்குப் பழந்தமிழரிலே ஓர் உதாரண புருஷன் இருந்திருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்!

யார் குற்றம்? இது கிடக்கட்டும். கிடங்கில் கோமான்-பெருமாள் முதலியார் என்பார்-கிளம்புகிறார்; "தமிழூர் சளையார், தமிழரின் தியாகச் சிறப்பினுக்கு ஈடேது?" என்று மார் தட்டுகிறார்.

தொண்டை மண்டலத்திலே திண்டிவனம் ஒரு திவ்ய தலம். திருத்திண்டீச்சுரம் என்பதே அதன் சரியான பெயர். அது ஒரு பெரிய ரயிலடியுமாம். அதற்கருகே "கிடங்கில்" என ஒரு சிற்றூர் உண்டு. இன்று அக் கிடங்கில், நாட்டுப்புறமாகத் தோன்றலாம். கூர்ந்து நோக்கின், நகர்ப்புறத்தின் சின்னங்கள் தென்படும். எங்ஙனம்? அங்கே சிதைந்த அகழியொன்று பார்க்கலாம், இடிந்த கோட்டையொன்றும் காணலாம்.

சங்க நூல்களிலும் சதுர் கொண்டது கிடங்கில். "கிளைமலர் படைப்பைக் கிடங்கில் கோமான்," என்று "சிறுபாணாற்றுப்படை" பேசும். கொத்துக் கொத்தாக மலர்கள் நிறைந்த பூங்காவுடைய கிடங்கில் என்பதே அதன் பொருள். ஆதி காலத்திலே, கிடங்கிலைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவன் நல்லியக் கோடன் என்பவன். அவன் "பத்துப் பாட்"டிலே சிறுபாணாற்றுப் படை என்பதின் பாட்டுடைத் தலைவன்.

நல்லியக் கோடன் பெருங்கொடையாளியுமாம். வேலூர், ஆமூர், முதலியன அவனது நகரங்களில் சிறந்தவை. அவனது படை வீடுகளில் ஒன்று எயிற் பட்டினம் என்பதாம். எல்லைப்புறப் படைவீடு மாவிலங்கை எனப்படும். இஃது புனல் நாட்டினுக்கு வடக்கில் இருந்தது. அருவா நாட்டின் அருகே குலவியது. தொண்டை நாட்டின் இருபத்து நான்கு கோட்டங்களிலே பலவற்றில் அக் கொடையாளியின் ஆட்சி பரவியிருந்தது.

உத்தேசம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன், கிடங்கில் நகரிலே பெருமாள் முதலியார் எனும் பிரபு ஒருவர் இருந்தார். அவர் வேளாண் குலத்தவர்; மிக்க செல்வர்; கப்பல் வர்த்தகமும் நடத்தியவர்! பொன்மகள் அவர் மனையில் பொருந்தி யிருந்தாள். செல்வத்துப் பயனே ஈதல் என்பர். அதற்கு ஓர் இலக்காக இருந்தார் அவர். பல் அறங்களும் வளர்த்து வந்தார். அரசவையிலே அவருக்குச் சரியாசனம் உண்டு.

முன்னாளில் வேந்தர்க்கு, மகட்கொடை நேர்தலுக்கும் முடி சூட்டுதலுக்கும் உரியோர் வேளாளர். ஆனது பற்றி அரசவையில் அன்னாருக்குச் சரியாசனம் கொடுத்தல் மரபு. காஞ்சியையும் ஆண்ட சோழ வேந்தன் சபையில் அவர் வீற்றிருந்தார். அரசரும் அவரும் உல்லாசமாக உரையாடுதல் உண்டு. ஒரு சமயம், "முப்பத்திரண்டு அறமும் வளர்த்தற்கு உரியார் யாவர்?" என அச் சபையில் ஒரு கேள்வி பிறந்தது. அனைவரும் "அரசரே" என்றனர். வேந்தன் அக மகிழ்ந்தான்.

பெருமாள் முதலியாரோ, "அன்று, அன்று! அரசர் உரியவர் அல்லர். வேளாளரே எவ் வறமும் வளர்த்தற்கு உரியார்," என்று விளம்பினார். மீண்டும் மன்னவன் வினவினான். மறுபடியும் முதலியார் அவ்விதமே மொழிந்தார். நிருபனுக்கோ அது சகிக்கவில்லை. "வேந்தனது வாக்கினுக்கும் எதிர்வாக்கோ? வேந்தனையும் வேளாளர் விஞ்ச ஒண்ணுமோ?" என்று இறுமாப்பு பிறந்துவிட்டது. வெகுளியும் மூண்டுவிட்டது. 'வேந்தன் சீறின், ஆந்துணை ஏது?' என்றாள் ஔவைப் பிராட்டியார்.

பல சொல்லி என்ன பயன்? முதலியாரைக் கொலை புரியுமாறு கட்டளை யிட்டுவிட்டான் காவலன். ஆணையின்படிக் காரியமும் நடந்துவிட்டது. நாட்டாரனைவரும் அதுகேட்டு, ஆ ஆ என்றலறினர். சிலர், அரசனை இகழ்ந்தனர். சிலர், "முதலியாருக்கு வாய்ப் பதட்டம் கூடா,"தென்றனர். சிலர், "என் செயலாம்! எல்லாம் விதியின் விளைவு!" என்றனர். உலகம் பலவிதம் அல்லவா? வருஷங்கள் சில சென்றன. வேற்றரசன்-துருக்கன் என்பர்-படையெடுத்து வந்தான்.

சோழவரசோ அவ்வேளை வலி குன்றிக் கிடந்தது. அரசின் படைகள் பலவும் முனைமுகத்தே முறிந்தன. உடனே நாடு அல்லோல கல்லோலம் கொண்டது. உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து நேர்ந்தது. ராஜ குடும்பத்தாரும் உயிருக் கஞ்சி ஓடி யொளிய லாயினர். மூலைக்கு ஒருவராக ஓடுகின்றனர். யானையின் மீது ஆடம்பரமாகப் பவனி வந்தோரும் தாழ்வு நேர்ந்த காலத்தே தடுமாறித் தத்தளிக்க நேர்தல் வியப்பன்று.

சோழவேந்தனது மகன்—பன்னிரண்டே வயதுள்ள பாலன் பதறியோடுகிறான் மேலாடையும் துறந்து! அவனுக்குத் தஞ்ச மளிப்பார் யார்? தங்குமிடம் தருவார் யார்? உயிருக் கஞ்சி ஓடிவருங் காலத்திலே, கிடங்கில் நகரம் குறுகினான் அக்கொற்றவ குமரன். பெருமாள் முதலியாரின் மாளிகையோ அடையா நெடுங் கதவும், அஞ்சல் அஞ்சல் எனும் சொல்லுங் கொண்டு குலவியது. அம்மாளிகையிலே அடைக்கலம் புகுந்தான் அவ் விளமகன்.

அப்போது, பெருமாள் முதலியாரின் மைந்தன்—கிடங்கில் கோமான் என்னப்பட்டவன்—அதனை யறிந்தான். ஓடிவந்த அரசிளங் குமரனுக்கு ஆடையும் அன்னமுங் கொடுத்து ஆதரித்தான். மறுதினம் பகைப் படை வந்து, முதலியாரின் மாளிகையைச் சூழ்ந்து கொண்டது. "சோழன் மகனை வெளியே அனுப்பிவிடு. இன்றேல் கிடங்கில் நகரைத் தரைமட்டஞ் செய்வோம்," என்று ஆர்ப்பரித்தது.

அக்கோமான் யாது செய்வான்? அவன் மாளிகை கிடக்கட்டும். நகரே நாச முறுதல் திண்ணம். அம்மகனே, பெருமாள் முதலியைப் படுகொலை புரிந்த பார்த்திபனது புதல்வன். பழிக்குப் பழி வாங்க இதுவே தருணம் என்றனர் சிலர். "பகைவரிடம் அவனை உயிருடன் ஒப்படைத்தல் வேண்டாம். நாமே அவன் உடலம் வேறு, சிரம் வேறாக்கி, மாற்றாரிடம் வீசி யெறிதலே சாலச் சிறந்த" தென்றனர். "கொலை பாவத்தை நாம் கட்டிக்கொள்வதேன்? பகைவரிடம் ராஜபாலனை ஒப்படைத்துவிடலாம்," என்றனர் வேறு சிலர். நகரமாந்தரோ, குய்யோ முறையோ என்று கூவி, "அச் சோழ குமரனை வெளியே தள்ளு," என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

கிடங்கில் கோமான் என்ன செய்தான்? தனது ஒரே மைந்தன், ஒள்ளிய புதல்வன், ஊர் மெச்சும் குமரன், ஏவலப்பனைக் கூட்டிக் கொணர்ந்து, பகைவர் முன்னே நிறுத்தி, "இதோ சோழன் மகன், இட்டுச் செல்லுங்கள், எண்ணிய படி செய்யுங்கள்," என்று கூறினான். பகைப் படைஞரும் பரமானந்தங் கொண்டு அப்பையனைத் தூக்கிச் சென்றனர். பால் வடியும் முகம். அரிபரந்த நயனம். அழகு மிக்க பார்வை. ஆண்மைகொண்ட தோள். எல்லாம் சேர்ந்து, ஏவலப்பனையே இளங்கோ வெனக் காட்டி நின்றன. இளைஞனும் மலர்ந்த முகத்துடன் விளங்கினான்.

சிறிது தூரஞ் சென்றனர் பகைப் படைஞர். ஏவலப்பனது பிறப்பை யுணர்ந்தனர். "வந்தடைந்த மகனைக் காக்கவேண்டிப் பெற்ற மைந்தனை வாரிக் கொடுக்கும் வள்ளலின் மகனன்றோ நீ? உனக்கு ஊறு புரிந்தால், உலகம் பொறுக்காது. உன் உள்ளத் தெளிவும் மலர்ச்சியும் எங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டன. ஆதலின் நீ பிழைத்துப் போ" என்று பேசினர்; அரண்மனையிலிருந்து கொள்ளையாடிய முத்து மாலையை அவன் கழுத்தில் அணிந்தனர்; கையெடுத்துக் கும்பிட்டுக் கண் மறைந்து போயினர். ஏவலப்பனும் தன் மாளிகை சேர்ந்தான்.

படையெடுப்பின் குழப்பங்கள் தீர்ந்தன. நாடு நாடாயது. சோழவேந்தன் மீண்டும் அரியாசனத் தமர்ந்தான். பட்டத்துக்குப் பிள்ளை யில்லையே என்று அவன் வருந்தி நின்ற சமயம், இளங்கோ சென்று, தந்தையின் அடி பணிந்தான். "பகைப் படைஞர் உன்னைப் பற்றிச் சென்றனரே, எங்ஙனம் பிழைத்து வந்தாய்?" என்று

அரசனும் அரசியும் அதிசயத்துடன் வினவினர். உற்றது முற்றும் உரைத்தான் சிறுவன்.

சிறிது நேரம் சோழன் பரவசமாக நின்றான். பின்னர் நினைவு வந்தது. "என்னே, என்னே, கிடங்கில் கோமான் கருணையும் தியாகமும்! நானே அவன் தந்தையை அகம் பாவத்தினால் கொன்றேன். அப்பகைமையை அவன் சிறிதும் கருதவில்லை. ஆபத்துக் காலத்திலே, என் புதல்வனைக் காக்கத் தன் புதல்வனைப் பறிகொடுத்தான். முப்பத்திரண்டு அறம் மட்டுமா? எல்லா அறமும் வளர்ப்பார் வேளாளரே!" என்று புகழ்ந்தான்; ஈசனைத் துதித்தான்; ஏவலப்பனையே மூத்த புதல்வனாகக் கொண்டான்; கிடங்கில் கோமானை அமைச்சனாகவும் ஆக்கினான்.

நாளடைவில் சோழன் காலகதியடைய, அவன் மகனும் ஏவலப்பனும் ராமலட்சுமணர்போல் அரசை நடத்தி வந்தனர் என்று கன்ன பரம்பரை கூறும். இது எங்ஙனமாயினும் ஆகுக. தொண்டை மண்டல சதகமுடையார் அவ்வரலாற்றினை,

> வெங்கொலைக் கஞ்சி அடைக்கலம்
> தான்புக வேந்தன் மைந்தனும்
> கலையாமல் ஒளித்துவைத்தே
> தன் ஒரு மகவை
> இங்கிவன்தான் அவன்என்றே
> அடையலர்க் கீந்துவிட்டான்
> மங்கலஞ்சேர் கிடங்கில் பெருமான்
> தொண்டை மண்டலமே!

என்று பாடியுள்ளார். 'வந்த உயிர் தனைக் காத்தான் கிடங்கில் வேந்தன்' என்று கலம்பகம் ஒன்றும் கூறுகிற்கும். மேலும்,

> எண்ணான் கறந் தொண்டை மண்டலத்
> தார்க்கன்றி யில்லையெனத்
> தண்ணார் வயலுமுன்றான்
> சொல வேந்தன் தலைதடிந்த
> தெண்ணமல் மன்னனு
> மப்படியே சொல இப்படியில்
> மண்ணாளும் வேந்தன் வரிசை
> பெற்றான் தொண்டை மண்டலமே!

என்னும் பாடலும் கவனிக்கத்தக்கது. தமிழரின் தனிப் பெருமைக்கும் தியாகச் சிறப்பினுக்கும் தமிழ் நூல்களிலே எண்ணிறந்த சான்றுகள் காணலாம்.

✲

சண்டை எப்போது முடியும்?

பாரதியார் இருந்த தெருவுக்குப் பக்கத்துத் தெருவிலே ஒரு சாஸ்திரியார் இருந்தார். நல்ல வைதீகர். திவசம் பண்ணி வைப்பதிலே நிபுணர்.

அவர் வீட்டிலே, அவர் ஒரு கட்சி; இளையாள் ஒரு கட்சி; மூத்தாள் பிள்ளை முத்துசாமியும் அவன் மனைவியும் ஒரு கட்சி – ஆக மூன்று கட்சிகளும் பல வருஷங்களாக இடைவிடாமல் சண்டை நடத்திக் கொண்டு வந்தன.

சாஸ்திரியார் ஒரு நாள் காலையில் பாரதியாரிடம் வந்தார்.

"என்ன வாசித்துக்கொண் டிருக்கிறீர்?" என்று பாரதியாரைக் கேட்டார்.

"சுதேசமித்திரன் பத்திரிகை" என்றார் பாரதியார்.

"இந்தச் சண்டை எப்போது முடியும்?" என்றார் சாஸ்திரியார். அவர் கேட்டது, அப்போது நடந்து கொண்டிருந்த ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி.

ஆனால், பாரதியார் எங்கேயோ ஞாபகமாக, "நீங்கள் வேறு குடும்பம், உங்கள் பிள்ளை முத்துசாமி வேறு குடும்பமாய்க் குடியிருக்கவேண்டும். உங்கள் பத்தினியும் முத்துசாமியின் மனைவியும் சந்திக்க இடமில்லாதபடி ஏற்பாடு செய்யவேண்டும். அப்போது ஒருவேளை முடியலாம்" என்று சொன்னார்.

கோபம் கொண்ட சாஸ்திரியார், சிட்டாய்ப் பறந்துவிட்டார்.

வேடன் கடிதம்

தூமகேது

நேற்று இரவு மேகங்கள் சூழ்ந்த ஆகாயத்தில் சிலசில நட்சத்திரங்கள் மினுமினுத்துக்கொண் டிருந்தன. மனிதனின் மனதில் ஜொலிக்கும் மதுரமான எண்ணங்களைப் போல் அவை மின்னின. குளிர்காலப் பனிக் காற்றின் குளிரி லிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுப் பழைய கோட் ஒன்றை அணிந்து கொண்டு, பட்டணத்தின் நடுவே, ஒரு தொண்டு கிழவன் நடந்துகொண் டிருந்தான். பட்டணம் நிசப்தமா யிருந்தது. செல்வ போகங்களை அனுபவிக்கும் மனிதர்கள் வாழும் அநேக வீடுகளி லிருந்து, பெண்மணிகளின் மெல்லிய இனிய குரல்போல, கடிகார மணியோசை அந்தக் கிழவனைப் பின்தொடர்ந்து வந்தது. நாய்கள் குரைக்கும் ஒலி, வெகு தூரத்திலே நடந்து வரும் ஒருவனுடைய காலடிச் சத்தம், அகாலத்தில் விழித்துக்கொண்டு கூவும் பட்சியின் ஓசை, இவைகளைத் தவிர, பட்டணத்தில் அமைதியே நிலவி யிருந்தது. ஜனங்கள் சுவாரஸ்யமாகத் தூங்கிக்கொண் டிருந்தார்கள். குளிர்காலம், ஆகையால், இரவு கும்மென்று இருண்டு விட்டது. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று' பேசும் சுபாவமுடைய மனிதர்களைப்போலும், கூர்மையான அம்பு பாய்வதுபோலும், கடுங்குளிர் எங்கும் தனது ஆட்சியைச் செலுத்தியது. உடல் நடுங்கினாலும் உள்ளத்திலே திடசித்தமும் அமைதியும் கொண்டவனாகவே, கிழவன் நடந்தான். பட்டண வாசலைக் கடந்து, ஒரு நேர்பாதையை வந்தடைந்தான். அவன் தன் ஊன்றுகோலின் உதவியைக் கொண்டு மெள்ள மெள்ள நடந்து சென்றான்.

ஒரு பக்கத்தில் மரங்களின் வரிசை; மறுபக்கத்தில் பட்டணத்தின் நந்தவனம். இங்கே குளிர் மிக அதிகம். இரவு மிகவும் பயங்கரமா யிருந்தது. காற்றுக் கடுமையாய் வீசியது. சுக்கிரனின் இனிய மந்தமான ஒளி, பூமியின்மேல் பனித் திரை விரித்தது போல் பரவி யிருந்தது. நந்தவனத்தின் ஒரு புறத்தில் புதிய மாதிரியில் கட்டிய நாகரிகமான வீடுகள் நின்றன. அந்த வீடுகளின் ஜன்னல்களிலிருந்தும் மூடிய கதவிடுக்குகளின் வழியாகவும்,ஜோதிமயமான விளக்குகளின் ஒளி வெளியே வீசிக்கொண் டிருந்தது.

பக்தி மிகுந்த பக்தன், கோயிலின் கோபுரத்தைத் தரிசித்தவுடன் ஆனந்தமடைகிறான். அதே போல், கிழவன் ஒரு கட்டிடத்தின் நிலைவாசலுக்கு மேலிருக்கும் கமானைக் கண்டவுடன் ஆனந்தமடைந்து விட்டான். கமானில் எழுத்துக்கள் பொறித்து அழுக்கடைந்த ஒரு பலகை தொங்கியது. அதுதான் தபால் ஆபீஸ்.

தபால் ஆபீஸுக்கு வெளியேயுள்ள திண்ணையின் மீது கிழவன் உட்கார்ந்து விட்டான். உள்ளே யிருந்து விசேஷமான குரல் ஒன்றும் வரவில்லை. ஒருவரோ டொருவர் பேசிக்கொள்ளும் சத்தம்தான் கேட்டது. அதுவும் ஐந்தாறுபேர் ஆபீஸ் வேலை விஷயமாய் ஏதோ பேசிக்கொண் டிருந்தார்கள்.

'போலீஸ் சூப்பரின்டென்ட்' என்று ஒரு குரல் கேட்டது. கிழவன் திடுக்கிட் டெழுந்தான்; ஆனால், மறுபடியும் தானாகவே அமைதிகொண்டு உட்கார்ந்து விட்டான். நம்பிக்கையும் பாசமும்தான் அவனுடம்புக்கு, இந்தக் குளிரிலும் கணப்புப் போல் உஷ்ணம் கொடுத்தது.

'தனக்கு வந்தால் தெரியும் தலைவலியும் சுரய்ச்சலும்' என்பது வேடிக்கை யல்ல; அபூர்வ உண்மை. அது இந்தக் குஜராத்திக் கதையிலே அற்புதமாய்ச் சித்தரிக்கப் படுகிறது. இதை **ப. கி. விஜயராகவன்** மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்.

உள்ளேயிருந்து குரல்மேல் குரல் வந்துகொண்டே யிருந்தது. காகிதங்களைப் பிரித்து வழங்கும் சிப்பந்தி, ஆங்கிலக் கடிதங்களின் விலாசத்தை படித்துப் படித்து, தபால்காரன் வசம் வீசி எறிந்துகொண் டிருந்தான்.

கமிஷனர், சூப்பரின்டென்ட், திவான் சாஹேப், லைப்ரேரியன்— இவ்விதமாக, ஒன்றன்பின் ஒன்ருய் வாசித்து அனுபவ முள்ள அவன், வெகு வேகமாகக் கடிதங்களை வீசிக் கொண்டிருந்தான்.

இதற்குள் உள்ளேயிருந்து விசித்திரமான ஒரு குரல் கிளம்பியது. 'கோச்வான் அலிபாபா.'

கிழவன் எழுந்து நின்ருன். சிரத்தையுடன் ஆகாயத்தை நோக்கினுன்; படிமீதேறிக் கதவின்மேல் கையை வைத்தான்.

'கோகுல்!'

'யார் அது?'

'அது என் கடிதம் தானே?... நான் வந்திருக்கிறேன்!'

கேலியும் விகடமும் கலந்த பதில் தான் அவனுக்குக் கிடைத்தது.

'ஐயா, இவன் ஒரு பைத்தியக்காரக் கிழவன். இவன் எப்போது பார்த்தாலும், இங்கே இடிபட்டுச் சாக வந்து விடுகிருன். ஏதோ இவனுக்குத் தபால் வரப்போகிறதாம். அதை வாங்க, ஓயாமல் வந்து நிற்கிருன்.'

தபாலைப் பிரிக்கும் சிப்பந்தி, போஸ்ட் மாஸ்டரிடம் இவ்வாறு சொன்னுன். மறுபடியும் கிழவன் தன் இடத்துக்குப்போய் உட்கார்ந்து விட்டான். ஐந்து வருஷ காலமாய்த் தபால் ஆபீஸுக்கு வருவதும் போவதும், கிழவனுக்கு ஒரு தினசரிக் கடமையாகிவிட்டது.

அலி இதற்குமுன் ஒரு கெட்டிக்கார வேடன். அபினி தின்னும் பழக்கமுள்ள ஒருவன் எப்படி அபினி தின்னுமல் இருக்க முடியாதோ அதே போல, அலி ஒரு நாளாவது வேட்டையாடாமல் இருக்கமாட்டான். மண்ணுேடு மண்ணுய்ப் பூமியில் உலவும் பலநிறங் கலந்த கௌதாரியின்மேல் அலியின் பார்வை விழுந்தால், அது அவனது குறியில் கட்டாயம்பட்டு விழவேண்டியதுதான். அவனது கூரிய பார்வை, முயலின் பொந்துக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். அக்கம் பக்கத்தில் உலர்ந்து பழுப்பேறி வெளிறிய புல் பூண்டுகளில் மறைந்துகொண்டு, தன் இரு காதுகளையும் மேலே உயர்த்தி உட்கார்ந்திருக்கும் கெட்டிக்கார முயலின் சாம்பல் நிறத்தை, சிற்சில சமயம் வேட்டை நாய்கள்கூடக் கவனிக்காமல் கடந்து சென்றுவிடக் கூடும்; முயலும் உயிர் தப்பித்துக் கொள்ளலாம். ஆனுல், இத்தலி தேசத்துக் கருடனைப்போல் கூரிய பார்வையுள்ள அலியின் கண்ணுக்கு, அந்த முயல் தப்ப முடியாது; அடுத்த நிமிஷமே அது சுருண்டு விழவும் வேண்டியதுதான். ஆனல், வாழ்க்கையின் அந்திம காலம் சமீபித்தவுடன், வேடன் திடீரென்று தலைகீழாக மாறிவிட்டான். இவனுடைய ஒரே பெண் கலியாணமாகி, மாமனர் வீட்டுக்குப் போய்விட்டாள். மருமகன் ராணுவத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். மகள் மருமகனேடு பஞ்சாபுக்குச் சென்றுவிட்டாள். மகளிடம் உள்ள பாசத்தாலேயே கிழவன் ஐந்து வருஷமாக உயிரை வைத்துக்கொண் டிருக்கிருன். ஆனல், அவளிட மிருந்து ஒரு கடிதம்கூடக் கிடைக்கவில்லை. இப்போதுதான் கிழவனுக்குப் பாசத்தின் தன்மையும் கொடுமையும் விளங்கின.

இதற்கு முன்போ, தாயிழந்து தவிக்கும் கௌதாரிக் குஞ்சுகள் அங்குமிங்கும் ஓடுவதைக் கண்டுகூட அவன் மனமகிழ்ச்சியே அடைவான். இது அவனது - ஒரு வேடுவனின் - ஆனந்தம். வேட்டையின் மகிழ்ச்சி அவனது ஒவ்வொரு நரம்பிலும் பரவியிருந்தது. ஆனல், மரியம் அவனைப் பிரிந்து சென்ற தினத்திலிருந்து, அவனது வாழ்க்கை ஒரே சூன்யமாகிவிட்டது. அன்றிருந்து அலி வேட்டையாடுவதைத் திடசித்தத்துடன் அறவே ஒழித்துவிட்டான்; தானியங்கள் நிறைந்த வயலைப் பார்த்துக் கொண்டே யிருப்பான். அன்பினல் படைப்பும், பாசத்தினல் கண்ணீரும்

நிகழ்வது இயற்கையின் நியதி என்பதை, அவன் இப்போதுதான் முதன் முதலாக உணர்ந்தான்.

இதற்குப் பிறகு, பலாமரத்தின் அடியில் உட்கார்ந்துகொண்டு, உள்ளமே உடைந்து புலம்புவான். நாள்தோறும் அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து, தபாலாபீசுக்கு வருவது அவனது வழக்க மாகிவிட்டது. ஆனல், அவனுக்கென்னவோ ஒரு நாளும் கடிதம் மட்டும் வருவதேயில்லை; கட்டாயம் வரும் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது. சிரத்தையும் ஆசையும் நிரம்பிய ஆனந்தத்தில் முழுகிய பக்தனைப்போல், அவன் ஒவ்வொரு நாளும் எல்லோருக்கும் முன்பே இவ்வாறு தபாலாபீசுக்கு வந்து உட்கார்ந்து விடுவான். கிழவனுக்குத் தபாலாபீஸ் ஏதோ ஒரு புண்யக்ஷேத்திரம் போல்ஆகிவிட்டது. அவன் எப்போதும் அதே இடத்தில், அதே மூலையில்தான் உட்காருவான். அவனது நிலைமையை எல்லோரும் அறிந்துகொண்டு, அவனைப் பரிகசிப்பார்கள். அவனுக்குக் கடிதம் வராமலிருக்கும்போதே, அவர்கள் சிற்சில சமயம் அவனைக் கூப்பிடுவார்கள்; அவனும் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து தபாலாபீஸ் கதவு வரையில் ஓடி வருவான். இது கண்டு, அவர்கள் எல்லாம் நகைப்பார்கள். கூர்ந்த சிரத்தையும், எல்லையற்ற ஆவலும் உள்ளவனய், அவன் ஒவ்வொரு நாளும் வருவான்; வெறுங் கையோடு திரும்புவான்.

அலி உட்கார்ந்து கொண்டிருந்தான். இதற்குள் ஒவ்வோர் ஆபீசிலுமிருந்து சேவகர்கள், தங்கள் தங்கள் கடிதத்தை எடுத்துச் செல்லுவதற்காக, இங்கே வர ஆரம்பித்தார்கள். அவர்கள் வந்து கூடிவிட்டால், பட்டணத்திலுள்ள எல்லா ஆபீசர்களின் வீட்டுப் புராணமும் இங்கே நடைபெறும்.

கதவு திறந்தது. விளக்கொளியில், எதிரேயுள்ள நாற்காலியில், சுரைக் குடுக்கை போன்ற தலையோடு, எப்போதும் துக்கமே குடிகொண்ட முகத்துடன் கூடிய போஸ்ட்மாஸ்டர் உட்கார்ந்திருந்தார். அவருடைய நெற்றியிலோ, முகத்திலோ ஜீவகளை கிடையாது. கண்ணிலே துரு துருப்பு இல்லை.

அலி இன்னும் அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

'போலீஸ் கமிஷனர்' என்று சிப்பந்தி கூப்பிட்டான். கர்வம் கொண்ட ஒரு நவயுவன் 'போலீஸ் கமிஷன'ரின் கடிதத்தைப் பெறுவதற்குக் கையை நீட்டினன்.

'சூப்பரின்டென்ட்'

மற்ருெரு சேவகன் வந்து சேர்ந்தான். விஷ்ணு பக்தன் சஹஸ்ரநாம பாராயணம் செய்வதைப்போல், சிப்பந்தி ஒவ்வொரு நாளும் இம்மாதிரியாகத் தனது வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

எல்லோரும் சென்று விட்டார்கள். அலி எழுந்து தபாலாபீசுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுச் சென்ருன். ஒரு நூற்ருண்டுக்கு முந்திய கிராமத்தான். அவனிடம் ஏதாவது கெட்டிக்காரத் தனம் இருக்கிறதா!

'இவன் பைத்தியக்காரன என்ன?' என்று போஸ்ட்மாஸ்டர் கேட்டார்.

'யார், யார்?—அலியா? அவன் ஐந்து வருஷமாகக் கடிதம் எடுத்துப் போக வந்துகொண்டே யிருக்கிருன். மாரியோ, கோடையோ, எந்தக் காலமானலும் சரிதான்; இவன் தப்பாமல் வந்துவிடுவான். இவனுக்கு எப்போதாவது கடிதம் வந்திருக்கிறதா என்ருல், அதுதான் இல்லை' என்று பதில் சொன்னன் சிப்பந்தி.

'எவராயிருந்தால், என்ன? வேலையற்றவர் எவராது உண்டா? யார் தான் எப்போதும் கடிதம் எழுதிக் கொண்டே யிருப்பார்கள்?'

'ஸார், இவனுக்கு மூளை கெட்டுப் போய்விட்டது. முன்பெல்லாம் இவன் பெரிய அனுசாரங்கள் செய்திருக்க வேண்டும். இவன் ஏதோ கோவிலில் என்னவோ பாபத்தைச் செய்திருக்க வேண்டும். அதன் பலனைத் தான் இப்போது அனுபவிக்கிருன்' என்று தபால் சிப்பந்தி சொன்னன்.

'பைத்தியக்காரர்கள் மிகவும் விசித்திரமானவர்கள்!'

'ஆம், நான் ஒரு பைத்தியத்தை ஆமதாபாதில் பார்த்தேன். அவன் நாள் பூராவும் குப்பைகளைக் குவியல் குவியலாய்க் குவித்துக் கொண்டிருந்தான். வேறு ஒன்றுமே செய்வதில்லை. மற்றொரு பைத்தியம் மாலை வேளையில் நதிக்கரையிலுள்ள ஒரு பாறையின்மேல் தண்ணீரை வாரி வாரி இறைத்துக்கொண்டிருப்பான்.'

'ஐயா, நான் கண்ட இன்னொரு பைத்தியம் நாள் பூராவும் இங்குமங்கும் அலையும். மற்றொரு பைத்தியம் உண்டு. அது எப்போதும் ஒரே பாட்டைப் பாடிக்கொண்டேயிருக்கும். வேறொரு பைத்தியமும் நான் பார்த்திருக்கிறேன். அது தன்னைத்தானே கன்னத்தில் அறைந்துகொண்டு, யாரோ தன்னை அறைகிறார்களென்று ஓலமிடும்.'

தபாலாபீஸில் பைத்தியங்களின் புராணம் ஆரம்பித்துவிட்டது. தினந்தோறும் இவ்வாறு பத்து அல்லது ஐந்து நிமிஷ நேரமாவது பைத்திய புராணச் சர்ச்சை செய்து, தங்கள் மனதை உற்சாகப் படுத்திக்கொள்ளும் பழக்கம் எல்லாச் சிப்பந்திகளுக்கும் ஏற்பட்டுவிட்டது. கடைசியாக, போஸ்ட்மாஸ்டர் எழுந்து செல்லும் போது சொன்னார்: 'பைத்தியங்களுக்கென்று ஓர் உலகம் இருக்கிறது! இந்தப் பைத்தியங்கள் நம்மெல்லோரையும் தான் பைத்தியங்கள் என்று எண்ணியிருப்பார்கள். ஒருவேளை பைத்தியங்களின் கற்பனையே கவிஞனின் கற்பனையாகவும் இருக்கலாம்.'

இவ்வாறு சொல்லிவிட்டுச் சிரித்துக்கொண்டே, போஸ்ட்மாஸ்டர் வெளியே சென்றார். குமாஸ்தாக்களில் ஒருவன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் கவிதை புனைபவன். ஆகையால், அவனை எல்லோரும் கோபித்துக் கொள்வார்கள். இதற்காகத் தான், போஸ்ட்மாஸ்டரும் தமது கடைசி வார்த்தையை, அவன் பக்கம் திரும்பிச் சிரித்துக்கொண்டே சொன்னார். தபாலாபீஸில் முன் போலவே அமைதி குடிகொண்டது.

ஒரு முறை கிழவன் அலி இரண்டு மூன்று நாள் வரையில் வரவில்லை. அலியின் உள்ளத்தை அறிந்து, அவனிடம் பரிபூரண அனுதாபமும் பரந்த நோக்கமும் காட்டக் கூடியவர்கள், தபாலாபீஸில் உள்ளவர்களிலே யாரும் கிடையாது. அலி ஏன் வரவில்லை என்று கவலைப் படுவோரும் யாரும் இல்லை. பிறகு, ஒருநாள், அலி வந்தான்; ஆனால், அன்று அவன் மேல்மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். அவன் முகத்திலே அந்திம காலத்தின் தெளிவான சின்னம் தென்பட்டது.

இன்று அலி அதைர்யமடைந்து, 'என் மரியமிடமிருந்து ஏதாவது கடிதம் உண்டா?' என்று போஸ்ட்மாஸ்டரைக் கேட்டான்.

அன்று போஸ்ட்மாஸ்டர் கிராமத்துக்குச் செல்வதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளில் முனைந்திருந்தார். இந்த நேரத்தில் இந்த அற்புதமான கேள்வியைச் சகித்துக்கொள்ளக் கூடிய பொறுமை, அவர் உள்ளத்தில் குடிகொள்ள வில்லை.

'நீ யாரையா?'

'என் பெயர் அலி'—அலியின் இந்த அசம்பாவிதமான பதில் கிடைத்தது.

'சரி; இங்கே உன் மரியத்தின் பெயரை யாரும் எழுதிவைத் திருக்க வில்லை. போ.'

'எழுதி வைத்துக்கொள்ள வேண்டாம், சுவாமீ. எப்போதாவது அவள் கடிதம் வந்தால், அப்போது நான் இல்லாவிட்டால், அதனால் தங்களுக்குச் சிரமமோ குழப்பமோ உண்டாகாமலிருக்கவேண்டும் என்பதற்காகத்தான் கேட்டேன்.'

அவன் தன் முக்கால்வாசி வாழ்க்கையையும் வேட்டையாடுவதிலேயே கழித்தவன், மரியத்தின் பெயர் இவ்வளவு பெரிய பட்டணத்தில் அவனுடைய தகப்பனாகிய தன்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியப்போகிறது என்று யோசிக்க அவனுக்குத் திறமை ஏது?

போஸ்ட் மாஸ்டர் கொதிப்படைந்தார். 'உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன? வெளியே போ' என்று கூவினர். 'உனக்குக் கடிதம் வந்தால், அதை யாரும் தின்றுவிட மாட்டார்கள்.' என்று மேலும் கூறினர்.

இவ்வாறு சொல்லி, அவர் துரிதமாக வெளியேறினர். அலி மெள்ள மெள்ள நகர்ந்தான். வெளியே போகும்போது, ஒரு முறை தபால் ஆபீசைத் திரும்பிப் பார்த்தான். இன்று அவன் கண்களில், நிர்க்கதியான ஓர் அனாதையின் விழிபோல் கண்ணீர் தளும்பியது. அவனுடைய சிரத்தை என்னவோ இன்னமும் இருக்கத்தான் இருந்தது; ஆனல், அவனது தைர்யத்துக்கு மட்டும் முடிவு ஏற்பட்டுவிட்டது. ஹூம், மரியத்தின் கடிதம் இனிமேல் எங்கே வந்து சேரப்போகிறது?

ஒரு தபால் சிப்பந்தி அவனைப் பின் தொடர்வதுபோல் தோன்றியது. அலி அவனைத் திரும்பிப் பார்த்தான்.

'தம்பீ!'

தபால் சிப்பந்தி திடுக்கிட்டான். ஆனல், அவன் மிகவும் நல்லவன்.

'என்ன?'

'இதோ பார், இவை என்னிடம் இருக்கின்றன' என்று சொல்லிக் கொண்டே, அலி தன் மடியில் கைவிட்டு ஒரு பழைய டப்பாவை எடுத்து, அதிலிருந்து ஐந்து பவுன்களை வெளியே எடுத்தான். தபால் சிப்பந்திக்குத் தூக்கி வாரிப்போட்டது.

'மனதை அலட்டிக் கொள்ளாதே, தம்பீ. இது உனக்கு ஒரு பெரிய காரியமல்ல. என்னைப் போன்றவன் இனி வாழ லாயக்கில்லை. எனக்கு நீ ஓர் உபகாரம் செய்வாயா?'

'என்ன?'

'மேலே என்ன தெரிகிறது?' அலி சூன்யமான ஆகாய வெளியைத் தன் விரலால் சுட்டிக் காட்டினன்.

'ஆகாயம்!'

மொழிபெயர்ப்பு விபரீதம்

'ஒரு பணக்காரன் பரமண்டலத்திலே பிரவேசிப்பதைவிட, ஓர் ஊசியின் காது வழியே ஓர் ஒட்டகம் நுழைந்து செல்வது அதிக எளிதாகும்' என்று ஏசுநாதர் சொன்னதாக, எத்தனையோ மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது. ஆனல், இது கிரேக்க மூலத்தின் தப்பு மொழி பெயர்ப்பாகும்.

காமிலோஸ் என்ற கிரேக்க வார்த்தைக்குக் கயிறு என்று அர்த்தம். காமெலோஸ் என்பதற்த்குத்தான் ஒட்டகம் என்று அர்த்தம். முதன் முதலில் பைபிளை லட்டீனில் மொழி பெயர்த்தவர், காமிலோஸ் என்பதை, காமெலோஸ் ஆக்கி விட்டார்; கயிறு, ஒட்டகமாகி விட்டது!

'மேலே அல்லா இருக்கிறர்! அவர் முன்னிலையில் இந்த ஐந்து பவுன்களையும் நான் உனக்குக் கொடுக்கிறேன். என் மரியத்திடமிருந்து கடிதம் வந்ததும், கடிதத்தை எனக்கு அனுப்பிவிடு!'

தபால் சிப்பந்தி ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்து நின்றான். 'எங்கே அனுப்ப வேண்டும்?' என்று அலியைக் கேட்டான்.

'என் சமாதிக்கு.'

'ஐயோ!'

'உண்மையே பேசுகிறேன். இன்று என் கடைசி நாள்...கடைசி நாள்! என் மரியம் வரவில்லை; அவள் கடிதமும் கிடைக்கவில்லை.'

அலியின் கண்களில் ஒரு விதமான போதை தோன்றியது. தபால் சிப்பந்தி மெதுவாக நகர்ந்தான். அவன் ஜேபியில் ஐந்து தங்கக் காசுகள் சல சலத்தன.

இதற்குப் பிறகு, அலி மறுபடியும் யார் கண்ணிலும் தென்படவே யில்லை. அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள எவரும் எண்ண மிடவு மில்லை. ஒரு நாள் போஸ்ட்மாஸ்டர் ஏதோ மிகவும் துக்கமா யிருந்தார். அவருடைய பெண் ஊரிலே காயலா வாயிருந்தாள். அதைப்பற்றித் தகவல் தெரிந்துகொள்ள, ஆவலும் கவலையும் அவர் உள்ளத்தைக் கவிந்திருந்தன.

தபால் வந்தது; கடிதங்கள் குவிய ஆரம்பித்தன. போஸ்ட் மாஸ்டர் ஏதோ வொரு கடிதத்தைத் தம்முடை யது என்று எண்ணி, அவசர அவசர மாகக் கையிலே எடுத்தார்.

'கோச்வான் அலி பாபா' என்று அதில் விலாசமிட்டிருந்தது. மின் சாரம் தாக்கியதுபோல் கைநடுங்கி, கடிதத்தைப் போஸ்ட் மாஸ்டர் வீசி யெறிந்தார்.

சோக உணர்ச்சிகளின் ஆட்சி வசப்பட்ட போஸ்ட்மாஸ்டர், சிறிது நேரம் வரையில் தமது உத்தியோக தோரணையையே மறந்தார். மனித சுபாவத்துக் குரிய இயற்கையான குணங்கள் அவரிடம் வெளியாயின. 'இது அந்தக் கிழவனுடையதா யிருக்கலாம்' என்ற எண்ணம் திடீ ரென்று போஸ்ட் மாஸ்டருக்கு உதித் தது, 'ஒருவேளை அந்த மரியமே இந்தக் கடிதத்தை எழுதியிருக்க லாமோ!' என்று நினைத்தார்.

'லட்சுமிதாஸ்' என்று கூவி அழைத்தார் போஸ்ட்மாஸ்டர்.

கோச்வான் அலி பாபாவிடமிருந்து ஐந்து பவுன்கள் பெற்றுக்கொண் டானே ஒரு தபால் சிப்பந்தி, அவன் தான் லட்சுமிதாஸ்.

'என்ன, எஜமான்?'

'அந்தக் கோச்வான் அலி பாபா எங்கே?' என்று கேட்டார் போஸ்ட் மாஸ்டர்.

'தேடி அழைத்து வருகிறேன்.'

அன்று போஸ்ட்மாஸ்டரின் பெண் ணிடமிருந்து கடிதம் எதுவும் வர வில்லை. ஏதோ எண்ணமிட்டுக் கொண்டே, இரவு பூராவையும் கழித் தார். 'நாளைக் காலை மூன்று மணிக்கே நான் ஆபீஸில்போய் உட் கார்ந்து விடுவேன். அலி நான்கு மணிக்கு வருவான்; நான் அவனிடம் கடிதத்தை அன்போடு தருவேன்' என்று போஸ்ட்மாஸ்டர் தமக்குத் தாமே கற்பனை செய்துகொண்டார்.

அலி பாபாவின் நிலையை இன்று போஸ்ட்மாஸ்டர் மிக நன்றாக உணர்ந் திருந்தார். இடையிடையே அன்று வரக்கூடிய கடிதங்களை நினைத்துக்கொண்டார். இப்படிப் பல சிந்தனைகளோடு அன்றைய இரவைக் கழித்தார். ஐந்து வருஷ காலமாக இம்மாதிரி மாளாத இரவுகளை அவன் கழித்திருப்பான் என்று இன்றுதான் அவருக்குத் தெரிந்தது. அவருடைய உள்ளத்தில் முதன் முதலாக அனு தாபம் நிறைந்து நெகிழ்ந்தது.

மறுநாள் ஆபீஸில் யாரோ ஒருவன் சரியாக ஐந்து மணிக்கு வந்து வாசல் கதவைத் தட்டினன். தபால்காரன் இதுவரையில் வரவில்லை. அலிபாபா கதவைத் தட்டுவதுபோல் என்னவோ அவருக்குத் தோன்றிற்று. போஸ்ட் மாஸ்டர் எழுந்தார். ஒரு தந்தைக்கு இயற்கையாய் உண்டாகக் கூடிய மன வேதனையை அவர் அனுபவித் திருந்ததால், இன்று குதித்தெழுந்து கதவைத் திறந்தார்.

'அலி சகோதரரே, வாரும்; கடி தத்தைப் பெற்றுக் கொள்ளும்' என்றார். ஒரு கிழவன் ஊன்று கோலின் துணைகொண்டு குனிந்த வண்ணம் வாசலில் நின்றுகொண் டிருந்தான். அவன் கன்னங்களில் கடைசியாக வழிந்த கண்ணீர்த் துளிகள், இன்னும் ஈரம் உலராமல் இருந்தன. அவன் முகத்தில் விழுந் திருந்த சுருக்கங்களில், சீலகுணம் படர்ந்திருந்தது.

அவன் போஸ்ட் மாஸ்டரை நோக் கினன். போஸ்ட்மாஸ்டர் ஸ்தம்பித் துப் போனார். கிழவனின் கண்களில் அமானுஷ்ய ஒளி ஒன்று பிரதி பலித்தது.

'யாரது ஐயா? அலியா!' என்று கூவிக்கொண்டே, லட்சுமிதாஸ் ஓர் ஓரமாக வந்து நின்றான்.

போஸ்ட் மாஸ்டர் அவனைக் கவனியாமல் வாசலையே பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால், அங்கே யாரும் காட்சி அளிக்கவில்லை. ஆச்சர்யத்தோடு அவர் கண்களை அகல விழித்தார். வாசலில் யாரும் இல்லையே! இதென்ன? அவர் லட்சுமிதாஸை நோக்கினார்.

'ஆம், அலிபாபாவுக்குக் கடிதம் இருக்கிறது. யார், நீயா?'

'ஆம், நான்தான். அலி பாபா இறந்துவிட்டான்! என்றாலும், அவன் கடிதத்தை என்னிடம் கொடுங்கள்.'

'எப்போது இறந்தான்? நிஜமாகத்தானா, லட்சுமிதாஸ்?'

லட்சுமிதாஸைக் காணோம். ஆனால், ஒரு குரல் கேட்டது.

'நிஜமாகவேதான். அவன் இறந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.' இந்த வார்த்தைகளை எதிரே யிருந்து வந்துகொண்டிருந்த தபால்காரன் சொன்னான்.

போஸ்ட் மாஸ்டருக்குத் திக்பிரமை பிடித்துவிட்டது. மரியத்தின் கடிதம் இன்னும் வாசற்படியிலேயே விழுந்து கிடந்தது. அலியின் உருவம் அவர் கண்ணுக்கு முன்னே ஆடாமல் அசையாமல் நின்றது. அலியை லட்சுமிதாஸ் கடைசி தினம் சந்தித்த வரலாற்றையும் தபால்காரன் சொன்னான். போஸ்ட் மாஸ்டரின் காதுகளில் கதவிடிக்கும் சத்தமும், அவர் பார்வையில் அலியின் உருவமும் தாண்டவமாடின. அவர் உள்ளம் பிரமித்துப் போயிற்று. 'நான் அலியைப் பார்த்தேனே! அது நினைவா அல்லது பிரமையா? அல்லது லட்சுமிதாஸா?' என்று தமக்குத் தாமே கேட்டுக்கொண்டார்.

மறுபடியும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. 'போலீஸ் கமிஷனர்', 'லேப்ரேரியன்' என்று, தபால் பிரிக்கும் சிப்பந்தி கடிதங்களை

நம்பிக்கை

ஒரு மனிதன் ஓர் ஆற்றைக் கடக்க எண்ணினான். ஒரு ரிஷி அவனுக்கு ஒரு ரட்சாபந்தனத்தைக் கொடுத்து "இது உன்னை அக்கரை கொண்டு சேர்க்கும்" என்று சொன்னார். அந்த மனிதன் அதை எடுத்துக்கொண்டு நீர்மேல் நடக்கத் தொடங்கினான். பாதி ஆறு போனதும், அந்த ரட்சாபந்தனத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க ஆவல்கொண்டு, அதைப் பிரித்துப் பார்த்தான். ஒரு துண்டுக் கடிதத்தில் ஈசுவரனுடைய பெயர் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு, "இரகசியம் எல்லாம் இதுதானா?" என்று ஏளனமாய்ச் சொல்லிக் கொண்டான். அப்படிச் சொன்னவுடன், அவன் தண்ணீருக்குள் அமிழ்ந்து முழுகிவிட்டான். அற்புதமான காரியங்களைச் செய்வதெல்லாம் ஈசுவர நாமத்திலுள்ள விசுவாஸமே. ஏனென்றால், விசுவாஸமே உயிர்; சந்தேகமே மரணம்.–ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

வேகமாகப் படித்துக்கொண்டே வீசியெறிந்தான்.

இன்று போஸ்ட் மாஸ்டர் ஒவ்வொரு கடிதத்தையும் உற்று உற்றுக் கவனித்தார். கவர் நான்கு காலணாப் பெறுமான முள்ளது, கார்டு இரண்டு காலணாப் பெறுமான முள்ளது என்ற எண்ணமெல்லாம் இன்று அவரது உள்ளத்திலேயிருந்து மறைந்தொழிந்தது. போஸ்ட்மாஸ்டர் கம்பீரமாக அமர்ந்திருந்தார்.

மனிதன் சுயநலத்தை விட்டுப் பரோபகாரம் செய்ய ஆரம்பித்தால், பாதி உலகம் அமைதியும் சாந்தியும் அடைந்துவிடும்.

* * *

அன்று லட்சுமிதாஸும், போஸ்ட் மாஸ்டரும் மெல்ல மெல்ல அலியின் சமாதியை வந்தடைந்தார்கள். மரியத்தின் கடிதம், போஸ்ட் மாஸ்டர் வசம் இருந்தது. சமாதியின்மேல்

கடிதத்தை வைத்துவிட்டு, லட்சுமி தாஸும், போஸ்ட்மாஸ்டரும் திரும்பிச் சென்றார்கள்.

'லட்சுமிதாஸ்! இன்று நீர்தான் எல்லோருக்கும் முன்பாக ஆபீசுக்கு வந்திருந்தீரா?'

'ஆம்.'

'அலி பாபா' என்று நீர்தான் சொன்னீரா?'

'ஆம்.'

'ஆனால், அப்...அப்...எனக்குப் புரியவில்லை.'

'என்ன?'

'ஆம், சரி...ஒன்றுமில்லை—'

போஸ்ட் மாஸ்டர் சாதுரியமாக வார்த்தையை மாற்றிவிட்டார். தபாலாபீசின் திண்ணையை வந்தடைந்தவுடன், போஸ்ட்மாஸ்டர் லட்சுமி தாஸைப் பிரிந்து, தமக்குத் தாமே ஏதோ எண்ணமிட்டுக் கொண்டே உள்ளே சென்றார். அன்று, அலியின் தந்தை உள்ளத்தை, போஸ்ட்மாஸ்டர் அறிந்துகொள்ள முடியாது போனதற்காக அவரது இதயத்தில் வேதனை நிரம்பியிருந்தது. இன்று, இன்னும் தம்முடைய பெண்ணிடமிருந்து யாதொரு தகவலும் வராததால், இன்றைய இரவையும் வேதனையிலேயே கழிக்க நேர்ந்தது. ஆச்சரியம், சங்கை, பச்சாதாபம் என்ற மூன்றுவித தாபங்களினாலும் எரிக்கப்பட்டு, அவர் ஆபீசில் அமர்ந்தார். அவருக்கருகே வைத்திருந்த கணப்பிலிருந்து, கரித்தூளின் மெல்லிய ஜ்வாலை அவரை நோக்கி ஒளிவிட ஆரம்பித்தது.

✲

சூதாடி சாகசம்

குமாஸ்தா வேணு, மானேஜரிடம் போனான். 'ஸார், குமாஸ்தா சீனு, பெரிய சூதாடி; யாரைக் கண்டாலும் பந்தயம் போடுவான் அல்லவா? நான் அவனைத் திருத்தி விட்டேன். இனி அவன் யாரோடும் பந்தயம் போடமாட்டான்' என்றான்.

'எப்படி?' என்றார் மானேஜர்.

'நான் அவனைச் சற்றுமுன் கண்டேன். 'ஏண்டா இப்படிக் கெட்டுப்போகிறாய்? பந்தயம் போடுவது சூதாடி வேலையல்லவா? வாழ்க்கையே கெட்டுப்போகுமே' என்றேன். அதைப்பற்றி, எனக்குக் கவலையில்லை. இதுவரையில் நான் போட்ட ஒரு பந்தயத்தில்கூட எனக்கு நஷ்டம் வந்ததே கிடையாது. ஆகையால், நான் அதை நிறுத்தமாட்டேன்' என்றான் சீனு. 'நஷ்டம் வந்தால், உடனே விட்டுவிடுவாயா?' என்றேன். 'கண்டிப்பாய் விடுவேன். ஆனால், எனக்கு நஷ்டமே வராது. உதாரணமாய், உன் இடது மார்பிலே ஒரு மச்சம் இருக்கிறது என்று ஒரு ரூபாய் பந்தயம் போடுகிறேன். நீ என்ன சொல்கிறாய்?' என்றான். 'இல்லவே யில்லை. நீ தோற்றாய். இதோ பார்' என்று என் ஷர்ட்டைக் கழற்றிக் காட்டினேன். சீனு தோல்வியை ஒப்புக்கொண்டு, ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்' என்றான் வேணு.

'அட பாவி! எனக்கு இரண்டு ரூபாய் நஷ்டம் உண்டாக்கி விட்டாயே! சற்று முன் தான் சீனு என்னிடம் ஒரு பந்தயம் போட்டான். 'ஐந்து நிமிஷத்தில் வேணு சட்டையைக் கழற்றச் செய்கிறேன். இரண்டு ரூபாய் பந்தயம்' என்றான். 'சரி, பார்க்கலாம்' என்றேன். அவன் ஜயித்துவிட்டானே' என்றார் மானேஜர்!

சிறுவர்களுக்கு கொடுக்கும் ஒவ்வொரு பதார்த்தங்களையும் அதிக ஊக்க மளிக்கக் கூடியவைகளாகச் செய்யுங்கள்!



சிறுவர்களுக்கு சாப்பாடு தயாரிக்குமுன் அதிக சக்தியையளிக்கக் கூடிய உணவு தேவை யென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உணவுகள் பலத்தைக் கொடுக்கக்கூடிய அளவில் வித்தியாசப்பட்டிருப்பதால், சிறுவர்கள் அவ்வப்போது சாப்பிட்டாலும், அவர்களுக்கு போதிய அளவிற்கு வேண்டிய ஊக்கம் கிடைப்பதில்லை. ஒவ்வொரு விதமான உணவையும் அதிக ஊக்கமளிக்கக் கூடியவையாகச் செய்யலாம்—வைடமின் நிறைந்த டால்டாவினுல் சமையல் செய்யுங்கள். குடும்பச் சாப்பாடு டால்டாவினுல் சமையல் செய்தால் சக்தி குறைவிற்கு பயமே கிடையாது—ஏனென்றுல் இந்த உயர்ந்த சமையல் பதார்த்தத்தில் இயற்கையின் பலத்தைக் கொடுக்கக்கூடிய முக்கிய ஆகார சத்துக்களிருக்கின்றன. உணவைச் சாப்பிடுவதற்கு டால்டா தனி ருசியைக் கொடுக்கிறது—மேலும் அது தாவரப் பொருள்தான்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதாரத்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்கவேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும்) உணவுப்பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. Dept. E160 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD

HVM. 36-50-40 TM

(GORDO) கோர்டோ தயாரிப்புகள்

கோர்டோ - கார் (GORDO-CAR)

துருப்பிடிப்பதைத் தடுத்து பளபளப்பைக் காக்கிறது. கார்கள், சைகில்கள், இரும்புப் பெட்டிகள், முதலியவைகளிலுள்ள குரோமியம் பாகங்களை எப்பொழுதும் பளபளப்பாக வைத்திருக்கிறது.

$\frac{3}{4}$ அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1-0-0

கோர்டோ - பிலிம் (GORDO-FILM)

பிலிம்களுக்கு, கரிமலசத்து நல்ல உறுதியைக் கொடுப்பதுடன், உஷ்ணத்தை தடுத்து, பொட்டுக்கள் விழாமல், சுத்தமாகக் காப்பாற்றுகிறது.

1 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 4-0-0

கோர்டோ - கிளாஷைன் (GORDO-GLASHINE)

காரிலுள்ள காற்றுத் தட்டிகளின் கண்ணுடிகள், முகம் பார்க்கும் கண்ணுடிகள், மூக்குக் கண்ணுடிகள் முதலியவைகளை, பளபளப்பாக சுத்தம் செய்கிறது. மங்கலை அறவே நீக்குகிறது. மோட்டார் வைத்திருப்பவர்களுக்கும், ரயில்வே கம்பெனிகளுக்கும், ஹோட்டல்களுக்கும், குடும்பஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானது.

1 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 2-0-0

வியாபாரக் கமிஷன் :

ஒரே சமயத்தில் 12 டின்களோ அதற்கு மேலோ வாங்கினுல் $12\frac{1}{2}$% கமிஷன் கொடுக்கப்படும் ஒரே சமயத்தில் 12 டின்களோ அதற்கு மேலோ வாங்கினுல் பாக்கிங், தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

வியாபார விபரங்களுக்கு எழுதவும் :

THE S. I. T. E. COMPANY (MADRAS) LIMITED

64, MINT STREET
P. T. MADRAS

Grams : "SITECOMPY"   Phone : "2417"

பாரதியார் சரித்திரம்

செல்லம்மா பாரதி

பாரதியாரின் புதல்வி ஸ்ரீமதி தங்கம்மா பாரதி தன் தந்தையாரின் சரிதத்தை தன் தாயார் சொல்வதுபோல மிக அழகாக எழுதியிருக்கிருர்கள். சில புதிய விஷயங்கள் அடங்கிய இரண்டாம் பதிப்பு. அழகிய படங்களுடன். காலிகோ பைண்டு.

விலை ரூ. 2 0

தபால் செலவு தனி

மகாகவி பாரதி

வ. ரா.

பல வருஷங்கள் நெருங்கிப் பழகியதன் காரணமாக, பாரதியாரின் வாழ்க்கையில் நேர்ந்த ரசமான சம்பவங்களை எளியநடையில் எழுதியிருக்கிருர் வ.ரா. புதிய விஷயங்களுடன். திருத்திய இரண்டாம் பதிப்பு.

விலை ரூ. 3 0

தபால் செலவு தனி

பாரதிவாரம் (18-9-45) வரை முன்பணம் அனுப்புபவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை சென்னை | வடக்கு வெளி வீதி மதுரை | வெரைடி ஹால் ரோடு கோயமுத்தூர்

துடைப்பத்தின் தியாகம்

வெ. சாமிநாத சர்மா

துடைப்பமே! நீ மகா தியாகி. காட்டிலே வளர்ந்தாய்; நாட்டுக்காக உழைக்கிறாய். எல்லா இடங்களையும் சுத்தம் செய்கிறாய்; ஆனால், அழுக்கான மூலையில் ஒதுங்கி யிருக்கிறாய். காட்டிலே நீ செழுமையாக வளர்ந்து வந்ததை, நான் பார்த்திருக்கிறேன். எவ்வளவு பசுமையுடன் இருந்தாய்! இருந்தாலும், தலை வணங்கித்தான் நின்றாய். பணிவோடுதான் பிறந்தாய் போலும் நீ!

மனித சஞ்சாரமில்லாத இடத்தில் நீ உன் சகோதரர்களுடனும் சுற்றத்தாருடனும் சேர்ந்து வாழ்ந்திருந்த போது, எவ்வளவு குதூகலம் உன்னிடத்தில்! உனது அடிப்பாகம் பருத்தும் கொழுத்தும் பச்சென்றிருந்தது; மேல் பாகம், கதிர்கள் விரித்தும், சதா அசைந்து கொடுத்துக்கொண்டும் வெண்மையாகவும் இருந்தது. கருணையைக் குறிப்பது பசுமை; தூய்மையைக் குறிப்பது வெண்மை. இரண்டும் உன்னிடத்தில் இருக்கின்றன அல்லவோ?

பாழான மனிதன் உன்னைக் கண்டு பிடித்தான்; பறித்தான்; கட்டாகக் கட்டினான்; தன்னைப்போல் உன்னையும் அடிமையாக்கி விட்டான்; வீட்டிலே கொண்டுபோய் வைத்துக் கொண்டு, தன்னிருப்பிடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள, உன்னை உபயோகப்படுத்திக்கொள்கிறான். ஆனால், தன்னைச் சுத்தமாக்கிக்கொள்ள, அவனுக்குத் தெரியவில்லை; சுத்தமாக இருக்கவேண்டு மென்ற எண்ணமும் அவனுக்கு இல்லை.

அப்படித்தான் உபயோகித்துக் கொள்கிறானே, உன்னை ஒரு கௌரவமான ஸ்தானத்திலாவது வைக்கக் கூடாதா? இல்லவே இல்லை. காட்டிலே நீ இயற்கையாக வளர்ந்தாய்; வீட்டிலே கொண்டுவந்து உன்னைத் தலைகீழாகப் போட்டுவிட்டான். அடி மேலாகவும், நுனி கீழாகவும் நிற்கிறாய் ஆயினும், உன் கடமையைச் செய்யத் தவறுவதே இல்லை.

காட்டிலே நீ வாழ்ந்திருந்தபோது, உன்னைப் பார்த்தால் பசி தீரும் என்று சொல்வார்கள்; ஆனால், வீட்டிலே நீ குடியேறின பிறகு, மனிதர்களுடைய கண்ணுக்குப் படாத இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறாய். காலையில் எழுந்தவுடன் உன்னைப் பார்க்கக் கூடாதென்று, பாட்டிமார்கள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்; பேரன்மார்களும் பேத்திமார்களும் அப்படியே உன் விஷயத்தில் நடந்து காட்டுகிறார்கள்; உன்னைத் தொட்டு உபயோகப்படுத்திவிட்டுக் கையலம்பிக்கொள்கிறார்கள். நீ எல்லாவற்றையும் சுத்தப்படுத்துகிறாய்; ஆனால், உன்னைத் தொட்டால் அசுத்தம்! தியாகிகளின் லட்சணமே இது தான். அவர்கள் உலகத்தைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்று அல்லும் பகலும் உழைக்கிறார்கள்; ஆனால், அவர்கள் கிட்ட யாரும் நெருங்குவதில்லை. அவர்களைப் பார்த்து, ஓர் அநுதாப வார்த்தைகூடச் சொல்வதில்லை.

இயற்கையாக வாழ்ந்து கொண்டிருந்தபோது, நீ கொழு கொழு வென்றிருந்தாய்; செயற்கையான சூழலின் மத்தியில் உன்னைக் கொண்டு வந்து சிறைப்படுத்திவிட்டான் மனிதன். வாடி உலர்ந்து வற்றிப் போய் விட்டாய். பச்சைப் பசேலென்றிருந்த உன் தேகம் வெளுப்பேறி விட்டது. ரத்தமில்லாத சோகையாகி விட்டாய். இருந்தாலும், உபயோகப் படுத்தப்படுகிற வரையில் நீ உபயோகமாகிக்கொண்டு வருகிறாய். மனிதன்

பற்பல பொருள்களையும் தத்துவதர்சனத்தோடு ஊடுருவிப் பார்த்தால், நாம் அபூர்வ உண்மைகளைக் காண்போம்; சிறந்த படிப்பினைகளைப் பெறுவோம். அந்த நோக்கில் பார்க்கும் ஒரு கட்டுரை இது.

கூட இயற்கை வாழ்வு வாழாமல் செயற்கை வாழ்வு நடத்தத் தொடங்கினல், இப்படித்தான் வாடிப் போகிருன்; உருமாறிப் போகிருன். அவனுடைய சுபாவங்கள்கூட மாறிப் போய்விடுகின்றன. ஆனல், உன்னைப் போல் அவன் உபயோகமாவது கிடையாது. இதனல், மனிதனைவிட நீ பெரியவள்தான்.

துடைப்பமே! நீ பெண்பால் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஏனென்ருல், பெண்மைக்குத்தான் தியாக புத்தியுண்டு; தன்னை அழித்துக்கொண்டு மற்றவர்களுக்கு உபகாரம் செய்கிற சக்தி உண்டு. மற்றும், வீட்டிலே நீ பெண்களின் தோழியாகத்தான் இருக்கிருயே யொழிய, ஆண்களோடு உறவாடுவதில்லை. ஒரு பெண், முதன்முதலாகக் குடித்தனம் வைக்கிறபோது, முதன் முதலாக உன்னைத்தான் கோருகிருள். உன்னுடைய உபயோகந்தான் முதலில் அவளுக்குத் தேவையா யிருக்கிறது. அவளுடைய குடித்தனப் பாங்கு உன்னுலேயே சோபித மடைகிறது.

இவ்வளவு உபயோகமா யிருக்கிற உன்னைக் கடைசியில் மனிதர்கள் என்ன செய்கிருர்கள், தெரியுமா? உபயோகமிருக்கிறவரையில் உன்னை உபயோகப்படுத்திக் கொண்டு விட்டு, பின்பு குப்பை மேட்டிலே எறிந்துவிடுகிருர்கள்; அல்லது அடுப்பிலே போட்டு எரித்துவிடுகிருர்கள். குப்பை மேட்டிலே நீ எருவாகிருய். அடுப்பிலே விறகாகிருய். உன் மரணமும் உபயோகப்படுகிறது. ஆனல், மனிதன் உன்னைப் பார்த்து இரக்கப்படுவது கூடக் கிடையாது. உழைக்கிறவர்கள், இரக்கம் காட்டப்படுவ தில்லை. ஆனல், அவர்கள் இறப்பதும் இல்லை.

✲

தும்மல் பிடிக்காத தளபதி

தளபதி மாண்ட் காமரி சிகரெட் குடிக்கமாட்டார். அது அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. அவர் கீழுள்ள எவரும், அவர் தலையைக் கண்டால் போதும்; கையில் உள்ள சிகரெட்டை வீசி எறிந்து விடுவார்கள். விருந்தாளிகளுக்கு அவர் சிகரெட் கொடுப்பார். ஆனல், "நான் அப்பால் போனபின்பு குடியுங்கள்" என்று கேட்டுக் கொள்வார்.

ஒரு சமயம் ராணுவ அதிகாரிகளின் கூட்டமொன்றில், அவர் பேச வந்தார். முதலில் அவர் சொன்னது இதுதான். "தும்மலும் சிகரெட்டும் எனக்குப் பிடிக்காது. இப்போது, யாரும் சிகரெட் குடிக்கக் கூடாது. வேண்டுமானல், இரண்டு நிமிஷம் தும்ம அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் எவரும் தும்மிக்கொள்ளலாம். பிறகு, இருபது நிமிஷம் வரையில், யாரும் தும்மக்கூடாது. அப்புறம், மீண்டும் தும்ம, ஒரு நிமிஷம் அவகாசம் கொடுக்கிறேன்."

படிக்காத் பெருமை:

லபிடீஸ் என்ற அமெரிக்கக் கோடீசுவரருக்கு எழுதப்படிக்கத் தெரியாதாம். இது மெய்தானு என்று அவரையே ஒரு நண்பர் கேட்டார்

"நிஜமாகவே எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால், இப்போது ஒரு ருஷ்ய நகரில் போஸ்ட் மாஸ்டர் வேலையில் இருப்பேனே" என்று லபிடீஸ் உதடசையாமல் பதிலளித்தார்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஏனு? எனக்குப் பதினெட்டு வயதா யிருந்தபோது, அந்த நகரில் உதவிப் போஸ்ட்மாஸ்டர் வேலைக்கு மனுப் போட்டேன். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாதென்று என் மனுவை நிராகரித்து விட்டார்கள். நான் மனமுடைந்துபோய் அமெரிக்காவுக்கு வந்து குடியேறி விட்டேன்."

பாதிரி படம்

டோலெர்

வளைகுடாக் கடலின் நீர்ப்பரப்பு, மரகதம் வைத்திழைத்த மாதிரி, ஒரே பச்சை நிறமா யிருந்தது. கரைக்கோடி நெடுகலும் செறிந்து கிடந்த மஞ்சள் நிற மணல், பகலொளியில் தகதக வென்று மின்னியது. பெருங்கடலோடு வளைகுடாக் கடல் சேருமிடத்தில் உள்ள சிறிய இடைவெளியைத் தவிர, எங்கும் ஒரே வட்டமாயிருந்தது. மரகத நீர்ப்பரப்பைச் சுற்றிலும் அமைந்த பொன் பிறைச் சந்திர வட்டம்போல், அது காட்சி யளித்தது. ஜலசந்திக்கு வெளியே, பெருங்கடலை அடுத்தவுடன், நீரின் நிறம் மாறிவிட்டது. பச்சை நிறம், படிப்படியாய் மாறி, நீல நிறமடைந்து, கடைசியில் கரிய வண்ணம் பெற்றுக் கண் காணாத தொலைவில் அலைமோதிச் சென்றுகொண் டிருந்தது. தொலை தூரத்திலே, அடிவானத்தில், ஒரு கப்பலின் அடிப்புறம் கறுப்பாய்த் தோன்றியது; கப்பலிலிருந்து கிளம்பிய புகை, அழுக்குப் பிடித்த மாதிரி, கப்பலை ஒட்டிக்கொண் டிருந்தது. வளைகுடாவின் வாயிலை, கப்பல் அணுகி வந்துகொண் டிருந்தது.

பச்சைப் பசேலென்றிருந்த குட்டிப் பனைகள் தந்த நிழல், கோணல் மாணலாய் மணல்மீது விழுந்ததும், பச்சையும் மஞ்சளுமில்லாமல், புதியதொரு சிவப்பு நிறமாகிவிட்டது. இந்த நிழலில், மணலின்மீது, ஒரு மனிதனும் ஒரு பெண்ணும் அயாசமாய்ப் படுத்திருந்தார்கள். நாகரிகத்தின் ஆடை அலங்காரங்கள் அவர்களின் உடலைப் பிடித்திருக்க வில்லை. தங்களுடைய நிர்வாண நிலையைப் பற்றிச் சற்றுங் கவலைப்படாத இரண்டு இயற்கைப் பிராணிகள்! இருப்புச் சிமிழ் ஆணிகள் அடித்த பெட்டி ஒன்று பாதி திறந்தபடி அவர்களருகே கிடந்தது. பெட்டியைச் சரசர வென்று மணல் மேலே இழுத்துவந்த சுவட்டைப் பார்த்தாலே, பெட்டி மிகவும் பளுவானது என்று கண்டுகொள்ளலாம்.

“ஏ ஆதாம், கடைசியிலே ஒரு வழியாய் நாம் இந்தத் தீவைவிட்டுப் போய்விட முடியும்போல் இருக்கிறதே. அதோ வருகிறதே கப்பல், அது நம்மைச் சுற்றிச் செல்லும். வெளியுலகத்தை நாம் பார்க்க முடியும். பெரிய பெரிய நகரங்களை யெல்லாம் பார்க்கப் போகிறோம். நியூயார்க், லண்டன், பாரிஸ் எல்லாம் நாம் பார்க்கலாம். அழகான துணிமணி, நகைநட்டு எல்லாம் நான் வாங்கப் போகிறேன். இவ்வளவு ரம்யமான தங்கம் எத்தனை காலமாக இங்கே வீணாய்த் தேடுவாரின்றிக் கிடந்திருக்கிறது! இரவில் நம்மீது பொன்னொளி சொரிகிறதே நிலா, அதைப் போல்தானே இந்தத் தங்கமும் கொஞ்சங்கூடக் காரியத்துக்கு உதவாமல் கிடந்தது! உன் பங்கு தங்கத்தை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? அப்பாடி! என்னமோ, கடைசியாய் நமக்கு விடுதலை கிடைத்து விட்டது. இல்லையா, ஆதாம்?” என்றாள் அந்தப் பெண்.

“அடி ஏவாள், உன் இஷ்டம் பூராவும் நிறைவேறும், பயப்படாதே. உன் மனசுக் குகந்ததை யெல்லாம் வாங்கி மகிழ்வதற்காக, பை நிறையத் தங்கத்தோடு, உன்னோடு கூடவே உலகம் பூராவும் நான் சுற்றி வருவேன். இதுதான் எனக்குச் சந்தோஷம்” என்றான் அந்த மனிதன்.

கப்பல் நிமிஷத்துக்கு நிமிஷம் இவர்களைச் சமீபித்துக்கொண்டே வருகிறது. அதன் கரிய புகை

கண் காணாத நாட்டிலே சீர்திருத்தம் செய்யப் புறப்பட்ட பாதிரியார் படம் அது. சீர்திருத்தம் முடிந்து விட்டது. ஆனால்...? **எச். பி. டோலெர்** என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய இதை, நண்பர் **சுப. நாராயணன்** தமிழ்ப்படுத்தித் தந்திருக்கிறார்.

போக்கியும், கொடி மரங்களும் வானத்தில் எடுப்பாய்த் தெரிந்தன. உடனே பெண் எழுந்து, அடுத்திருந்த காட்டுக்குள்ளே குஷாலாய், நடந்து சென்றாள். மனிதன் சோம்பியவண்ணம் அவளைப் பின்தொடர்ந்தான். கூரை வேய்ந்த சிறுகுடிசை ஒன்றை இருவரும் அடைந்தார்கள். குடிசையில், பனை ஓலையில் பின்னிய இரண்டு படுக்கைகள், எளிய முறையில் அமைந்த சில சமையல் பாத்திரங்கள், வெகு நாளைக்கு முந்திய சில பத்திரிகை இதழ்கள் முதலியவை இருந்தன. உயரமான ஒரு பெட்டியின் மேலே, ஒரு பாதிரியின் நிறம் மங்கிய படம் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஏதோ ஒரு தினசரிப் பத்திரிகையில் வெளியான படம். அதை இப்படி ஒட்டிவைத்திருக்கிறார்கள். அதற்குச் சட்டம் போட்டிருந்தது. படத்துக்கு மேலே நிஜமான கண்ணாடி போட்டுவைத்திருந்தார்கள்.

படத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, தன் தலை சீவியிருப்பதைச் சரி பார்த்துக்கொண்டாள் அந்தப் பெண். முகம் பார்க்கும் கண்ணாடியாக, அவள் அதை உபயோகித்துக் கொண்டாள். முகம் பார்த்துக் கொள்ள இதைத் தவிர அங்கே வேறே என்ன இருக்கிறது? "கண் காணாத தொலை தூர நாடுகளிலெல்லாம் தேவ வாக்கைப் பரப்புவதற்காகச் செல்லும் பூஜ்யர் தோமாஸ்" என்ற சொற்கள் படத்தின் கீழே காணப்பட்டன. இளமை தவழும் முகம்; பண்பாட்டின் மெருகும், அறிவுப் பிரகாசமும் அதில் காணப்பட்டன. நீலநிறக் கண்களின் சாந்தப் பார்வை எதற்காகவோ மன்றாடுவது போல் தோன்றியது.

"ஐயோ பாவம்! தோமாஸ்தானே நமக்கு வாழ்க்கையின் லட்சியத்தைக் கற்றுக்கொடுத்தார்! வெளியுலகத்தைப் பற்றியெல்லாம் அவர்தானே நமக்கு எடுத்துச் சொன்னார்! அழகை வழிபடவும் நமக்கு மிகப் பிரியமானதை அடைவதற்குப் பிரார்த்தனை செய்யவும் சொல்லிக்கொடுத்தது யார்? அவர் தானே! ஏன், இந்தத் தங்கப் புதையலைக் கண்டெடுத்துத் தந்ததுகூட அவர்தானே! இதில்லாவிட்டால், நாம் பிரயாணஞ் செய்யமுடியுமா; சந்தோஷமாயிருக்கத்தான் முடியுமா? ஒரு நாளும் முடியாதே!" என்றாள் பெண். அவளுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த மனிதன், அவளது தோள்மேல் எட்டி நோக்கி, படத்திலே தெரிந்த அவள் முகத்தின் பிரதிபிம்பத்தைப் பார்த்தான். கற்றையாய்ச் சுருண்டிருந்த அவளது தலைமயிரையும், விரிந்திருந்த அவளது நாசியையும், அடுப்புக் கரி நிறத்தில் பளபளத்த அவளது சருமத்தையும், அவன் கூர்ந்து நோக்கினான்.

"பாவம்! நாம் அவரைக் கொன்று தின்றிருக்கவே கூடாதென்று சதா காலமும் நான்தான் சொல்லி வருகிறேனே!" என்று ஏதோ சம்பந்தமில்லாமல் சொன்னான் ஆதாம்.

✲

சித்திரக்காரர்கள்

சித்திரக்காரர்களைப் பின்வரும் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்:

1. தாம் கண்டதைச் சித்தரிப்போர்.
2. தாம் கண்டதென்று தாம் நினைப்பதைச் சித்தரிப்போர்.
3. தாம் கண்டதைத் தாம் சித்தரிப்பதாக நினைப்போர்.
4. தாம் கண்டதென்று தாம் நினைப்பதைத் தாம் சித்தரிப்பதாக நினைப்போர்.
5. தாம் சித்தரிப்பதாக நினைப்போர்.

—ஐரிஷ் விகடப் பத்திரிகை.

புத்தக உலகம்

என் கதை: ஆசிரியர்: நாமக்கல் கவிஞர். வெளியிட்டோர்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை. விலை ரூ. 6-8-0.

கவிஞருடைய 'என் கதை' ஒரு கலைப் பொக்கிஷம். ஆசிரியருடைய எழுத்துத் திறமையும், சம்பவங்களை அவர் அமைத்திருக்கும் முறையும் ஒரு நாவல்போல், சுவாரசியமாக மேலே மேலே படித்துக்கொண்டு போகத் தூண்டுகின்றன. நாடகம் முதல் நாட்டுத் தொண்டு புரிவது வரையில், தமிழ் நாட்டின் எல்லாவிதமான வாழ்க்கையிலும் பங்கு கொண்டவர் நம் கவிஞர். காவியம் புனைவதில் மட்டுமன்றி ஓவியம் வனைவதிலும் வல்லவர். மேலே கண்ட இரண்டுக்கும் 'என் கதை'யில் சான்றுகள் உள்ளன. தமிழ் மறையாகிய திருக்குறளுக்குப் புத்துரை ஒன்று காணவேண்டுவதன் அவசியத்தைக் குறித்த கவிஞரின் வாதத்தை அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். கவிஞரின் திருக்குறள் உரையும் சீக்கிரம் வெளி வருமென எதிர் பார்க்கிறோம். கவிதை இயற்றுவதில் மட்டுமல்லாமல், வசன நடையிலும் கவிஞருக்கு விசேஷத் தேர்ச்சி இருக்கிறது என்பது 'என் கதை'யில் வெளிப்படுகிறது. மிக மிகச் சரளமான, எளிய தமிழ் நடையில், எழுதியுள்ளார். கருத்தைக் கவரும் இந்த நூலைக் கண்ணைக் கவரும் முறையில் வெளியிட்டிருக்கிறார்கள் தமிழ்ப் பண்ணையினர்.

திரிகடுகமும் சிறுபஞ்ச மூலமும்: பதிப்பாசிரியர்: எஸ். வையாபுரிப் பிள்ளை பி. ஏ., பி. எல். வெளியிட்டோர்: சென்னைச் சர்வ கலாசாலை. விலை ரூ. 3-4-0.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அடங்கிய இரண்டு நீதிநூல்கள் இவை. இந்த நூல்களைத் திருத்தி, பல ஏட்டுச் சுவடிகளையும், பதிப்புக்களையும் ஆராய்ந்து, பழைய உரையுடன் திருத்தமாக வெளியிட்டிருக்கிறார் பதிப்பாசிரியர். நூலின் காலம், நூற்பொருள் ஆராய்ச்சி முதலியவற்றை விரிவாக ஆராய்ந்துள்ளார். நூற்பொருள் அகராதி, முதுமொழி அகராதி, பொது உண்மை அகராதி, செய்யுள் அகராதி, சொல்லகராதி முதலிய பல அகராதிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார். மக்கள் இன்னின்னவாறு நடந்து கொண்டால் உயிர்நலம் பேணலாம் என்றுரைக்கும் இந்தப் பழந் தமிழ் நூல்களை, தமிழ் கற்பவர் அனைவரும் தம்மோடு வைத்திருப்பது அவசியம்.

தந்தையின் காதல்: ஆசிரியர்: கி. ரா. வெளியிட்டோர்: கமலா பிரசுராலயம், சென்னை; விற்பனை உரிமை: ஸ்ரீமகள் கம்பெனி, பிராட்வே, சென்னை. விலை: ரூ. 1-8-0.

நான்கு ரேடியோ நாடகங்களின் தொகுப்பு. தந்தைக்கும் மகனுக்கும் ஒரே பெண்ணிடம் நிகழும் காதல் போட்டியைச் சித்தரிக்கும் சோகநாடகம் ஒன்று. செல்வத்திலே மகிழ்ச்சியில்லை, ஞானத்திலேதான் என்று விளக்குவது 'சந்தோஷம் எங்கே' என்ற நாடகம். ஒரு பழந்தமிழ்ப் பெண் காதலனை மறந்து மன்னவனிடம்மையல் கொள்ளுவதைவர்ணிப்பது 'முல்லைக்கொடி'. பாடலிபுத்ர நிர்மாணத்துக்குப் பகைப் புலமாய்ச் சோகக் கதையொன்றைக் கற்பனை செய்வது 'பாடலியின் காதல்'. நான்கிலும் சம்பாஷணை நயமும், கதா சுவாரஸ்யமும் நிரம்பியிருக்கின்றன. அழகான நாடகங்கள்.

காய்கறித் தோட்டம்: எழுதியவர்: மு. அருணசலம், (பேராசிரியர்: காசி ஹிந்து விசுவ வித்தியாலயம்). வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை ரூ. 5-0-0.

சுலபமான முறையில், லாபகரமாகக் காய்கறிகள் பயிரிடுவதெப்படி என்பதைச் சரளமான நடையில்,

எல்லோருக்கும் விளங்கும்படி ஆசிரியர் சொல்லுகிறார். தோட்ட வேலைக்கு அவசியமான கருவிகள், எப்படித் தோட்டத்தை அமைப்பது, விதைத்தல், நீர் பாய்ச்சுதல் முதலியவற்றைச் செய்யவேண்டிய முறைகள், முதலியவற்றை விளக்கமாக விவரித்திருக்கிறார். காய் கறிகளைக் கத்தரியினம், அவரையினம் என்று இனம் இனமாகப் பிரித்துக்கொண்டு அவற்றைப் பயிரிடவேண்டிய முறைகளை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். செடிகளுக்கு வரும் நோய்கள், அவற்றைப் போக்கும் வழிகள் ஆகியவற்றையும், உணவுச் சத்தைப்பற்றியும் விவரித்திருக்கிறார். சென்னை போன்ற நெருக்கமான இடங்களில் வசிக்கும் மக்களுக்குத் தங்கள் வீட்டு மாடிகளிலேயே தோட்டம் போட்டுக்கொள்ளவும் வழி சொல்லிக் கொடுக்கிறார். காய்கறிகளைப் பற்றிய எல்லா விவரங்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

சுதந்த்ரத்தின் தத்துவங்கள்: எழுதியவர்: டெரன்ஸ் மாக்ஸ்வினி. மொழி பெயர்த்தவர்: ப. ராமஸ்வாமி. வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. விலை ரூ. 2-0-0.

டெரன்ஸ் மாக்ஸ்வினி சிறந்த ஐரிஷ் தேசபக்தர். ஐரிஷ் சுதந்தரப் போராட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு, எழுபத்துநான்கு நாட்கள் உண்ணாவிரதமிருந்து, சிறையிலேயே புனித மரணமடைந்த தியாகி. அவருடைய ஒன்பது கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு இந்த நூல். சுதந்தரத்தின் அவசியம், அதை அடைவதெப்படி, சுதந்தரப் போராட்டத்தில் நேரும் இடையூறுகள், அவற்றைப் போக்க என்ன வழி, தேசியபாஷை, ஒற்றுமை ஆகியவற்றின் முக்கியத்துவம், ஒவ்வொருவனும் தேசியக் கொள்கையில் கொண்டிருக்க வேண்டிய விசுவாசம் போன்ற பல விஷயங்களை மிக்க விரிவாக விளக்கியிருக்கிறார் மூல ஆசிரியர். இந்த நூலிலுள்ள பல விஷயங்கள் நம் நாட்டுக்கும் ஏற்றவையாகவே விளங்குகின்றன. அரசியல் ஆர்வமுடைய ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகம் இது. இதைத் தெள்ளிய சரளமான தமிழ் நடையில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார் நண்பர் ப. ரா.

காந்தம்: ஆசிரியர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. விலை ரூ. 2-8-0. **சிலைக்கு எதிரில்:** ஆசிரியர்: ரா. ஸ்ரீ. தேசிகன். விலை ரூ. 2-8-0. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

ஆடவனை மணம் செய்து அடிமையாக்கி, அவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும் என்று எண்ணிய ஒரு புதுமைப்பெண்ணின் கதை 'காந்தம்'. ஆனால், ஆடவனைக் கலியாணம் செய்துகொண்டதும், அவன் கட்டிய தாலியை அவன் முகத்திலேயே எறிந்துவிட்டு வெளியேறி விடுகிறாள். ஆனால், பின்னால் மனந்திரும்பி அவனோடு சேர்ந்து விடுகிறாள். கதை ஓர் அழகான மனோதத்துவ சித்திரம். கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் ஜீவனுடன் விளங்குகிறது. கதைப்போக்கு, காண்டேகரின் நாவல்களை ஒட்டி இருக்கிறது. இது கா. ஸ்ரீ. ஸ்ரீயின் முதல் நாவல். இதில் அவர் பெரிதும் வெற்றியடைந்திருக்கிறார். ரா. ஸ்ரீ. தேசிகன் எழுதிய இருபத்துநான்கு சிறு கதைகள் 'சிலைக்கு எதிரில்' என்ற தொகுதியில் அடங்கியிருக்கின்றன. 'சககமனம்', 'மாறிப்போன பெட்டி', 'பீஷ்மரும் அபிமன்யுவும்', 'சனியன் தொலைந்தது', 'மூவர்', 'இது இல்லை சாமி' முதலிய கதைகள் மிக நன்றாக அமைந்திருக்கின்றன. கதைகளெல்லாம் உணர்ச்சிச் சித்திரங்களாக விளங்குகின்றன.

பூங்கொடி: ஆசிரியர்கள்: ஆர். திருஞானசம்பந்தம், கே. வீரராகவன். வெளியிட்டோர்: புதுமலர் நிலையம், கோவை. விலை ரூ. 2-0-0.

திருஞானசம்பந்தம் எழுதிய ஐந்து சிறு கதைகளும், விஜயராகவன் எழுதிய எட்டுச் சிறுகதைகளும் இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன. கிராமியக் காட்சிகளைப் பகைப் புலமாகக் கொண்டே இந்தக் கதைகள் உருவாகியுள்ளன. கொங்கு

நாட்டுநடை; உடை, பாவனைகளையும், பேச்சுத் தமிழையும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள் ஆசிரியர்கள்.

பதினொரு கட்டுரைகள்: ஆசிரியர்: ம. ராதாகிருஷ்ண பிள்ளை (சென்னை மேயர்); வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை ரூ. 1-12-0.

தம்முடைய பலதிறப்பட்ட அலுவல்களிடையேயும் தமிழுக்கும் தொண்டு புரிகிறார் நம் சென்னை மேயர். அவருடைய தமிழ்ப் பற்றையும், ஆர்வத்தையும், திறமையையும் வெளிக்காட்டுகிறது இந்த நூல். இதில் சமயம், இலக்கியம், சமூகப் பிரச்னைகள், விஞ்ஞானம் ஆகிய பல வகையான கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. ஆயிரம் வருஷங்களுக்கு முன் திருமங்கையாழ்வார் கண்டு சித்தரித்த போது எப்படியிருந்ததோ அப்படியேதான் சிங்கவேள் குன்றம் (அஹோபிலம்) இன்றும் இருக்கிறது என்பதை விளக்குகிறார். தீண்டாமைக்கு வைணவ சமயத்தில் இடமில்லை என்பதை வற்புறுத்துகிறார். தமிழ் ஆக்கம் பெறவேண்டுமானால், என்னென்ன செய்யவேண்டும் என்பதைக் கூறுகிறார். ஆண்டாள், குலசேகராழ்வார் ஆகியவர்களது பக்திச் சுவை கனிந்த பாடல்களை விளக்குகிறார். இன்று ஆந்திரர்கள் சென்னைவரை தங்கள் நாட்டைச் சேரவேண்டும் என்று சொல்வதை ஆணித்தரமாகத் தக்க சான்றுகளுடன் மறுக்கிறார். மின்சாரத்தைப்பற்றியும், டெலிவிஷனைப் பற்றியும் விவரிக்கிறார். இப்படிப் பல திறப்பட்ட கட்டுரைகளை, உயரிய தமிழ் நடையில் ஆசிரியர் எழுதியிருக்கிறார். ராஜாஜி இந்த நூலுக்கு ஓர் அரிய முன்னுரை அளித்திருக்கிறார்.

பாரதியார் சரித்திரம்: ஆசிரியர்: செல்லம்மா பாரதி; வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை. விலை ரூ. 2-0-0.

மகாகவி பாரதியாரைப்பற்றி எத்தனையோ கதைகள், கட்டுரைகள், புத்தகங்கள் இதுவரை வெளியாகி இருக்கின்றன. இது மகாகவியுடன் வாழ்ந்து, அவர் சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்ட, அவர் தர்ம பத்தினியார் செல்லம்மா பாரதி எழுதியது. மற்றவர் சொல்லாத பல ருசிகரமான குறிப்புகளை இந்தப்புத்தகத்தில் செல்லம்மா பாரதி தருகிறார். பாரதியாருடைய பூர்வீகம், உறவினர்கள், படிப்பு, திருமணம் முதலியவற்றைப் பற்றிய பல ரசமான குறிப்புகள் வெளியாகின்றன. புதுவையிலே பாரதியாரும் மற்ற தேச பக்தர்களும் பட்ட கஷ்டம் முதலிய பல சம்பவங்களைப் படிக்கும் போது நம் நெஞ்சமும் கலங்கும் நடையில் ஆசிரியை உருக்கமாக எழுதியுள்ளார். பாரதி விழா வாரம், அதாவது 17-9-45 வரையில், முன் பணம் அனுப்புவோருக்குத் தபால் செலவில்லாமல் புத்தகம் அனுப்பப்படும்.

பாரதி படம்: சைத்ரீகர்: ஆர்யா. கிடைக்குமிடம்: பாரத தேவி காரியாலயம், மவுண்ட்ரோடு, சென்னை. விலை ரூ. 1-0-0.

மகாகவி பாரதியாரின் திருவுருவப் படத்தைச் சைத்ரிகர் ஆர்யா நான்கு வர்ணங்களில் அச்சிட்டிருக்கிறார். பாரதியாரின் திருவுருவம் மிகவும் கம்பீரமாகவும் அழகாகவும் அமைந்திருக்கிறது. சுவரில் மாட்டத் தக்க பெரிய அளவு. பட விற்பனையில் 25% அரசியல் கைதிகள் குடும்ப நிதிக்கு அளிக்கப்படும் என்று தெரிகிறது. இது தமிழ்ப்பற்றும் தேசப் பற்றும் உள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய படம்.

குடும்ப விளக்கு: (கவிதை). இயற்றியவர்: பாரதிதாஸன். வெளியிட்டோர்: முல்லைப்பதிப்பகம், பிராட்வே சென்னை. விலை அணா 10.

புதுவைக் கவிஞர் பாரதிதாஸன் அவர்கள் இயற்றிய குடும்ப விளக்கின் இரண்டாம் பகுதி இந்த நூல். இதில் விருந்தோம்புதலின் அவசியத்தையும், எவ்வாறு விருந்தோம்ப வேண்டு மென்பதையும் ஆசிரியர் அழகாக வர்ணித்திருக்கிறார். ஆனால், சந்நியாசத்தைப் பற்றிய தூஷணை அவ்வளவு அவசியமா என்பது நமக்கு விளங்கவில்லை. தெள்ளிய விறு விறுப்பான இனிய நடையில் பாடல்கள் இயன்றுள்ளன.

சிந்தனைக் கதிர்கள் : (பாடல்கள்) தமிழாக்கியவர் : பண்டித ரத்நம். வெளியிட்டோர் : ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சிறாப்பள்ளி. விலை அணா 8.

ஷேக்ஸ்பியர், பேகன், வாட்ஸ்வர்த், பைரன், டாக்டர் ஜான்சன் போன்ற பல ஆங்கிலக் கவிஞர்களின் பாடல்களில் முப்பதைத் தமிழ்பாடல்களாக மொழி பெயர்த்திருக்கிறார் பண்டித ரத்னம். பாடல்கள் அனைத்திலும் அரிய நீதிகள் புலப்படுகின்றன. 'நாடக சாலை', 'வாழ்வு', 'மன வீடு' முதலிய பாடல்கள் நன்றாய் இருக்கின்றன.

பெண் மனம் : (ஸ்பானியக் கதை) ஆசிரியர் : ஜோஸே ஸெல்காஸ் : மொழி பெயர்த்தவர் : ப. திருமலை. விலை அணா 0-10-0. **உயிர் ஆசை :** (அமெரிக்கக் கதை) ஆசிரியர்கள் : ஜாக்லண்டன், வில்லியம் ஸரோயன். மொழி பெயர்த்தவர் : புதுமைப் பித்தன். விலை அணா 0-8-0. வெளியிட்டோர் : ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை.

ஒரே பெண். அவள் ஒரு யுவனைக் காதலிக்கிறாள். காதலனுக்குச் சந்தேகம் வந்து விடுகிறது. அவள் காதல் உண்மையானதுதானா என்று சோதிக்கிறான். சோதனையின் பலன் விபரீதமாகி விடுகிறது. காதலி இறந்து போகிறாள். 'பெண் மனம்' என்ற நூல் இந்தக் கதையை விவரிக்கிறது. சாவு நெருங்கி விட்டது என்று நிச்சயமாகத் தெரிந்தாலும்கூட மனிதன் மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள ஓர் இடுக்கு வழியாவது புலப்படாதா என்று தேடி அலைகிறான். சொல்ல முடியாத கஷ்டங்கள் நேரிட்டாலும், வாழ்வதைவிடச் சாவது தான் சிறந்ததாக இருந்தாலுங்கூட, மனிதன் உயிர் வாழத்தான் விரும்புகிறான். இது மனித இயற்கை. இந்த அடிப்படையில் கட்டப்பட்டது 'உயிர் ஆசை' என்ற கதை. 'உயிர் ஆசை' யுடன் 'காதல் கதை' என்ற மற்றோர் சிறு கதையும் இடம் பெற்றிருக்கிறது. மூன்றுகதைகளும் சிறந்தஉணர்ச்சிச் சித்திரங்கள். மூலக் கதையின் சுவை கெடாமல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

—சு. சோமசுந்தரம்

88852

மாஜி வைசிராய் திக்விஜயம்

இந்திய வைசிராயாக இருந்த ஹாலிபாக்ஸ் பிரபு இப்போது அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானீகராக இருக்கிறார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பெருமையை அமெரிக்கருக்கு அறிவுறுத்துவதற்காக, அவர் அமெரிக்கா வெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, பிரசங்கங்கள் புரிந்துவந்தார்.

ஒரு முறை, ஹாலிபாக்ஸ் பிரபு தம்முடைய நண்பர்கள் சிலருக்கு ஒரு விருந்தளித்தார். அவர் தம்முடைய சுற்றுப் பிரயாணத்தின்போது அயோவா என்ற ஊரில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை விருந்தாளிகளுக்குச் சொன்னார் :

"என் பிரசங்கம் ஒன்று அயோவாவில் நடந்தது. அது முடிந்தவுடனே, ஒரு குடியானவன் என்னிடம் வந்தான். பிரிட்டனைப்பற்றி அமெரிக்கா புரிந்துகொள்ள என் பிரசங்கங்கள் பேருதவி புரிவதாகப் புகழ்ந்தான். எப்படி? என்று நான் கேட்டேன். அவன் சொன்னான் : 'உங்கள் பிரசங்கங்களைக் கேட்பதற்கு முந்தியெல்லாம், பிரிட்டனைப் பற்றி நாங்கள் பயந்துகொண்டிருந்தோம். அமெரிக்காவை பிரிட்டன் சகல விதத்திலும் தோற்கடித்து விடுமென்று நினைத்துக் கொண்டிருந்தோம். இப்போது, உங்கள் பிரசங்கங்களைக் கேட்ட பிறகு, அந்தப் பயமெல்லாம் பறந்து போய்விட்டது' என்று சொன்னான்" என்று ஹாலிபாக்ஸ் பிரபு கதையை முடித்தார்.

—சண்டே மார்கர், நியூயார்க்

ராஜாஜி

எழுதிய

1. * கதை

ராஜாஜி எழுதிய சிறுகதைத் தொகுதி. 16 கதைகள் மூன்ரும் பதிப்பு கலிகோ பைண்டு

2. கட்டுரைகள் 4-8

24 கட்டுரைகள் அடங்கியது கலிகோ பைண்டு

3. * அறநூல்கள்

உபநிஷதப் பலகணி, கண்ணன் காட்டிய வழி, மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை மூன்றும் அடங்கியது. கலிகோ பைண்டு

தபால் செலவு தனி

புதுமைப் பதிப்பகம்
லிமிடெட்
காரைக்குடி

* இந்தக் குறியிட்ட நூல்கள் அச்சிலிருக்கிறது. செப்டம்பர் 20உயில் வெளிவரும்.

ஆஸ்த்மா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸ்ஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நிடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணரலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணரல் (கஷ்ட சுவாசம்) மூதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல், இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம்; வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹ்ரி" காம்பௌண்ட் (சிவப்பு பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனுபஜார்
2. அமிருத் ரத்னகர் பார்மஸி
   கோவிந்தப்ப நாயக்கன் தெரு

திருவாங்கூர் :
K.C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

IODISAL

அயோடிசால்

-:(ரத்த சுத்தி மருந்து):-

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்ட சூலைகள், வாதம், வாயு, மேக ரோகங்களையும் தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, திரேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து மலப்ரவிர்த்தியை ஒழுங்காக்கி ரத்தவிருத்தியை உண்டாக்கும்

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

THE SOUTH INDIAN Mfg. Co., MADURA

ஏஜண்டுகள் :

சென்னை :—

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், 155, நைனியப்ப நாயக்கன் தெரு, பி.டி. மதராஸ்

மைசூர் சமஸ்தானம் :— சேஷ மஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி

நைஜாம் சமஸ்தானம்:— சிதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ் ஸகந்திராபாத்

Use

KESHA-MITRA

HAIR-OIL

(VEGETABLE)

A LITTLE's ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த

நீண்ட கேசத்திற்கு

கேச மித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை அறவே போக்குகிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்

11-12, முதல் லைன் பீச் : : சென்னை

புதிய புத்தகங்கள்

புதிய சீனு: வெ. சாமிநாத சர்மா 6 8

அன்பையும் அறத்தையுமே லட்சியங்களாகக்கொண்டு, புத்தர்பிரானின் போதனைகளை நடைமுறையில் கடைப்பிடித்து ஒழுகியவர்கள் சீனர்கள். அத்தகையவர்கள் இன்று வீழ்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் என்ன? அதன் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? சீனுவின் ஆரம்பகால சரித்திரத்திலிருந்து புதிய சீனுவின் தோற்றம்வரை எல்லா விபரங்களும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

பிளேட்டோவின் அரசியல்: வெ. சாமிநாத சர்மா 6 0

இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகு தெளிவாக சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்க வேண்டும்? நீதி வழங்குதல் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்களை பிளேட்டோ தெளிவாக விளக்கியிருக்கிறார்.

காய்கறித் தோட்டம்: மு. அருணசலம் 5 0

தோட்டம் போடுவது எப்படி, விதை விதைப்பது எப்படி, எரு இடுவது எப்படி, காய்கறிகளிலுள்ள உணவுச் சத்து யாது, என்ற விஷயங்களை அறிய வேண்டுமா? கத்தரி வகை, அவரை வகை, கீரை வகை, பூசணி வகை, கிழங்கு வகை, சீமைக் காய்கறி வகை, பயிரிடக் கற்றுக்கொள்ள வேண்டுமா? இதற்கேற்ற புத்தகம்.

பதினெரு கட்டுரைகள்: ம. ராதாகிருஷ்ண பிள்ளை 1 12

சமயம், சமூகம், கல்வி, விஞ்ஞான வளர்ச்சி குறித்த இலக்கிய, ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

மானிட ஜாதியின் சுதந்திரம்: இங்கர்ஸால் 1 0

அறியாமையை ஒழித்து மனித சமூகத்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்க அரும்பாடு பட்டவர் இங்கர்ஸால். அவருடைய விறுவிறுப்பான பிரசங்கங்களில் ஒன்றே இப்புத்தகம்.

சூரிய நமஸ்காரம்: டி. வி. திருவேதி 1 0

சூரிய நமஸ்கார முறைகளையும், மந்திரங்களையும் சித்திர விளக்கங்களோடு இந்நூல் விவரிக்கிறது.

காந்தியும் ஜவஹரும்: வெ. சாமிநாத சர்மா 0 8

இன்று இந்திய அரசியல் உலகில் முக்கிய ஸ்தானம் வகிப்பவர்கள் காந்திஜியும், ஜவஹருமே ஆவர். இருவர் வாழ்க்கையிலுமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இந்நூலில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

மாணவருக்கு: காந்திஜி 6 0

மாணவருக்கென காந்தியடிகள் அவ்வப்பொழுது எழுதியதும் பேசியதும். அ. லெ. நடராஜன், வெ. ராமசாமி தமிழாக்கியது. திருத்திய இரண்டாம் பதிப்பு. கையால் செய்த காகிதத்தில் அச்சிடப் பெறுகிறது.

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் சென்னை : மதுரை : கோயமுத்தூர்

இந்தியத் தேயிலையில்

மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்



தந்தி : "ராஜா"

போன் : 218-A



துணிகள்பெட்டி அநேகம

காலியாய் இருக்

துணிகள் பெட்டி அநேகமாய காலியாய் இருக்
கிறது துணியோ அதிக விலை, கிடைப்பதும்
கஷ்டம். ஆனலும் யுத்தகால வாழ்க்கையின் கஷ்டங்
களில் இது ஒன்று. ஆகாரவகைகளும் எரிதுரும்பு
களும இன்னும் கிராக்கியாய் இருக்கின்றன. வாழ்க்கை
பூராவும் பிரசனைகளாக இருக்கின்றன அது
தான் வெற்றியின் விலை. ஆனல் தற்கால கஷடஙகளின்
பயனுக வாழவே முடியாது எனறு
தோன்றும் சமயம் உங்களை ஜீவித்திருக்க உதவுவ
தற்கு தயாராக ஒரு நேசன் இருக்கிறுன்.
அதுதான் டீ. இன்னுமும டீ நியாயமான விலையில்
எப்பொழுது வேண்டுமானுலும் கிடைக்கிறது.
இந்த கஷ்ட காலங்களில் டீ ஒரு ஆச்சரியிக்கத்
தக்க சுகத்தை கொடுக்கிறது. கெடுதலன்னியில
ளைர்த்துகிறது. அதன் விசேஷ குணங்களினுல
பிரசினைகள் அதிக கஷ்டமில்லாமலும் கவலைகள மிக
முக்கியமற்றவையாயும் மாறி விடுகின்றன.

இந்தியன்

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 239 TH

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press', 115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor : Vai. Govindan. Editor : T. J. Ranganathan